# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 21 புதன்கிழமை (07.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 011




09 முதலீட்டை நிறுத்தியது மத்திய அரசு



14 தப்பு ஒடுக்கப்பட்ட மக்களின் ஆயுதம்



25 பங்களாதேஷுக்கு மீட்சியில்லா அடி

# வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்க அரசு கடும் எதிர்ப்பு

## காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவும் முரண்டு பிடிப்பு

கொழும்பு, டிசெம்பர் 7

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைக்க அரச தரப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. கூட்டமைப்புடன் நேற்று நடத்திய பேச்சில் தமது எதிர்ப்பைத் தெரிவித்த அரச தரப்பினர், மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கோரும் கூட்டமைப்பின் யோசனைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவுக்கு தமது தரப்புப் பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை வழங்க கூட்டமைப்பு திட்டவட்டமாக மறுத்துவிட்ட நிலையில் வடக்கு - கிழக்கு இணைப்பு, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பிலான தனது எதிர்ப்பை ஆணித்தரமாக அரசு நேற்றுப் பதிவு செய்துள்ளது.

"கூட்டமைப்பால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட தீர்வு யோசனைகளில் மூன்று விடயங்களில் தமக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்று அரச தரப்பினர் நேற்றுத் தெரிவித்தனர்" என்று, நேற்றைய பேச்சுப் பற்றி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அரச தரப்பால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அதன் இறுதி முடிவாகத் தான் கொள்ளவில்லை என்றும், அரசு முரண்படும் மூன்று யோசனைகளும் கடந்த காலத் தீர்வு முயற்சிகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட்டவைதான் என்பதைத் தாம் அமைச்சர் பீரிஸ் தலைமையிலான அரச தரப்பினருக்கு எடுத்து விளக்கியுள்ளனர் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

பக் 25

# மாநகர முதல்வர் மீது மோசடிக் குற்றச்சாட்டு சொந்தக் கட்சியின் உறுப்பினரே சுமத்துகிறார்

## பல லட்சங்களைக் கையாடினார் என்றும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ். மாநகர முதல்வர் பல லட்சம் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டார் என்று அவரது கட்சியைச் சேர்ந்த மாநகர உறுப்பினரான ம.மங்களநேசன் குற்றச்சாட்டைக் கிளப்பியுள்ளார். இது குறித்துப் பதிலளிப்பதை மாநகர முதல்வர் நேற்றுத் தவிர்த்தார். பல தடவைகள் அவரைத் தொடர்புகொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு அவர் செவி சாய்க்கவில்லை.

"யாழ். மாநகர முதல்வர் பல லட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்டார் என்பதை நான் இப்போதுதான் நம்பகரமாகத் தெரிந்து

பக் 25

# இரவல் உரையையே ஐ.நாவில் படித்தார் ஜனாதிபதி மஹிந்த

லண்டன், டிசெ. 7

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை பிரிட்டனில் இருக்கும் ஒரு தொழில் ரீதியான பரப்புரை (லொபியிங்) நிறுவனம் எழுதிக் கொடுத்தது என்று பிரபல பிரிட்டிஷ் செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது. இதனை ஜனாதிபதியின் பேச்சாளர் மறுத்துள்ளார்.

இலங்கையின் மதிப்பை மேற்கு நாடுகளில் நிமிர்த்தும் நோக்கத்துடன் பரப்புரை நிறுவனங்களை இலங்கை அரசு பணிக்கு அமர்த்தியுள்ளது என்று தொடர்ச்சியாகச் செய்திகள் வெளிவந்தன.

பக் 27

# பொன்சேகாவுக்கு புகழ் தேடித் தந்தது இலங்கை அரசே

கொழும்பு, டிசெ.7

"பொன்சேகாவை சிறையில் அடைத்து உலகளாவிய ரீதியில் அவருக்கு மாபெரும் வீரன் என்ற அந்தஸ்தை தேடிக்கொடுத்துள்ள அரசு, பொதுமன்னிப்பு குறித்து

பக் 27

# கடத்தப்பட்ட தமிழ் வர்த்தகர் எங்கே? மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம்

## கொழும்பில் போக்குவரத்து பாதிப்பு, பொலிஸார் குவிப்பு



கொழும்பு, டிசெ.7

கொழும்பு, கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் தமிழ் வர்த்தகர் வெள்ளை வானில் கடத்தப்பட்டமையை எதிர்த்து அப்பிரதேச மக்கள் இரண்டாவது நாளாகவும் நேற்று ரயர்களை நடுவீதியில் போட்டு எரித்து பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன், பாதுகாப்பில் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கொட்டாஞ்சேனை, ஜெம்பட்டா வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகளால்

பக் 27

# மனித உரிமைகள் தினத்தில் யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்

## காணாமற்போனோர், அரசியல் கைதிகள் விவகாரத்தை வலியுறுத்தி

யாழ்ப்பாணம், டிசெ.7

காணாமற்போனோர் தேடித் தரக் கோரியும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். நகரில் பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது.

"இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து ஏதாவது செய்ய முடியுமா என்று பார்ப்பதே எமது நோக்கம்" என்று தெரிவித்தனர் ஏற்பாட்டாளர்கள்.

மனித உரிமைகள் தினத்தில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலை 10.30 மணிக்கு யாழ். பஸ் நிலை

பக் 27

# யாழ்.தொண்டர் ஆசிரியருக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

## மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்.மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது தடவையாகவும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 76 தொண்டர் ஆசிரியர்கள் நேற்று

பக் 25

# உடல், உளப் பாதிப்புக்கு உள்ளான ஆசிரியர்களுக்கு விரைவில் ஓய்வு

## வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.7

உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களைச் சேவையில் இருந்து ஓய்வு பெறச் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின்போது முடிவு எட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பாகக் கலந்து

பக் 25

# பெரும்பான்மையின இளைஞர்கள் நால்வருக்காக தமிழ் இளைஞனை நையப்புடைத்தது இராணுவம்

யாழ்ப்பாணம், டிசெ.7

கிளிநொச்சி, இரணைமடுச் சந்தியில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றில் பொருள் வாங்க வந்தவர்களுக்கும் கடைக்காரருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் இராணுவம் தலையிட்டு இளைஞர் ஒருவரை நையப்புடைத்தது. இதனால் நேற்றிரவு அந்தப் பகுதியில் பெரும் பதற்றமும் பயப்பீதியும் நிலவியது.

"சுமார் 10 இராணுவத்தினர் சேர்ந்து ஒரு இளைஞனை ஆடைகள் கிழியக் கிழிய மனிதாபிமானம் இன்றி படுமோசமாக நையப்புடைத்தனர்" என்று சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். பாதுகாப்புக் கருதி தனது பெயர் விவரத்தை வெளியிட

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# இரணைமடுவில் விமானநிலையம் அமைப்பதால் குளத்துக்குப் பாதிப்பு

## சபையில் சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.7

இரணைமடுக் குளத்துக்கு அருகில் உள்ள ஓடு பாதையை விமானநிலையமாக அபிவிருத்தி செய்வது இரணைமடுக்குளத்திலிருந்து மேற்கொள்ளப்படும் நீர் விநியோகத்திட்டத்துக்குப் பெரும் பாதிப்பை எற்படுத்தும் என்று யாழ்.மாவட்டத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சுட்டிக்காட்டினார்.

நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் அருகிலேயே விமான நிலையமும் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீரைக் கொண்டு செல்வதற்காக இரண்டாயிரம் கோடி ரூபா செலவில் இரணைமடு குளம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. அதேவேளை அதன் அருகிலேயே விமான நிலையமும் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

''எதிர்காலத்தில் இந்த விமான நிலையத்தில் விமானங்கள் தரை இறங்கும்போது சில அதிர்வுகள் ஏற்படும். இதனால் குளக்கட்டுமானங்களில் வெடிப்பு ஏற்படும் அபாயமும் உண்டு. எனவே இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் மீள்பரிசீலனை செய்யவேண்டும்''-என்றார் சிறீதரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இரணைமடு குளமும்-அக்கராயன் குளமும் திருத்தி அமைக்கப்படுகின்றன இதனால் இந்தப்பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த 60 வீதமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நீர் வழங்கப்படாமல் விவசாயம் தடைப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தொடர்ச்சியாக இந்தப் பிரதேசத்தில் ஏற்படும் மழை வெள்ளம் காரணமாகப் பல விவசாய மற்றும் குடிதண்ணீர்க் குளங்கள் உடைப்பெடுத்து மூடப்பட்டுள்ளன. அவற்றை சீரமைக்க உதவிகள் வழங்கப்பட வேண்டும்

தமது வாழ்வை மீள் கட்டி எழுப்ப விவசாயிகள் வங்கிக் கடன் பெற்றுள்ளனர். எனினும் தொடர்ச்சியாக ஏற்பட்ட பாதிப்புக்களினால் அந்தக் கடன்களை திரும்பச் செலுத்த அவர்களால் முடியவில்லை. ஆனால், வங்கிகள் வட்டியைப் பெறுவதில் முனைப்பாக இருக்கின்றன. இந்த விடயத்தில் அமைச்சர் தலையிட்டு வட்டியைத் தள்ளுபடி செய்யவோ அல்லது கடனை திரும்பச் செலுத்தப்படாத மானியமாக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார். (உ-02)

# வன்னிப் பகுதி ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதி

யாழ்ப்பாணம், டிசெ.7

ஆசிரியர்கள் தங்கியிருந்து கற்பித்தலை மேற்கொள்வதற்கு வசதியாக முன்னுரிமை அடிப்படையில் வன்னிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் ஆசிரிய விடுதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற வடமாகாணகல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் விடுதிகள் தேவைப்படும் என அடையாளம் காணப்படும் பாடசாலைகளுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக வன்னி வலயங்களின் பாடசாலைகளுக்கு இந்த விடயத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்கள் அப்பிரதேசப் பாடசாலைகளுக்குச் செல்வதை ஊக்கப்படுத்த முடியும். (ஒ-14)




அனைத்து மாவட்டங்களிலும் வானிலை மேகமூட்டத்துடன் காணப்படும் சாத்தியம்

# கியூடெக் முன்னாள் பணிப்பாளர் இமானுவேலின் இறுதிச் சடங்கு இன்று

கரித்தாஸ் - கியூடெக் மனித முன்னேற்ற நடுநிலைய முன்னாள் இயக்குநர் அமரர் அருட்பணி மரியாம்பிள்ளை இம்மானுவேல் பயஸ் அடிகளார் தமது 79 ஆவது வயதில் குருத்துவப் பணி வாழ்வில் 50ஆவது ஆண்டு நிறைவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 4ஆம் திகதி இயற்கை மரணமடைந்துவிட்டார்.

அமரர் அருட்பணி. பயஸ் அடிகளார் முதிர்ந்த அனுபவச் செறிவுள்ளவராக, செழுமையான ஒரு சந்ததியின் பிரதிநிதியாக, கத்தோலிக்க விசுவாசத்தின் சாட்சியாக, குருத்துவப்பணி வாழ்வின் முன்மாதிரியாக, மனிதம் போற்றும் மனிதனாக கருதப் படக்கூடியவர். அடிகளாரின் புகழுடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் திருப்பலிபூசையின்பின்னர் புனிதசொஞ்சேஞ்சி மாத சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

# தனியார் பல்கலை சட்டமூலத்தை முடிந்தால் நிறைவேற்றிக் காட்டுக!

## அமைச்சர் எஸ்.பிக்கு அனைத்துப் பல்கலை ஒன்றியம் சவால்

தனியார் பல்கலைக்கழகங்களை அமைத்தே தீருவேன் என சூளுரைக்கும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பல்கலைக்கழகம் அமைக்கும் அந்த மாபெரும் சட்டமூலத்தை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பித்துக் காட்டவேண்டும். அதனைத் தோற்கடிப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

- இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்குப் பகிரங்கமாக சவால் விடுத்துள்ளது அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

கல்வியை வியாபாரம் செய்யும் அரசின் ஒப்பந்தக்காரராகச் செயற்படும் உயர்கல்வி அமைச்சர் கடந்த வருடமும் இதே பல்லவியை நாடாளுமன்றில் பாடினார் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம் என்றும் அந்த ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசின் தனியார் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டத்துக்கு எதிராக விரைவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கும் என்று எச்சரித்துள்ள பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம், அன்றிலிருந்து உயர்கல்வி அமைச்சர் ஆட்டம் காண ஆரம்பிப்பார் என்றும் எச்சரித்துள்ளது.

யார் தலைகீழாக நின்றாலும் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைத்தே தீருவோம் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் திட்டவட்டமாக அறிவித்தார்.

உயர்கல்வி அமைச்சரின் உறுதியான கருத்துக்குப் பதிலடி கொடுத்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கும் திட்டத்திற்கான சட்டமூலத்தை அடுத்துவரும் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பேன் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.

கல்வியை வியாபாரம்செய்து பிழைப்பு நடத்தும் அரசின் ஒப்பந்தக்காரராகச் செயற்படும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, இதே பல்லவியை கடந்த வருடமும் இதே பாணியில் பாடியிருந்தார்.

கடந்த வருடத்தின் வரவு-செலவுத்திட்ட விவாதம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்பதை உயர்கல்வி அமைச்சுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

அன்று அவர் இந்த வருடத்துக்குள் குறித்த சட்டமூலத்தை கொண்டுவருவேன் என சூளுரைத்தார். மாணவர்களின் எதிர்ப்பும், நாட்டு மக்களின் அழுத்தமும் அவரின் முயற்சியை தோற்கடிக்கச் செய்தன. சட்டமூலத்தை கொண்டுவரமுடியாமல் போனதற்கு அவர் பல்வேறு காரணங்களைக் கூறினாலும், நாம் கூறியதே உண்மை என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

வரலாற்றில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் உட்பட கல்வி சமூகத்தினரின் எதிர்ப்பால் விமர்சனங்களை அதிகளவில் தேடிக் கொண்ட உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. ஆவார்.

கல்வி அமைச்சராக இன்னும் பல வருடங்களுக்கு எஸ்.பி. திஸாநாயக்க செயற்படவேண்டும் என எந்நேரமும் நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வியை வியாபாரம்செய்வது உயர்கல்வி அமைச்சரின் தனிப்பட்ட நோக்கம் அல்ல. அது மஹிந்த அரசின் கொள்கை. எனவே, இவற்றிற்கு எதிராக மாணவர்கள் போராடி வெற்றி பெறவேண்டுமானால், அதிக விமர்சனங்களுக்கு உள்ளான ஒருவர் உயர்கல்வி அமைச்சராக இருத்தல்வேண்டும். அதற்கு மிகவும் பொருத்தமானவர் எஸ்.பி.தான்.

கடந்தகாலங்களில் உயர்கல்வி அமைச்சர் பல அர்த்தமற்ற கதைகளைக் கூறிவந்தார். அதற்கு நாம் பதிலடி கொடுக்கவில்லை. கல்வியை வியாபாரம் செய்யும் அரசின் நோக்கத்தை முறியடிக்க சிரேஷ்ட பிரஜைகளும், மக்கள் அமைப்புகளும் முன்வரவேண்டும். தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கும் சட்டமூலத்திற்கு எதிராகப் போராடுவதற்கு நாம் தயார்.

எமது ஆர்ப்பாட்டங்களைக் கண்டு அஞ்சிப்போன உயர்கல்வி அமைச்சர் பகிடிவதை, ஒழுக்கமின்மை போன்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தண்டனை வழங்குகின்றார்.

உயர்கல்வி அமைச்சு இராணுவப் பயிற்சி வழங்கிய முதலாம் வருட பல்கலைக்கழக மாணவர்களும் எம்முடன் இணைந்துப் போராடுவதற்குத் தயாராகவே உள்ளனர். அவர்களையும் இணைத்துக்கொண்டு மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்போம்.

இராணுவப் பயிற்சி வழங்கப்பட்ட மாணவர்கள் வீதியில் இறங்கிப் போராடும்போது உயர்கல்வி அமைச்சர் நடுங்க ஆரம்பிப்பார்.

எனவே, விரைவில் உயர்கல்வி அமைச்சர் தனியார் பல்கலைக்கழகம் அமைக்கும் அந்த மாபெரும் சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவேண்டும். அதனை தோற்கடிப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிகழ்வுகள்

**ஒளிவிழா**

யாழ்.குடத்தனை கரையூர் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளிவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் மு.கதிர்காமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மணற்காடு புனித அந்தோனியார் தேவாலயத்தின் அருட்தந்தை லெஸ்லி அன்ரனி கலந்து கொள்வார். (த-313)

**பொதுக்கூட்டம்**

வடமாகாண அரச சேவை பட்டதாரி அலுவலர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டப் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கலந்துரை யாடல் மண்டபத்தில் நடைபெறும். சங்கத்தின் தலைவர் க.கஜீதன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-313)

**சேவை நிலையத் திறப்பு விழா**

மக்கள் வங்கியின் அளவெட்டி சேவை நிலையத் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்வார். (த-313)

**பொலிஸ் - வர்த்தகர் கலந்துரையாடல்**

யாழ்ப்பான வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள் தொடர்பான பொலிஸ் உயர் அதிகாரிகளு டனான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் அனை வரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-313)

**நூல் வெளியீடு**

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் பிற்பகல் 2மணிக்கு ஸ்ரீ சிவ மகா கும்பாபத்ததி (33 கும்பபூஜா) என்ற நூல் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது. பிரம்ம ஸ்ரீ த. சிவானந்த சர்மா தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டு விழாவில் சிவஸ்ரீ தா.மகாதேவன் குருக்கள் இந்த நூலை வெளியிட்டு வைப்பார். (த-26)

**பாடசாலையில் ஒளி விழா**

இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையின் ஒளி விழா காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் உப அதிபர் அருட்பணி ரி.எ.றெஜிகுமார் கலந்து கொள்வார். (த-313)

**பரிசளிப்பு விழா**

யாழ்.நீர்வேலி சி.சி.தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்டக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் கலந்து கொள்ளவுள்ளார். (323)

**சேவைநலன் பாராட்டு**

மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய திருமதி வசந்தாதேவி வைகுந்தநாதனுக்கு பாடசாலை சமூகத்தினரால் சேவை நலன் பாராட்டு விழா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தனும் சிறப்பு விருந்தினராக கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜாவும் கலந்து கொள்வார். (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சியில் உட்கட்சி பூசல் பூதாகரம்; தலைமைப் போட்டியால் பிளவுபடும் அபாயம்

கொழும்பு, டிசெ.7

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவிக்குப் போட்டியிடத் தயாரென அதன் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய துள்ள நிலையில் அக்கட்சியிலிருந்த உட்கட்சிப்பூசல் நேற்று மேலும் தீவிரமடைந்தது.

கட்சியின் செயற்குழு இன்று கூடுகின்ற அதேவேளை, நேற்று நாடாளுமன்றத்தில் ஒன்று கூடிய கரு ஜயசூரிய ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைமைப்பதவியில் உடனடி மாற்றங்களைச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதென்று தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிலும் செயற்குழுவிலும் 75 சதவீதமான ஆதரவு தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருப்பதாகக் கருதப்படுவதால் ரணிலின் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களை சமரசப்படுத்துவதில் கரு ஆதரவு உறுப்பினர்கள் களமிறங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

''தலைமைத்துவ மாற்றம் உடனடியாகத் தேவை என்பதனை வலியுறுத்தியிருக்கிறோம். இது நடக்காவிட்டால் கட்சி ஒன்றுபட்டதாக இருக்காதென்று உறுதியாகக் கூறுகிறோம்'' என்று தற்போதைய தலைமையுடன் அதிருப்தி கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றிரவு எம்மிடம் கருத்து வெளியிட்ட ரணில் சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஐ.தே.க.தலைமைப் பதவியிலிருந்து ரணிலை அகற்றுவது சாத்தியமற்றதென்றும் நாடாளுமன்ற மற்றும் செயற்குழுவில் ரணிலுக்கே பெரும்பான்மை ஆதரவு உள்ளதென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, தலைமைப் பதவி விவகாரம் குறித்து இன்று நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதும் இன்றைய கூட்டத்தில் அதுபற்றி ஆராயப்படமாட்டாதென்று ஐ.தே.க. உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் தலைமைப் பதவிக்காக போட்டியிடத் தயார் என பிரதித்தலைவர் கரு ஜயசூரிய அறிவித்தபின்னரும் கட்சித்தலைமை உரிய நடவடிக்கைகளை எடுக்காதவிடத்து மாற்றுவழிகள் குறித்து சிந்திக்கவேண்டிய நிலை உருவாகியிருப்பதாக ஐ.தே.க. அதிருப்தியாளர்கள் நேற்று கருத்து வெளியிட்டனர்.

(ஒ-சி)



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான கரு ஜயசூரியவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்தநிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அனோமா பொன்சேகா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# கடையில் நகைகளைத் திருடிய ஒருகாலை இழந்த நபர்!

நகைக்கடை ஒன்றில் சங்கிலி, காப்பு உள்ளிட்ட பெறுமதியான நகைகளைத் திருடிய கால் ஒன்றை இழந்த கைதடி மேற்கைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு. நேற்றைய தினம் யாழ். நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதவான் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பல இடங்களிலும் இடம்பெற்ற கொள்ளை, திருட்டுச் சம்பவங்களிலும் இந்த நபரும் தொடர்பு பட்டுள்ளார். என சந்தேகிக்கப்படுகிறது அது பற்றிய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4)

# மோதல் முற்றிய நிலையில் இன்று கூடுகிறது ஐ.தே.க. செயற்குழு

கொழும்பு, டிசெ.7

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடத் தயாரென அக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய அறிவித்திருக்கும் பரபரப்பான சூழ்நிலையில் ஐ.தே.க. செயற்குழுக் கூட்டம் இன்று சிறிகொத்தாவில் நடைபெறுகிறது.

ஐ.தே.கட்சி செயற்குழுவில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையானோர் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் விசுவாசிகள் என்பதால் இன்று நடைபெறும் கூட்டத்தில் தலைமைப் பதவி விவகாரம் குறித்து முக்கியமான பேச்சு நடத்தப்பட வாய்ப்பில்லையென ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில், தலைமைப் பதவிக்குத் தயாரென்று பிரதித் தலைவர் கரு ஜயசூரிய அறிவித்த கையோடு அவருக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கான முன்னேற்பாட்டு செயற்பாடுகளில் தீவிரமாக இறங்கியிருப்பதாக அறியமுடிகின்றது.

இதனடிப்படையில் கட்சியில் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தீவிர ஆதரவாளர்களெனக் கருதப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கரு ஜயசூரிய தரப்பு தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தி ஆதரவைத் திரட்டும் முயற்சியில் இறங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான கரு ஜயசூரியவின் சம்மதம், புதிய உத்வேகத்தை அளித்திருப்பதால், இன்றைய செயற்குழுக் கூட்டத்தில் அதனை வலியுறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அங்கத்தவரொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

(ஒ-சி)

# முள்ளியவளையில் இளைஞன் கடத்தல்

முல்லைத்தீவு, டிசெ.7

முல்லைத்தீவு முள்ளியவளை காட்டுவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த ஜி.ரதன் (வயது-23) என்ற இளைஞன் வெள்ளைவானில் வந்த கும்பல் ஒன்றால் கடத்திச் செல்லப்பட்டார் என்று அவரது உறவினர்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞனின் வீட்டுக்கு நேற்று இரவு 7 மணியளவில் சிவில் உடுப்பில் சென்ற நால்வர் குறித்த நபரின் தாயிடம் தாங்கள் புலனாய்வினர் எனவும் உங்கள் மகனை விசாரனைக்கு அழைத்துச் செல்கிறோம் எனவும் கூறி கூட்டிச் சென்றுள்ளனர் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-323)

# கோயிலில் திருட்டு முயற்சி இராணுவத்தால் முறியடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

நல்லூர் வடக்கு கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் நேற்று இராணுவத்தினரிடம் வசமாக மாட்டினார். இருவர் தப்பிச் சென்று விட்டனர்.

சம்பவம் நேற்று இரவு 10 மணியளவில் இடம்பெற்றது. திருட்டு முயற்சியில் ஈடுபட்ட மூவர் கைகளில் இரும்புக் கம்பியுடன் கோயிலின் கதவை உடைத்துக் கொண்டிருந்ததை அந்தப் பகுதியால் ரோந்து சென்ற இராணுவத்தினர் கண்டுள்ளனர். திருடர்களைப் பிடிக்க முயன்றவேளை இரண்டுபேர் தப்பிவிட ஒருவர் மட்டும் சிக்கிக் கொண்டார்.

பிடிபட்ட நபர் பின்னர் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.இதேவேளை மேற்குறிப்பிட்ட கோயிலில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொடிக்கம்பத்தின் கீழுள்ள விநாயகர் கற்சிலை திருட்டுப் போயிருந்தது. (உ-323)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் மரணம்

காய்யச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது நேற்று மரணமானார்.

காய்ச்சல் காரணமாக அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று மரணமானார்.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச்சேர்ந்த வைரமுத்து தெய்வேந்திரம் (வயது-52) என்பவரே மரணமானவர் ஆவார். சடலம் வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# அரசியல் பேச்சுக்களை சீர்குலைக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முயற்சி

**ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் குற்றச்சாட்டு**

கொழும்பு,டிசெ.7

அரசியல் பேச்சுக்களை சீர்குலைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய முயற்சியில் இறங்கியுள்ளதாக ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும், அரசதரப்பு பேச்சுக் குழுவின் அங்கம் வகிப்பவருமான சஜின் வாஸ் குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் தீர்வை எட்டுவதற்கு இலங்கை அரசு இடையூறை ஏற்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு எந்த அடிப்படையும் அற்றது.

தமிழ்பேசும் மக்களை நீண்ட காலத்துக்கு ஏமாற்ற முடியாது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர வேண்டும்.

இப்போது எல்லோரும் அனுபவிக்கின்ற அமைதி, பயங்கரவாதத்தை அழித்ததன் மூலமே பெறப்பட்டது. ஏனைய சமூகங்களுடன் ஒரு தீர்வை எட்டுவதற்கு கூட்டமைப்பு தலைமை உண்மையான முயற்சியில் இறங்க வேண்டும்.

நிரந்தர அமைதியின் மூலம் தமிழ் மக்களுக்கு நன்மைகள் விளையும் ஒரு சூழலை ஏற்படுத்தஅவர்கள்முன்வரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முதலைக் கண்ணீர் வடித்தபோதும், வடக்கில் பொருளாதாரம் 23 வீத வளர்ச்சியை எட்டியுள்ளது.

இலங்கை அரசு போரில் உறுதியான வெற்றியைப் பெற்றுள்ள போதும், அரசியல் தீர்வு ஒன்றையே விரும்புகிறது.

அரசியல் தீர்வு அவசியமானது என்று நம்புவதால் தான், அதனை எட்டுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்துள்ளது.



இதற்கு ஏனைய தமிழ்க் கட்சிகள் வரவேற்றுள்ள போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் ஆறு மாத காலத்திற்குள் நிரந்தரத் தீர்வு எட்டப்படும் என்ற அச்சம் காரணமாகவே இதில் அங்கம் வகிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயங்குகின்றது- என்றார். (ஐ)

# காய்ச்சலுக்கு 15 நாள் சிகிச்சை பெற்ற 7 மாதக் குழந்தை நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 7 மாதக்குழந்தை சிகிச்சை பயனளிக்காது யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மரணமாகியுள்ளது.

அராலி கிழக்கு, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த குகனேஸ்வரன் சிவசுகன்யா என்ற பெண் குழந்தையே இவ்வாறு மரணமாகியுள்ளது.

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதனால் இந்தக் குழந்தை கடந்த 3ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது. குழந்தையை பரிசோதனை செய்த போது அது நெருப்புக்காய்ச்சல் என கண்டறியப்பட்டு அதற்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நிலையில் குழந்தை நேற்று இறந்துள்ளது என குழந்தையின் உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே கடந்த மாதம் சுமார் 15 நாள் வரை வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட இக்குழந்தையை கடந்த 30 ஆம் திகதி சுகமடைந்துள்ளதனால் வீட்டுக்கு கொண்டு சென்றோம், காய்ச்சல் மீண்டும் ஏற்பட்டதனால் கடந்த 3 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதித்தோம் என உறவினர்கள் மேலும் தெரிவித்தனர்.

இக்குழந்தையின் இறப்புத் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்தனர். குழந்தையின் உடற்கூற்று பரிசோதனையின் போது குழந்தை நியூமோனியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு இறந்துள்ளது என்பது தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி மன்னாரில் நாளை மௌன ஊர்வலம்

மன்னார், டிசெ.7

மன்னார் மாவட்ட மீனவர்களைச் சங்குத் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரியும்,மன்னார் மாவட்டத்தில் சிலிண்டர் தொழிலை முற்று முழுதாக தடை செய்யக்கோரியும் நாளை 8ஆம் திகதி வியாழக்கிழமை மீனவர்கள் மன்னார் மாவட்டத்தில் மௌன ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டு மீனவர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தவுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

-மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச்சங்கச் சமாசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீனவர் சங்கங்களுடன் இடம்பெற்ற கூட்டத்தினைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி கடல்தொழில் திணைக்களத்தாலும், அரச தரப்பாலும் தனியான பாஸ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறிய போதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.



இன்று வரை கடற்படையினர் குறித்த சங்கு,அட்டை பிடிப்பதற்கான அனுமதியினை வழங்கவில்லை. மேலும் சிலர் சிலிண்டர் மூலம் சங்கு, அட்டை பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் சங்கு, அட்டை பிடிக்கும் தொழிலைப் பாரம்பரியமாகச் செய்து வரும் மீனவர்கள் தமது குடும்பத்தைப் பராமரிக்க முடியாமல் திண்டாடுகின்றனர்.

சிலிண்டர்மூலம் சங்கு, அட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை எமது மீனவர்களுக்குப் பெரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

எனவே இவற்றுக்குத் தீர்வாக சிலிண்டர் தொழிலைத் தடை செய்து எமது மீனவர்கள் தமது நாளாந்த வருமானத்தைத் தேடிக்கொள்ளுவதற்கு ஏதுவாக சங்குத் தொழிலுக்கு அனுமதிக்குமாறு கோரி நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் நகரில் மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது. (க-601)

# முல்லையில் துறைமுகம் அமைக்க கடற்றொழிலாளர் சங்கம் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.7

முல்லைத்தீவுப் பகுதியில் துறைமுகம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென கடற்றொழில் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.அருஸ் ஜெனிஸ்வேட் கருத்துத் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரையில் இங்குள்ள கடற்றொழிலாளர்கள் போதிய எவு தொழில் உபகரணங்கள் இன்றி உள்ளனர். முன்னர் பகல் வேளைகளில் மட்டுமே கடலில் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்து. இந்த நிலையில் இந்த மக்களின் அவல நிலையைக் கருதி நாம் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றின் ஊடாக இரவு வேளைகளில் தொழில் செய்ய அனுமதி கோரியிருந்தோம். இதனையடுத்துத் தினமும் 24 மணி நேரமும் தொழில் செய்ய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அனுமதி பெற்றுத்தந்துள்ளார்.

இருந்தபோதும் முல்லைத்தீவில் துறைமுக வசதி இல்லாததால் சிறிய வகைப்படகுகளையே தொழில்களுக்குப் பயன்படுத்த முடிகிறது. ஏனைய பெரிய படகுகளைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

பெரிய படகுகள் மூலம் தொழில் செய்யக்கூடிய வகையில் முல்லைத்தீவில் துறைமுகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும் கால்நடைகளால் பயிரழிவு

முல்லைத்தீவு, டிசெ.7

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வயல்வேலிகள் அமைக்கப் படாததன் காரணமாக நெற்பயிர்களைக் கால்நடைகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு விதைப்பு வேலைகள் ஏறகனவே நடந்து முடிந்த நெல்வயல்களில் பயிர்கள் முளைத்துக் காணப்படுகின்றன.

ஆனால் வேலிகள் அமைக்கப்படாததால் கால்நடைகள் இலகுவாக வயல்களுக்குள் சென்று பயிர்களை அழித்து வருகின்றன.

ஆனால் இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய கமக்கார அமைப்பினர் -சிலர் எதுவித நடவடிக்கையும் எடுக்காது மௌனமாக உள்ளனர். கமநல சேவை நிலையத்தினரும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

பருவ மழை தொடர்ந்து பெய்ததன் காரணமாக இந்தப் பிரதேசத்தில் விதைப்பு வேலைகளை பலமுறை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் விவசாயிகளுக்கு ஏற்பட்டது.

இதனால் கடன்பட்டு விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள் பெற்ற கடன்களை எவ்விதம் ஈடுசெய்வது என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர். (க-500)

# சுகாதார சீர்கேட்டுடன் மீன் விற்பனை

முல்லைத்தீவு, டிசெ.7

ஒட்டுசுட்டானில் சுகாதாரத்துக்குக் கேடான வகையில் மீன்கள் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு பொதுச்சந்தை இன்னமும் அமைக்கப்படாததால் வீதியோரங்களிலும், கூரையற்ற திறந்த இடங்களிலும் மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்விதம் விற்பனை செய்யப்படும் மீன்களில் ஈ மொய்த்துக் காணப்படுகின்றது. வீதியிலிருந்து எழும் தூசுகளும் இவற்றில் படிகின்றன.

வேறுவழியின்றி மக்கள் இவற்றை வாங்கிச் செல்வதைக் காண முடிகின்றது.

மேலும் வீதியோரங்களில் மீன், மரக்கறி என்பன விற்பனை செய்யப்படுவதால் விபத்துக்கள் ஏற்படும் நிலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. (க-500)

# அடம்பன் சொர்ணபுரிக் கிராமத்தவருக்கு சுயதொழிலுக்கான உபகரணங்கள் கையளிப்பு

மன்னார், டிசெ.7

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அடம்பன் சொர்ண புரிக் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு சுயதொழில்களுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் சமூக நம்பிக்கை நிதியத்தின் நிதி உதவியுடன் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதில் மொத்தமாக 70 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் தலா 35 ஆயிரம் பெறுமதியான சுயதொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அடம்பன்சொர்ண புரி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் அரச அதிபர் ஜெ.ஏ.சரத் ரவீந்திர கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் எம்.சிறிகாந்தகுமார், மாந்தை மேற்குப் பிரதேச சபைத் தலைவர் எஸ்.வரப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.




இதன்போது வருகைதந்த அதிதிகள் பயனாளிகளுக்கு உபகரணங்களை வழங்கினர்.

இதேவேளை மன்னார் சமூக நம்பிக்கை நிதியத்தால் சொர்ண புரிக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 70 வீடுகளும் மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (க-601)

# அக்கராயன் ஆரம்பப் பிரிவுக்கு ஜனவரியில் அதிபர் நியமனம்

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் ஜனவரி மாதம் புதிய அதிபரை வரவேற்கக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் உதயம் பெற்ற போதிலும் இதுவரை அதிபர் நியமிக்கப்படவில்லை.

அக்கராயன் மகாவித்தியாலய அதிபரின் கீழேயே ஆரம்ப வித்தியாலயத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் தற்போது உள்ளன. இந்த நிலையில் ஜனவரியிலிருந்து அதிபரொருவர் நிரந்தரமாக நியமிக்கப்படுவாரென கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார். இதனுடன் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் அதிபரின்றி இயங்கிவரும் ஏனைய பாடசாலைகளுக்கும் அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (க-410)

# ஒப்பந்தகாரரின் அசமந்தப் போக்கால் அரைகுறை நிலையில் வீதி வேலைகள்

துணுக்காய், டிசெ.7

மல்லாவி வைத்தியசாலைச் சந்தியில் இருந்து 3 ஆம் யூனிட் பகுதிக்குச் செல்லும் தார் வீதியின் புனரமைப்பு வேலைகள் ஒப்பந்தகாரர்களால் இழுத்தடிப்புச் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாரதிநகர் 3 ஆம் யூனிட் பகுதிக்குச் செல்லும் வீதிக்கு அரச நிதி வழங்கப்பட்டபோதும் இந்த வீதியின் வேலைகளும் ஒப்பந்தகாரர்களால் இழுத்தடிக்கப்படுகின்றன.

மேலும் நான்கு மாதங்களுக்கு மேலாக இந்த வீதியில் மூலப் பொருளான கற்கள் பறிக்கப்பட்ட நிலையில் வேலைகள் எதுவும் நடைபெற வில்லை.

எதிர்வரும் மாத அளவிலாவது இந்த வீதிகளுக்குத் தார் இட்டு இந்த வீதியைத் திருத்தும் பட்சத்தில் இதனூடாக விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தவும், மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவும், பாண்டியன் குளம் மக்களும் இதனூடாகப் பயணம் செய்யவும் முடியும்.

மேலும் மல்லாவி வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்களுக்கும் இந்த வீதி உதவி வருவதால் உரிய ஒப்பந்தகாரர்கள் மூலம் இதனைச் சீர்படுத்தி மக்களின் பாவனைக்கு விட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-415)

# நிரந்தர வைத்தியர் ஒருவரைத் தேடும் ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகம்

ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகத்துக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து தாம் நோயற்ற வாழ்வு வாழ வழி அமையுங்கள் என ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பரந்து விரிந்த ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமானதாக இருப்பது மத்திய மருந்தகம். ஆனால் அங்கே விக்கிரகம் இல்லாத கோயில் போன்று வைத்தியசாலையைக் கட்டிவிட்டு நிரந்தரமான வைத்தியர் இல்லாத நிலையே காணப்படுகின்றது. வெறுமனே தாதியர் மட்டுமே இருக்கின்ற நிலையில் இந்த வைத்தியசாலை இயங்குகின்றது. முள்ளியவளையிலிருந்து ஒரு வைத்தியர் வருவார். சில நாள்கள் சிகிச்சையளிப்பார். பின்பு சில நாள்கள்வர மாட்டார். நோய்களுக்கு மருந்தெடுக்கும் பொருட்டு அங்கே சென்றால் வைத்தியர் இல்லை என்பதைத்தான் கேட்க முடியும். அதனைக் கூறத்தான் அங்கே தாதியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறதோ என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். இந்தப் பிரதேசத்தில் உள்ள வீதிகள் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

அத்தோடு ஏனைய மாவட்டங்களைப் போன்று பஸ் வசதியும் இல்லை. அதுமட்டுமல்ல இங்குள்ள வசிப்பிடங்களோ பாதுகாப்பானவை அல்ல. கிராமங்களிலிருந்து சிலர் கைக் குழந்தைகளுடன் நடந்து வைத்தியசாலைக்குச் சென்றால் மருந்துவர் இல்லையென்ற பதில் கிடைக்கின்றது. இதனால் ஏமாற்றத்துடனும் கவலையுடனும் திரும்பிச் செல்வதைத் தவிர வேறு வழி இவர்களுக்கில்லை. வாழ் விடங்களைச் சுற்றி மழை நீர்.

இ.ராஜ்குணபால்

அத்துடன் பற்றைக் காடுகள். இரவில் நுளம்புத்தொல்லை. சுகாதார மாக வாழமுடியாத நிலை.ஆனால் நோய்களுக்கான சிகிச்சையைப் பெறுவதென்றால் பல மைல் கள் கடந்து செல்ல வேண்டிய அவலநிலை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கின் கல்வித் துறை மீது கண்ணுக்குப் புலப்படாத படிமம் ஒன்று!

★ அதிஉயர் பாதுகாப்பு வலயம் மற்றும் படையினரின் பாதுகாப்புப் போன்றவற்றைக் காரணம் காட்டி, வடக்கில் 111 பாடசாலைகளை படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். அவற்றில் பல பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்த போதிலும் அவற்றை நிறைவேற்ற இயல வில்லை.

★★ வடக்கில் கல்வி நடவடிக்கைகள் முற்றாக இராணுவ மயமாக் கப்பட்டுள்ளன. வடக்கில் இடம்பெறும் பாடசாலை நிகழ்வுகளில் கூட இரணுவத்தினர் ஆயுதங்களுடன் பிரசன்னமா கின்றனர்.

★★★ நாட்டில் வேறு எந்த இடத்திலும் இல்லாதவாறு வடபகுதியில் மட்டும் பாடசாலைகள், மற்றும் பொது நிகழ்வுகளுக்கு இராணுவத் தினருக்கு அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக் கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கல்வி அமைச்சுக்கான நிதி ஒடுக்கீடு மீதான குழு நிலை விவாதம் நடைபெற்றது. அப்போது உரை யாற்றிய போது - வடக்கின் கல்வி நிலைமை களை எடுத்துரைத்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரனும் தத்தமது உரைகளில் வரிசை யிடப்பட்ட பாதிப்புக்களை எடுத்துக் கூறினர்.

கல்வித்துறை சார்ந்த நிகழ்வுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் பாட சாலைகளின் பெயர்கள் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக மாற்றப்படு கின்றன - என்ற தகவல் களையும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன் சபையில் வெளிப்படுத்தினார்.

தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கிட்ட வேண்டிய கவனிப்புகள், வழங் கப்பட வேண்டிய வசதிகள், வாய்ப்புகள், உரிய அளவில் செய்து கொடுக் கப்படுவதில்லை என்பதனைப் புள்ளி விவரங் களுடன் நாடாளுமன்றில் தமிழ்ப் பிரதிநிதிகள் எடுத்துக் காட்டி வருகின்றார்கள். ஆனால் அவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே பயன்தராது போகின் றன.

போரால் அழிந்த வடக்கு, கிழக்குப் பகுதிகளை மீளக்கட்டமைத்தல், பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்களின் வாழ்வாதார வசதிகளை மேம்படுத் தல் ஆகியனவற்றில் உரிய, வேண்டிய அளவில் இன்னும் அரசின் கவனம் செல்லவில்லை. எனினும் தமிழர் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் தனக்கு அதீத அக்கறை உண்டு என்று அரசு காட்டிக் கொள்கிறது. அதன் பாற்பட்டு வெளிநாட்டு உதவி களைப் பெறுவதற்கும் ஆலாய்ப் பறக் கிறது. வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு முதலிடம் வழங்கினால், தமிழர் களின் அரசியல் உரிமைகளை வழங்கும் விவகாரத்தை அமுக்கி விடலாம் என்ற "தூர நோக்கும்" அரசின் அங்கங்கள் சிலவற்றிடம் உண்டு!

ஒரு நாட்டின் கல்வி வளமே, அந்த நாட்டின் வளர்ச்சிக்கும் முன் னேற்றத்துக்குமான உயிர்நாடி. இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்கள் என்றும் அதனைக் கருந்தனமாக மதித்து, தமது வாழ்க்கையில் முன்னேறியவர்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்களின் மொழியில் சிறப்புத் தகுதி பெற்றனர். அதன் பெறுபேறாக அரச அலுவலகங்கள் பலவற்றில் உயர் பதவிகளை வகித்தனர்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்காவின் ஆட்சிக்காலத்தின் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டதற்கான காரணங்களில் தமிழர் களின் உயர்பதவிகள் பறிக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்று எனக் கரு தப்பட்டது, கணிக்கப்பட்டது.

அதன் பின்னர் எழுபதுகளில், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட் சிக்காலத்தில் திட்டமிட்டுத் திணிக்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக் குக் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறை, தமிழ் மாணவர்களிடம் மனக் குமுறலை உண்டாக்கி, அரசுக்கு எதிராக வெகுண்டு எழுந்து சட்ட விரோத நடவடிக்கைகளின் பால் ஈர்த்தும், அவற்றில் தீவிரமாக ஈடுபட வைத்ததும், தமிழர்களின் கல்வி மேம்பாட்டின் மீது அரசாங்கங்களுக்கு இருந்த பொறாமையைப் புலப்படுத்துவதற்கான ஓர் உதாரணம்.

மொத்தத்தில், கொழும்பின் பேரினவாத அரசுகள், தமிழ் மாண வர்களின் கல்வித் திறனுக்கும் மேம்பாட்டுக்கும் தடை போடும் பல வகை யான நடவடிக்கைகளைக் கையில் எடுத்ததன் பிரதிபலனே, அவற்றுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்த வேண்டும் என்ற மன உந்துதலையும் ஓர்மத்தையும் தமிழ் இளைஞர்களுக்குக் கொடுத்தது என்பதனை மறுக்க இயலாது; மறக்கவும் முடியாது.

இப்போது, தமிழ்ப் பகுதிகளில் கல்வித்துறையிலும், கல்விசார் செயற் பாடுகள் மற்றும் நடவடிக்கைகளிலும் பாதுகாப்புப் படையினரின் கரங் கள் பல்வேறு வடிவங்களில் பதிக்கப்படு கின்றன. நாடாளுமன்ற உறுப் பினர் சி.ஸ்ரீதரன் சுட்டிக்காட்டி இருப்பது போன்று வடக்கில் கல்வித் துறை மீது "இராணுவ மயமாக்கல்" என்னும் படிமம், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றப்படுவது போன்று கண்ணுக்குப் புலப்படாத வகையில் படர்ந்து வருகிறது.

அரச நிர்வாக நடைமுறையில், கல்வித் துறையின் மீது படைத்தரப்பு அழுத்தங்கள் போடுவதும், தலையீடு செய்வதும் எந்த வகையில், எந்தப் பக்கத்தில் நின்று வாதிட்டாலும், வருங்காலத் தமிழ்க் குடிமக்களின் - பிரஜைகளின் - எதிர்காலத்தை ஒவ்வாத திசை நோக்கி வழிநடத்தும் என் பதில் சந்தேகமில்லை.

தெற்கில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவும் வடக்கில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுவதாக கூறிச் சமாளிக்க முயற்சிக்கும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த் தனாவின் பதில், நாடா ளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டிய-

வடக்கில் கல்வி நடவடிக்கைகள் இராணுவ மயமாக்கப்படுவதை மறு தலிக்கவில்லை என்று கொள்ள வைக்கிறது. அது நிதர்சன மானால், தமிழர் களை நோக்கி மற்றொரு பிரளயம் வந்து கொண்டி ருக்கிறது; உருட்டி விடப்படுகிறது என்றே கொள்ள வேண்டும். எது எப்படியாகுமோ......?

# அரசின் நத்தார் கொண்டாட்டங்களில் ஒருபோதும் கலந்துகொள்ள மாட்டேன்

## பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவிப்பு

கொழும்பு, டிசெ.7

இந்த ஆண்டுக்கான நத்தார் கொண்டாட் டங்களை முன்னிட்டு அரசு ஏற்பாடு செய்யும் எந்தவொரு உற்சவத்திலோ அல்லது கலாசார நிகழ்விலோ தாம் கலந்துகொள்ளப் போவ தில்லை என கொழும்பு பேராயர் கர்தினால் மல் கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள் ளார்.

மொரட்டுவ, ராவத்தாவத்தையிலுள்ள சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் சேவையாற்றி வரும் 'மிஷனரி ஒவ் சரிற்றி' சேவையைச் சேர்ந்த கன்னியாஸ்திரியொருவருக்கெதிராக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பொய்யான குற்றச்சாட்டு மேற்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே தாம் மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை மேற்கொண்டதாக பேராயர் தெரி வித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நீதிமன்றத்துடன் தொடர் புடையதெனக் கருதி, தான் இது குறித்து கருத்தேதும் வெளியிடாதிருந்த நிலையில், சம்பவம் தொடர்பாக கத்தோலிக்கத் திருச் சபை அறிக்கையெதனையும் வெளியி டாமை குறித்து வெளிநாட்டு ஊடகங்கள் சில விமர்சனம் மேற்கொண்டன. அதன் காரண மாகவே தாம் மேற்குறிப்பிட்ட வகையிலான தீர்மானத்தை மேற்கொள்ள நேர்ந்ததாகவும் பேராயர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் கடந்த மூன்றாம் திகதி இடம்பெற்ற பத்திரிகையா ளர்கள் மாநாட்டில் வைத்தே பேராயர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். (த-5)

# வடமாகாண ஆசிரியர்களின் கொடுப்பனவு பிரதேச வேறுபாடுகளின்றி வழங்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.7

பிரதேச வேறுபாடுகளின்றி வட மாகாண ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேசக் கொடுப் பனவுகள், நிலுவைகளுடன் உடனடியாக வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 19 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின்போதே இவ்வாறு தீர் மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவி னால் முன்மொழியப்பட்டபோதே இந்த விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடமாகாண ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைவாக பிரதேச வேறுபாடின்றி உடனடியாக நிலுவைகளு டன் வழங்கப்படவேண்டும் என அங்கு தெரி விக்கப்பட்டது.

இதேவேளை-

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் முறைமை மாற் றியமைக்கப்படவேண்டும் எனவும் இதன் போது வடமாகாண கல்வி அபிவிருத் திக் குழு வினால் முன்மொழியப்பட்டது.

(த-14)

# வடமாகாணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் கடன்பெறும் நடைமுறைகளை இலகுபடுத்துக

யாழ்ப்பாணம், டிசெ.7

வடமாகாணத்தில் கடமையிலுள்ள ஆசிரி யர்கள் கடன் பெறுவதற்கான நடைமுறைகள் இலகுபடுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத் தில் கடந்த மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வடமாகாணத்திலுள்ள ஆசிரியர்கள் வங்கி களில் கடன் பெறுவதற்கான சகல நடவடிக் கைகளும் இலகுபடுத்த வேண்டும். குறிப்பாக கல்விச் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் கிளை நிறுவப்படவேண்டும் அல்லது இதுபோன்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும். இவை யாழ். மாவட்டத்தில் அல்லது வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் நிறுவ ஆவன செய்யப்படவேண்டும்.

அத்துடன் ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள், சம்பள ஏற்றங்கள், நிலுவைக் கொடுப்பனவுகள், ஓய்வூதியக் கொடுப் பனவுகள் உரிய காலத்தில் கிடைக்க வழி செய்யப்படவேண்டும் என்று இந்தக் கூட்டத் தில் கோரப்பட்டது. (த-14)

# கிழக்கப் பல்கலை நிர்வாகப் பொறுப்பு துணைவேந்தரிடமே ஒப்படைக்கப்படும்

## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.7

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 'தகுதி வாய்ந்த அதிகாரி' முறை நீக்கப்பட்டு பல் கலைக்கழகத்தின் நிர்வாகப் பொறுப்புகள் துணைவேந்தரிடமே ஒப்படைக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறினார்.

தனது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்துக்குப் பதில் அளிக் கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், மட்டக்களப்பு - கிழக்குப் பல்கலைக்கழகம் தகுதி வாய்ந்த அதிகாரியினால் நிர்வகிக்கப்படுகின்றது. நிரந்தரமாக துணைவேந்தர் ஒருவர் இல்லை.

மருத்துவபீடத்துக்குப் பேராசிரியர் ஒருவர் கூட இல்லை. இந்தக் குறைகள் தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தின் தீர்மானத்தின் படியே அங்கு தகுதிவாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டார்.

இப்பொழுது அவருடைய பதவிக் காலம் முடிந்துவிட்டது. துணைவேந்தர் ஒருவரை நியமிப்பதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளோம். இப்பதவிக்கு 11 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுள் தகுதி யான ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப் படுவார். அனைத்துப் பொறுப்புக்களும் துணைவேந்தரிடமே ஒப்படைக்கப்படும்.

கிழக்குப் பல்கலைக்கழகம் சிங்களமய மாக்கப்படுகின்றது என்பதில் உண்மை யில்லை. அப் பிரதேசத்தில் போதியளவு தமிழ்மொழிமூல மாணவர்கள் இல்லாத நிலையிலேயே சிங்கள மாணவர்கள் சேர்க் கப்பட்டுள்ளனர் - என்றார்.

(த-சி)

**நாளை**

கார்த்திகை 22 வியாழக்கிழமை 8.12.2011
திதி: திரயோதசி மாலை 5.32 வரை
நட்சத்திரம்: பரணி பி.ப. 3.17 வரை
குமராலய தீபம்
திருக்கார்த்திகை விரதம்
சுபநேரம்: 7.47-9.17 வரை, ராகு காலம்: 1.47-3.17 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் நான்கு கடைகளை நள்ளிரவில் 'பதம்' பார்த்த திருடர்கள்

## ரூ.10 லட்சம் பெறுமதியான பொருள்கள் திருட்டு

வடமராட்சி, டிசெ.7

பருத்தித்துறை நகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு 4 வர்த்தக நிலையங்களின் வெளிப்பூட்டுகள் உடைக்கப்பட்டு சுமார் 10 லட்சத்து ஆயிரத்து 520 ரூபா பெறுமதியான பொருள்களும் சுமார் 12 ஆயிரத்து 500 ரூபா ரொக்கப் பணமும் திருடப்பட்டுள்ளன.

நகரின் மத்தியில் உள்ள பழைய மெத்தைக் கடைச் சந்தியின் இருமருங்கிலும் பிரதான வீதியில் இருக்கும் புடைவைக் கடை, இரும்புப் பொருள் விற்பனை நிலையம், மின்சாரப் பொருள்கள் விற்பனை நிலையம் ஆகிய மூன்று வர்த்தக நிலையங்களிலும், மெத்தைக் கடைச் சந்திக்கு எதிரே தும்பளை வீதியில் இருக்கும் கைத்தொலைபேசி வர்த்தக நிலையத்திலுமே இந்தத் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த வர்த்தக நிலையங்களின் முன்பக்கக் கதவுகள் ஆயுதங்களால் உடைக்கப்பட்டு இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிரதான வீதியில் உள்ள ஜே.ஆர். எம்.ரெக்ஸ்ரைல் என்ற புடைவை வர்த்தக நிலையத்தில் 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கூறைச் சேலைகள், ரெடிமேட் ஜீன்ஸ் வகைகள் உள்ளிட்ட புடைவைகளும், வாசு எலக்ரிக்கல் என்ற வர்த்தக நிலையத்தில் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சிறிய, பெரிய மின்வயர் றோல்கள், மின்குமிழ்களும், அபிராமி இரும்பகத்தில் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான வாகனத்துக்கான ஒரு டசின் பெயின் ரின்களும் 8 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் திருடப்பட்டுள்ளன.

தும்பளை விதியில் இருக்கும் கைத்தொலைபேசி விற்பனை நிலையத்தில் சுமார் 2 லட்சத்து 86 ஆயிரத்து 520 ரூபா பெறுமதியான புத்தம் புதிய 39 கைத்தொலைபேசிகள், 3 டி.வி.டி. பிளேயர்கள், 2 எல்.சி.டி ரி.விகள், 4 வாகன ரேடியோ செற் என்பனவும் சுமார் 4 ஆயிரத்து 500 ரூபா ரொக்கப்பணமும் திருடப்பட்டுள்ளன. 39 கைத்தொலைபேசிகள் ஒவ்வொன்றும் 3 ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 11 ஆயிரத்து 500 ரூபா வரை பெறுமதி கொண்டவைகளாகும்.

இந்தச் சம்பவம் குறித்து பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். நேற்று செவ்வாய்க் கிழமை கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் பருத்தித்துறைப் பொலிஸார் ஈடுபட்டனர். இந்தச்சம்பவம் நகரத்தில் பெரும் பரபரப்பையும் வர்த்தகர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. (த- 236-253- 319)

# கிராம அலுவலர் பிரிவு ரீதியாக கழிவுகளைப் போடுவதற்கு வசதி

## வலி.மேற்குப் பிரதேச சபை நடவடிக்கை

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கருதி கண்ட கண்ட இடங்களில் திண்மக் கழிவுகளைப் போடுவதைத் தவிர்க்கும் நோக்குடன் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகக் குறிப்பிட்ட இடங்களில் திண்மக் கழிவுகள் போடுவது பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் பெயர்ப் பலகைகள் நிறுவப்படவுள்ளன.

இதற்கான தீர்மானம் வலிகாமம் மேற்குப் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலைவர் திருமதி என். ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

டெங்கு தொடர்பான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இப்பிரதேசத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கண்ட கண்ட இடங்களில் திண்மக் கழிவுகள் போடப்படுவதால் சுற்றுச் சூழலுக்குப் பங்கம் ஏற்படுவதுடன் பிரதேசத்தின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுகின்றது.

இந்த நிலையைத் தவிர்க்கும் நோக்குடன் திண்மக் கழிவுகளைக் குறிப்பிட்ட இடங்களில் போட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே, மக்களுக்கு வசதியாகக் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகக் குறிப்பிட்ட இடங்களில் குப்பை களைப் போடுவதற்கான பெயர்ப்பலகைகளை நடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத் திட்டத்தின் மூலம் திண்மக் கழிவுகளை வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-115)

# பாஷையூர் கடற்கரையில் பாதுகாப்பு அணை விரைவில்

யாழ்ப்பாணம், டிசெ.7

பாஷையூர் கடற்கரையின் பாதுகாப்பு அணைகளை அமைப்பதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்டக் கடல் தொழில் நீரியல்வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

இந்தப் பாதுகாப்பு அணைகளை ஐ.ஒ.எம். நிறுவனம் பொறுப்பேற்று அமைக்கவுள்ளது.

இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேற்றுப் புதன்கிழமை பாஷையூர் கடற்கரைக்குச் சென்று அங்கு அணைகள் அமைக்கப்படவுள்ள பகுதிகளைப் பார்வையிட்டு நிலைமைகளை ஆராய்ந்தனர்.

அந்தப் பகுதி கிராமசேவகர்கள் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் இவர்கள் விரிவாகக் கலந்துரையாடினார்கள்.

இந்த அணையை அமைப்பதற்கெனக் கொண்டு வரப்பட்ட கற்கள் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக அந்தப் பகுதியில் உள்ளன. (த- 26)

## எதிர்கால நலன் கருதி...



புதிய தொழில்நுட்பத்துக்குள்- ஊழியர் சேமலாப நிதியத் திட்டத்தின் கீழ் ஊழியர்களின் விரல் அடையாளம் பெறும் புகைப்படம் எடுக்கும் பணிகள் நேற்றுப் புதன்கிழமை யாழ். தொழில் திணைக்கள அலுவலகத்தில் ஆரம்பமாகின. வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் விரல் அடையாளம் பதிவு செய்யப்படுகின்றது. (த- 26)

# வரி. காப்புறுதி இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு அபராதம்

தென்மராட்சி, டிசெ.7

வாகனவரி மற்றும் காப்புறுதி ஆகியவையின்றி வாகனம் செலுத்திய இருவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைத் தனித் தனியாக விசாரித்த நீதிவான் மா.கணேசராசா எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை யடுத்து வாகனவரி, காப்புறுதி ஆகியவை இல்லாமல் வாகனம் செலுத்திய கொடிகாமம் வாசிக்கு 6 ஆயிரம் ரூபாவும், காப்புறுதியின்றி வாகனம் செலுத்திய மீசாலை தெற்கு வாசிக்கு 5 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா இரண்டு மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (த-207)

# பருத்தித்துறைச் சங்கம் முன்னிலை

யாழ்ப்பாணம், டிசெ.7

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களை இணைக்கும் செயற்றிட்டத்தில் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னணியில் உள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இந்தச் சங்கம் இவ்வாண்டில் இதுவரைக்கும் ஆயிரத்து 223 பேரைச் சங்கத்தின் அங்கத்தவர்களாக இணைத்துள்ளது.

இதனை விட நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 311 பேரையும், அச்சுவேலி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 274 பேரையும் சங்கத்தின் அங்கத்தவர்களாக இணைத்து இரண்டாவது, மூன்றாவது இடங்களில் உள்ளன.

இந்த மூன்று சங்கங்களும் அங்கத்தவர்களை இணைக்கும் செயற்றிட்டத்தில் முன்னிலை பெற்றமைக்காகச் சிறந்த பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் சங்கங்கள் ஒவ்வொன்றும் தமது கிளை நிலையங்கள் ஊடாகக் குறைந்தது 50 உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளல் வேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அங்கத்தவர்களை இணைக்கும் செயற்றிட்டத்துக்குப் பெரும்பாலான பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)

# ஏ 9 வீதியை ஆக்கிரமித்துள்ள கட்டாக்காலிக் கால்நடைகள்

தென்மராட்சி, டிசெ.7

கொடிகாமத்திலிருந்து எழுதுமட்டுவாழ் வரையிலான ஏ-9 வீதியைக் கட்டாக்காலிக் கால்நடைகள் ஆக்கிரமித்துள்ளதால் வாகனங்களில் வருவோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதி அகலிப்புக்காக இரு பக்கமும் ஓர் அடி ஆழத்துக்கு வெட்டப்பட்டுள்ள நிலையில் கட்டாக்காலி கால்நடைகள் வீதிகளை ஆக்கிரமித்துள்ளதால் வாகனங்களில் வருவோர் வாகனத்திலிருந்து இறங்கிக் கால்நடைகளைத் துரத்தி விட்டுப் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

சாவகச்சேரிப் பிரதேச சபையினர் இந்தக் கால்நடைகளின் ஆக்கிரமிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என வாகனச் சாரதிகள் பலர் தெரிவித்தனர். (த-207)

# ஏழு லட்சம் ரூபா பெறுமதியான நகை கோப்பாய் வீடொன்றில் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.7

கோப்பாய் பொலிஸ் நிலையத்தை அண்மித்துள்ள வீடொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை சுமார் 7 லட்சம் பெறுமதியான 17½ பவுண் நகையும் 40 ஆயிரம் பெறுமதியான ரூபா பணமும் திருட்டுப் போயுள்ளன.

இது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேகத்தின் பேரில் மூன்று பேரை தாம் கைது செய்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த மூவரும் நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தற்போது கோப்பாயில் வசித்து வருபவர்கள் என்றும் ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (த -4)

# சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் 80 வீதமானவைக்கு செயல் வடிவம்

## வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களில் 80 வீதமானவை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதிலேயே கால தாமதம் ஏற்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்.

பிரதேச சபையில், மக்களின் தேவைகருதி அவசரமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இரண்டு மாதங்களில் நடைமுறைப்படுத்தவில்லை. தீர்மானங்கள் ஏட்டளவில் மட்டும் இருப்பதனால் சபை உறுப்பினர்கள் மக்கள் முன்னே செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனசபையின் உறுப்பினர் கே. கௌரிகாந்தன் சபையின் மாதாந்தக் கூட்டத்தின்போது குற்றம் சாட்டி உரையாற்றியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மக்களுக்கு அவசியமான தீர்மானங்களில் 80 வீதத்துக்கு மேற்பட்டவை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு செய்து முடிக்க வேண்டிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதிலேயே சிறு சிறு தாமதம் ஏற்படுகிறது. சபையினால் நிறைவேற்றப்படக் கூடியவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்றார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளலாய், இடைக்காடு பகுதிகளில் கண்ணிவெடி அகற்றல் ஆரம்பம்

## யாழ்.மாவட்டத் தளபதியின் பணிப்புரையை அடுத்து

யாழ்ப்பாணம், டிசெ.7

வளலாய் ஜே/284, இடைக்காடு ஜே/283 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் விரைவாகக் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொள்ளுமாறு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க பணிப்புரை விடுத்துள்ளதை அடுத்து இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

24 வருடங்களின் பின்னர் கடந்த மாதம் 29 ஆம் திகதி மேற்படி பிரதேசங்களில் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது மேற்படி இரு கிராமங்களிலும் கண்ணி வெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என்று தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பலாலியில் இடம்பெற்ற சந்திப்பில் உடனடியாக இரு கிராமங்களினதும் கண்ணிவெடியகற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதற்கமைவாக இந்தப் பகுதிகளில் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் கீழ் உள்ள முகவர் நிலையங்களினால் மிதிவெடியகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டலுவலகள் திணைக்கள வட்டாரங்களிடம் கேட்டபோது, எமக்கு யாழ்ப்பாணத்தின் வடமேற்குப் பிரதேசமான பொன்னாலை மற்றும் மாதகலை அண்டிய பிரதேசங்களிலேயே கண்ணிவெடியகற்றல் பணிகளை முடித்துத் தருமாறு கோரப்பட்டது.

அந்தப் பகுதிகளை நாம் கண்ணி வெடியகற்றிக் கொடுத்து விட்டோம். மேற்படி வளலாய், இடைக்காடுபகுதிகளைக் கண்ணி வெட்டியகற்றித் தருமாறு கோரவில்லை. கோரியிருந்தால் அகற்றிக் கொடுத்திருப்போம் - என்றனர். (த-15)

# கோப்பாயில் நாளை நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.7

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் 'ஒபர்' நிறுவ னத்தின் அனுசரணையுடன் நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் இலவசமாக ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதுடன் இலவச சட்ட ஆலோசனை சேவையும் வழங்கப்படவுள்ளது.

காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமணம் போன்றவற்றைப் பதிவு செய்வதுடன், பொலிஸ் அறிக்கை பெற்றுக் கொடுத்தல், தேசிய அடையாள அட்டைக்குரிய இலவச புகைப்படம் எடுப்பதுடன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளல், இந்தியா, வெளி நாடுகளில் பிறந்த பிள்ளைகளுக்கான பிறப்புச் சான்றிதழ், பிரஜாவுரிமைச் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் என்பனவும் இந்த நடமாடும் சேவையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே மேற்படி தேவையுடையோர் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் கேட்டுக்கொண்டுள்ளார். (த)

# உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட கைதி வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதி சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி வரணிப்பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட எழுதுமட்டு வாழைச் சேர்ந்த இராசையா ஆனந்தராசா (வயது 30) என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

5 வருடங்கள் 8 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதி தன்னைப் பிணையிலாவது விடுவிக்குமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வியில் சுகாதார மேம்பாட்டு அலகு திறப்பு

தென்மராட்சி, டிசெ.7

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் வேல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட சுகாதார மேம்பாட்டு அலகு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அலகினைத் திறந்து வைத்தார்.

வித்தியாலய அதிபர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) சி.மகேஸ்வரன், விவசாய பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் து.செல்வராசா, வேல்ட் விஷன் நிறுவன செயற்திட்ட அலுவலர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளில் தரம்1, 4, 7, 10 ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வருடாந்தம் நடத்தவேண்டிய முதலுதவிப்பயிற்சி, போசாக்கு அளவீடுகள், தொற்று நோய், தொற்றாத நோய் மற்றும் கண் ஆகிய பரிசோதனை. இந்த அலகில் மாணவர்களால் மேற்கொள்ள முடியும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## படையினரின் உணவகங்கள் மூடப்படுகின்றன

தென்மராட்சி, டிசெ. 7

ஏ-9 வீதியில் அமைக்கப் பட்டிருந்த படையினரின் சிற்றுண்டிச் சாலைகளில் சில தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதையடுத்து சிற்றுண்டி நிலையங்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## சிறுவர்களுக்கு புகை பொருள்கள் விற்றவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், டிசெ.7

21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் உள்ளிட்ட புகைப் பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காக வியாபாரிகள் 23 பேர் யாழ். நீதிமன்றில் 92 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ். நகர், கொக்குவில் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் இவ்வாறு விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவே யாழ். மதுவரித் திணைக்களத்தினர் வழக்குப்பதிவு செய்து இவர்களை நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர்.

அதன்போது சந்தேகநபர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒவ்வொருவரையும் நாலாயிரம் ரூபாவீதம் அபராதம் செலுத்தும்படி நீதிவான் உத்தரவிட்டார். (த-4)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட தாய் மரணம்

தென்மராட்சி,டிசெ.7

பதினைந்து தினங்கள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட ஐந்து பிள்ளைகளின் தாய் அநியாயமாக பலியானார்.

இந்தச் சம்பவம் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது. பளை வேம்பொடுகேணியைச் சேர்ந்தவரும் தற்போது கரவெட்டி கோயிற்சந்தையில் வசித்து வந்தவருமான விநாயகமூர்த்தி சிவகலா(வயது-40) என்பவரே மரணமானவராவார்.

15 தினங்களாகத் தொடர்ந்து காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இந்தப் பெண் மந்திகை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று குணமாகாததால் பளை சோரன்பற்றில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு கடந்த வியாழக் கிழமை கொண்டு சென்று சிகிச்சையளிக்கப்பட்டது.

கடந்த 2 ஆம் திகதி இரவு காய்ச்சல் அதிகரித்ததால் வாகனத்தில் ஊவகச்சேரி வைத்திய சாலைக்கு கொண்டு வரும் வழியில் அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு கௌரவம்

வடமராட்சி, டிசெ.7

தேசிய மட்டத்தில் பிரதேச செயலகங்களுக்கு இடையே நடைபெற்ற முகாமைத்துவப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தைப் பெற்றதைக் கொண்டாடுமுகமாக இடம்பெற்ற அகமகிழ்விழா கடந்த 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பெருந்திரளானோர் திரண்டிருக்கச் சிறப்பாக நடைபெற்றது.

அகமகிழ்விழா ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, தேசிய,மாவட்டக் கொடிகள் ஏற்றப்பட்டன. பின்னர் இந்து, கிறிஸ்தவ மதகுருமாரின் ஆசியுரை இடம்பெற்றது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.



யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சிவலிங்கராசா, சட்டபீடத் தலைவர் பேராசிரியர் த.கலாமணி, இளைப்பாறிய அதிபரும் கரவெட்டிப் பிரதேச கலை கலாசாரக் குழுத் தலைவருமான கி.நடராஜா, நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் மு.தங்கலிங்கம், 521 ஆவது பிரிவுப் படையணியின் ... நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திஸ்ஸகாரு, யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் எம்.சிவஸ்ரீ, யாழ். மக்கள் வங்கி தலைமையக சிரேஷ்ட முகாமையாளர் மு.சிவநேசன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொண்டு உரையாற்றினார். கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஏற்புரை நிகழ்த்தினார். 521 ஆவது படை யணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் திஸாநாயக்கா யாழ். மாவட்ட இராணுவத் தளபதியின் சார்பில் நினைவுப் பரிசில் ஒன்றை கரவெட்டிப் பிரதேச செயலருக்கு வழங்கினார். (த-236)

## மந்துவிலில் டெங்கு ஒழிப்பு

தென்மராட்சி, டிசெ.7

மந்துவில் கிழக்குப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கொடிகாமம் பொலிஸார், மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீடு வீடாகச் சென்று நடத்திய சோதனைகளின் போது டெங்கு நுளம்பு உற்பத்தியினைத் தடுக்கும் பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நுளம்பு உற்பத்தி செய்யக்கூடிய கொள்கலன்களில் நீர் தேக்கி வைத்திருந்த நான்கு பேருக்குப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு**

கந்தர்மடம் இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் அமைந்த சகல வசதியுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:-0776630762

**அக்குபங்சர் வைத்தியம்**

சகல ரோகங்களுக்கும், அக்கு பங்சர், ஹோமியோபதி சிகிச்சை அளிக்கப்படும்.

நவீன வைத்திய நிலையம்,
அச்சுவேலி.
DR.T.புனிராசன்.

# மரண அறிவித்தல்

## திருமதி பரஞ்சோதியம்மா வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர், யா/ கைதடி குருசாமி வித்தியாசாலை)



கைதடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதியம்மா வேலுப்பிள்ளை நேற்று (06.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், இராமலிங்கம்- அன்னலக்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வியும், சின்னத்தம்பி- சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், மல்லிகா, காலஞ்சென்ற சிவரூபன் (திருமணப்பதிவாளர், J.P) ஆகியோரின் அன்புத் தாயும், மனோகரன்(Retd. Regional Airport Service Manager, Srilankan Airlines), ராஜசோதி (ஆசிரியர், இந்துக் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், ஹம்சாஜினி, தக்சாஜினி, போசினி (மாணவி, திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.12.2011) புதன்கிழமை, 30, கிருள பிளேஸிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 4.30 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிருள பிளேஸ்,
நாரஹேன்பிட்டி, கொழும்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

# மின் கம்பியை இழுத்து கம்பத்தை சாய்த்துவிட்டுத் தப்பிய வாகனம்

தென்மராட்சி, டிசெ.7

வீதியோர மின் கம்பி வாகனத்தின் பகுதியில் சிக்கி இழுபட்டதில் மின்கம்பம் சாய்ந்ததுடன் அருகில் உள்ள வீட்டின் மின் இணைப்பையும் துண்டித்த போதிலும் வாகனம் நிறுத் தாமல் சென்று விட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் முத்துமாரி அம்பாள் கோயிலுக்கு அருகில் இடம் பெற்றது.

வாகனத்தின் மேல் ஏற்றிச் செல்லப்பட்ட மற்றொரு வாகனத்திலேயே மின்கம்பி சிக்கியதாகத் தெரிவிக்கப் பட்டது.

நேற்றுமுன்தினம் மின் தடை அமுலில் இருந்ததால் மின்சாரத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்தைத் தவிர்க்க முடிந்தது.

இந்த விபத்தினால் அதே இடத்தைச்சேர்ந்த க.சிவபாதசுந்தரம் என்பவரின் வீட்டின் மின் இணைப்புக் கேடர் வளைந்ததுடன் மின்மானியும் பிடுங்கப்பட்டுள்ளது.

(த-207)

மக்கள் வங்கியின்
சுன்னாகம் கிளையுடன் இணைந்த
அளவெட்டி சேவை நிலைய்

**திறப்பு விழா**

இன்று 2011.12.07ம் திகதி புதன்கிழமை
காலை 9.00 மணிக்கு

வடமாகாண ஆளுநர்
மேஜர். ஜெனரல் G.A. சந்திரசிறி
அவர்களால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

சிறப்பு விருந்தினர்களாக,
திரு. L. இளங்கோவன்
(வடமாகாண ஆளுநரின் செயலாளரும்,
வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரும்)

திரு. S. முரளீதரன்
(பிரதேச செயலாளர், வலி. வடக்கு)
ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள கிளைகள், சேவை நிலையங்களுடன் வலையமைப்பில் இணைந்த இந்த சேவை நிலையத்தில்,

- விவசாயக் கடன்
- சுயதொழில் முயற்சிக்கான கடன்
- வீடமைப்புக் கடன்

போன்ற கடன் வசதிகளையும் ஏனைய வங்கிச் சேவைகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதனையும் உங்களிற்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி"

-யாழ் பிராந்திய மக்கள் வங்கியினர்-

AAA-Brand Finance Rating, AA' (lk) Fitch Rating

மக்கள் வங்கி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியளம் கேட்டீர்களா?

### அந்தக் காலத்திலை வாத்தியாரிட்டை நாங்கள் வாங்கின அடி....!

இப்ப வெடிவால் முளைச்சுத் திரியிற பெடியளைப் பாக்கேக்கை எங்கடை காலந்தான் ஞாபகத்துக்கு வருகுது பாருங்கோ. நாங்கள் அப்பு கீறின கோட்டைத் தாண்டாமல் வாழ்ந்தனாங்கள். வெள்ளாப்போடை எழும்பி, விறைக்கிற குளிரிலை அப்புவோடை போய், அப்பு துலா மிதிக்க பட்டையிலை கோலித் தண்ணியள்ளி ஆயிரங்கண்டு மிளகாய்க்கோ,கத்தரிக்கோ தண்ணி இறைச்சுப் போட்டுத்தான் பள்ளிக்கூடம் போனனாங்கள். பின்னேரம் வந்தாலும் ஒரே வேலை. இரவிலை வாத்தியார் தாற வீட்டு வேலையளைச் செய்யவேணும். இல்லாட்டில் துவரங் கம்பாலைதான் விளாசுவார். அடிவாங்கி அழுது போட்டுத்தான் இருக்கேலும். வீட்டிலை சொல்லேலாது. கொஞ்சம் முறுகினாலும் வாத்தியார் கொப்பரைக் கூட்டி வா எண்டிடுவார். அப்பு வந்தால் வாத்தியாருக்கு முன்னாலை வச்சுத் தோலுரிப்பார். ஏனெண்டு கேக்க ஆருமில்லை.

அடியாத மாடு படியாது. அடியைப் போல அண்ணன் தம்பியும் உதவ மாட்டினை எண்டு சொல்லிச் சொல்லித்தான் அடிவிழும். அடியை நினைச்சே அல் ஜீப்ராவும், ஜோமற்றியும் மனசுக்குள்ளை வந்திட்டுது. பாரதச் சுருக்கமும், இராமாயணமும், தேவாரமும், இலக்கணச் சூத்திரங்களும் மனப்பாடம். அடியின்ரை பயத்திலை படிச்சதாலை கோழி மேய்ச்சாலும் கோறண மேந்திலை மேய்க்க வேணும் எண்ட அப்பு, ஆச்சியின்ரை விருப்பத்தை நிறைவேத்தி இண்டைக்கு ஒரு மனிசனாய்த் தலை நிமிர்ந்து நிக்கிறம்.

அந்தக் காலத்திலை எங்கடை கையிலை காசைக்காணுறது அருமை பாருங்கோ! எங்கையாவது கோயில் திருவிழா, காத்தான் கூத்து எண்டால் ஐஞ்சோ பத்துச் சதம் கிடைக்கும். அதுவும் பெரியாக்கள் ஆரோடையுந்தான் அனுப்புவினம். சினிமாப் படத்துக்கெல்லாம் போகேலாது. ஆரோடையும் களவாய்ப் போனாச்சரி. பிடிபட்டால் அதோ கதிதான். எங்களுக்குத் தெரிஞ்ச தெல்லாம் பிழைவிட்டால் ஒண்டில் வாத்தியார் அடிப்பார்.




இல்லாட்டில் அப்பு அடிப்பார். ஆனா அவையும் சும்மா அடிக்க மாட்டினம். அவை எள் எண்டால் நாங்கள் எண்ணெயாய் நிப்பம். நிக்காட்டில்தான் அடி. அடிக்கிற மாதிரித்தான் அவை எங்களிலை அன்பும், கரிசனையும். என்ன பாடமெண்டாலும் தெளிவுபடுத்தி விடுவினை. இப்பத்தைச் சில பெரிய வகுப்பு வாத்திமார் பிள்ளையளுக்குப் பள்ளிக்கூடத்திலை படிப்பிக்கிறேல்லையாம். பிள்ளையளைத்தான் ரியுசன் குடுக்கிற இடத்திலை வந்து படிக்கச் சொல்லுவினையாம். அப்ப ரியுசனும் இல்லை. மேலதிக நேரங்களும் நிண்டு படிப்பிப்பினம். தங்களைப் பள்ளிக்கூடங்களுக்காக அர்ப்பணிச்சுப் படிப்பிச்சினம். அவை எல்லாரும் உளவியல் படிச்சு வரேல்லை. அப்பு ஆச்சிக்கு உதெல்லாம் எங்கை தெரியும்? சமூக ஒருங்கிணைவு எண்டும், சிறுவர் உரிமையள் எண்டும் இண்டைக்குப் பெடி பெட்டையளுக்கு அழுத்திச் சொல்லுற சமாச்சாரங்கள் எதுவும் அண்டைக்கில்லை. இண்டைக்கு வாத்தியார் அடிக்கேலாது. ஏசக் கூட ஏலாது. எங்கை இதையெல்லாம் பாத்து ஆளைக் கோடு கச்சேரிக்கு ஏத்தலாம் எண்டு கனபேர் காத்துக் கொண்டிருக்கினை. கொழுத்த சம்பளத் திலை கள்ளன் பிடிக்கிற ஆக்கள் மாதிரி அவை இருக்கினம்.

வெடிவால் முளைச்சதுகளுக்கு இதெல்லாம் நல்ல செய்தி பாருங்கோ. பள்ளிக்கூடத்திலையும், வீட்டிலையும் பேரம் பேசிற சக்தி அவங்களுக்கு வந்திட்டுது. வெளிநாட்டுக் காசு வேறை. வெளியிலை வெளிக்கிட்டுத் திரிய இருக்கிறது ரியுசன் சாட்டு. நண்டு கொழுத்தால் புத்துக்கை நிக்காது. காசுள்ள இளசுகள் சேர்ந்தால் கேக்கவும் வேணுமோ? ஊசியைக் காந்தம் இழுக்கும். உத்தமனைச் சினேகம் இழுக்கும் எண்டு சும்மாவே சொன்னவை. இதுகளைக் கண்டிக்க வெளிக்கிட்டால் மனித உரிமை, சிறுவர் உரிமை மீறலாயிடும். கவனமாயிருங்கோ! எங்கடை பிள்ளையளைக் கட்டாக்காலிகளாக்கிற வேலையைத்தானே இந்த உரிமையள் எல்லாந் தருகுது. அதுகளை நல்வழிப்படுத்திற மார்க்கங்களைச் சொல்லுறதை விட்டிட்டு அதுகளைத் தலையாலை அழிக்கிற வேலையளையல்லோ இவை செய்யினை. எங்கடை கல்விச் சீரழிப்புக்கு இதுகளும் காலாயிருக்கிறதை நாங்கள் பலபேரும் வசதியாய் மறந்திட்டமோ?

விழிச்சான் குஞ்சு.

# சுயலாப நோக்கில் செயற்படும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள்

## கரு ஜயசூரிய குற்றச்சாட்டு



கொழும்பு,டிசெ.7

சுயலாப நோக்கில் கட்சியின் சில சிரேஷ்ட தலைவர்கள் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

கட்சித் தலைமைப் பதவிக்காக போட்டியிடுவது தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கட்சிக்குள் ஜனநாயகத்தை நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முனைப்புகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

கட்சியில் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு வலுவான கட்சியாக உருவாக்குவதற்கு தடை ஏற்படுத்தப்படுகின்றது.

ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வெளியில் வலியுறுத்திய போதிலும், கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை; கட்சிக்குள் வெளிப்படைத்தன்மை இல்லை.

அரசின் சர்வாதிகாரப் போக்கு தொடர்பில் முறைப்பாடு செய்யப்படுகின்றது. கட்சிக்கு உள்ளும் அந்த நிலைமை நீடிப்பது வேதனைக்குரியது.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்காகவே தாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவளித்தோம்.

யுத்தம் நிறைவடைந்தது. எனினும் சமாதானம் நிலை நாட்டப்படவில்லை, மாறாக வன்முறைகளும், ஊழல் மோசடிகளும் அதிகரித்துள்ளன. கட்சியை ஒன்றிணைத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களை முதனிலைப் படுத்தி தலைமைப் பதவிக்காக போட்டியிடத் தீர்மானித்துள்ளேன்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பொலிஸ் திணைக்களத்துக்கு 100 மோப்ப நாய்கள் இறக்குமதி

கொழும்பு,டிசெ.7

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் மோப்ப நாய்ப் பிரிவு 100 நாய்களை இறக்குமதி செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட நாய்கள் ஒவ்வொன்றிற்கும் பெறுமதி 5 லட்சம் இலங்கை ரூபாய் செலவு செய்யப்பட்டது.

இந்த நாய்கள் போதைப் பொருள்களைக் கண்டறிதல் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான மோப்பம் பிடித்தல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த நாய்கள் பெல்ஜியம், நெதர்லாந்து, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகளிலிருந்து கிடைத்த 240 விண்ணப்பங்களிலிருந்து இந்த நாய்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பேராதனை பல்கலைக்கழகத்தின் மிருக வைத்திய பீடத்தைச் சேர்ந்த டாக்டர் அசோக் தங்கெல்ல மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிசிர வீரக்கோன் ஆகியோரால் இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# இணையத்தளங்கள் தடைக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் மனு

கொழும்பு,டிசெ.7

இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டமைக்கு எதிராக மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடக அமைப்பின் அமைப்பாளர் சுனில் ஜயசேகரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச செய்திப் பணிப்பாளர் வெகுசன ஊடக அமைச்சர் அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இணையத்தளங்கள் தடை செய்யப்படுவதன் மூலம் மக்களின் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை முடக்கப்பட்டுள்ளது என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட இணையத்தளங்கள் தனிப்பட்டவர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையிலோ அல்லது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலோ செய்திகளை வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தள்ங்களைத் தடை செய்வதன் மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனவும் உடனடியாக அந்தத் தடையை நீக்க வேண்டும் எனவும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

# கொழும்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு,டிசெ.7

கொழும்பு மற்றும் சன நெரிசல் மிக்க பிரதேசங்களில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் மேலதிக பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்த உத்தேசித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸார் சீருடையிலும் சிவிலியன் உடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதனால் மக்கள் தங்களது உடைமைகள் குறித்து கூடிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# அமெரிக்காவுக்குச் சார்பானவர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்

## விக்கிலீக்ஸ் தகவல்

கொழும்பு,டிசெ.7

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவிற்கு சார்பானவர் என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவைப் போன்றே, ரணிலும் அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அந்த நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக ரணில் அமெரிக்காவுடன் உறவுகளைப் பேணி வருவதாகவும், அது அவர்களது குடும்ப வழக்கம் எனவும் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2003 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்க அரசியல் மற்றும் வரலாறு பற்றி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெளிவு காணப்படுகின்றது.

விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்ற நிலைப்பாட்டில் ரணில் விக்கிரமசிங்க இருந்தார் என்று அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்துக்கான தண்ணீர்த் திட்டம் அம்பாந்தோட்டைக்குத் திருப்பப்படுகிறதா?

## அநுரகுமார திஸாநாயக்க கேள்வி



கொழும்பு, டிசெ.7

மகாவலித் திட்டத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்திற்கு கொண்டு செல்லப் படவிருந்த நீர்த்திட்டம் இப்போது அம்பாந் தோட்டைக்குத் திருப்பப்படு கிறதா என்று ஜே.வி.பி. செயலாளர் அநுரகுமார திஸா நாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி னார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத் தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறிய தாவது:

30 வருட மகாவலித்திட்டம் 6 வருடங் களில் பூர்த்திசெய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின் ஊடாகவே கிழக்கு மாகாணத்திற்கு நீரைக் கொண்டு செல்வதற்குத் திட்டமிடப்பட்டிருந் தது. ஆனால், அது நடக்கவில்லை.

இப்போது எல்லா வாவிகளும் அம் பாந்தோட்டைக்கே திருப்பப்படுகின் றன.

மகாவலித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத் திற்கு கொண்டு செல்லப் படவிருந்த நீரும் இப்போது அம்பாந் தோட்டைக்கு திருப்பப் படுகிறதா? - என்றார்.





யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் கா.குகபாலன் உரையாற்றுகிறார். தொடர்ந்து கல்லூரி அதிபர் வீ.கணேசராசா வருடாந்த அறிக்கை சமர்ப்பித்து உரை நிகழ்த்துகிறார். மாணவர் ஒருவருக்கு திருமதி கோகிலாதேவி குகபாலன் பரிசில் வழங்குகிறார். (வ)

# 17 கலைஞர்களுக்கு விருது வழங்கி திருமறைக் கலாமன்றம் கௌரவித்தது

திருமறைக் கலாமன்றத்தின் வளர்ச்சிக் காக அதன் பணிகளில் அர்ப்பணிப் புடன் சேவைபுரிந்த 17 கலைஞர்கள் திருமறைக்கலாமன்ற தினத்தில் விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந் துள்ள யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெற்றது. திருமறைக்கலாமன்றத் தின் பிரதி இயக்குனர் யோன்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு இரண்டு கட்டமாக நடைபெற்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் சேவியர் நவநீதன் எஸ்.தனபாலசிங்கம், ந.இராம நாதன் ஆகியோருக்கு திருமறைக் கலாமன்றத்தின் இசைஞானச்செல்வன் விருதுகளும், எஸ். ஏ. அழகராஜாவிற்கு கவித்தென்றல் விருதும். கி. அல் போன்ஸ், எஸ்.சுதாகரன் ஆகியோருக்கு 2011 ஆம் ஆண்டின் இயக்குநர் சிறப்பு விருதும் வழங்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் டாக்டர் ஜி.எட் வேட், எம்.ரி. அருளானந்தம், ஆர். ஜெகநாதன், ரி.எம். நெல்சன், அ.யோசப், பி.எச். தங்கரத்தினம், அண்ணாவியார் பேக்மன் ஜெயராசா, எஸ். சாமிநாதன் ,அண்ணாவியார் பி.யூட்., கே.ஆர். விஜய குமார் ஆகியோருக்கும் கலைஞான பூரணன் விருதுகளும் ,செல்வி எம். சின்னமலருக்கு கலைஞானச் செல்வி விருதும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவலர்கள் மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் ', யாழ் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைப் பேராசி ரியர். எஸ். சிவலிங்கராஜா, வாழ்நாள் பேராசி ரியர் எஸ். சண்முகதாஸ் திருமறைக் கலா மன்ற இயக்குநர் வண.பிதா மரியசேவி யர் அடிகளார், பேராசிரியர் திருமதி. மனோன்மணி சண் முகதாஸ், வட மாகாண கல்வி கலா சார அமைச் சின் பணிப்பாளர் திரு மதி எஸ். ஸ்ரீ தேவி ஆகியோர் இந்தக் கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌர வித்தனர். (எ-51)

# சுற்று மதில் அமைக்க மாணவர், பெற்றோரிடம் உதவி கோருகிறது வரணி மகா வித்தியாலயம்

வரணி, டிசெ.7

வரணி மகா வித்தியாலயத்தில் ஒரு பகுதி சுற்றுமதில் தற்சமயம் அமைக் கப்பட்டு முடிவடைந்த நிலையில் உள்ளது. மேற்படி வித்தியாலயத்தில் சுற்றுமதில் அமைப்பதற்கான நிதியை கனடா வாழ் பழைய மாணவர் ஒன்றியம் வழங்கியுள்ளது.

மேலும் இந்தப் பணியை தொடர்ந்து செய்வதற்குப் பாடசாலைப் பெற்றோர் முன்வர வேண் டும் எனவும் நிதி உதவி வழங்கு வோர் ஆசிரியர் க.சுந்தரமூர்த்தியிடம் தொடர்பு கொண்டு பங்களிப்பை நல்க முடியும் எனவும் பாடசாலை அதிபர் க.மங்களேஸ்வரன் கேட்டுள் ளார்.

அண்மையில் நடைபெற்ற பாட சாலை அதிபர் மாணவ பெற்றோர்களு டனான சந்திப்பின் போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது குறிப் பிடத்தக்கது. (எ-122)

## தவறிவிட்டது

வல்லை வீதி, சங்கானையைச் சேர்ந்த சந்திரராசா சுகாகன் என்பவரது தே.அ.அ (922592969V) மற்றும் ATM காட் என்பன அடங்கிய பேஸ் சங்கானைக்கும் மாயப்கியப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப் பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T. P: 0750412107

## தலைநகரில் தங்குமிட வசதி

Rooms A/C, Non A/C, Attached Bath room, T.V, புகையிரத நிலையம் , பஸ்தரிப்பு நிலையம் , பொதுச் சந்தை மிக அருகில், சகல வசதிகளையும் கொண்ட (New Oasiss rest) ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். முன்பதிவு ஏற்றுக் கொள்ளப்படும்.

இல.135, மெலிபன் வீதி,
கொழும்பு-11
தொ.பே: 0112338437
0112323449, 0112470209

## புதிய வகுப்புகள் ஆரம்பம்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

இணையற்ற சேவையினூடு....





ஆவது ஆண்டில்....

தரம் 03 முதல் O/L வரை

ஆங்கில/தமிழ் மொழி மூலம் வகுப்புகள்

The Express Institute
Irupalai, Kopay.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 24.10.2011 அன்று
சிவபதமடைந்த எமது சக ஆசிரியை
திருமதி கு. இன்பவதி அவர்களின்
அன்புக் கணவர்
குணரட்ணம்
அவர்களது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதோடு 45 ஆம் நாள்
நினைவஞ்சலிகளையும் தெரி
விக்கின்றோம்.

யா/மாதகல் சென்.ஜோசப் ம.வி,
யா/மாதகல் நுணசை வித்தியாலயம்.
(11303)(6-19-5)
ஆசிரியர் கழகம்.

## நீங்காத நினைவுத் துளிகள்

| 2 ஆம் ஆண்டு | 10 ஆம் ஆண்டு | 11 ஆம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| சிவனாய்: 14.01.1937 | சிவனாய்: 14.02.1940 | சிவனாய்: 11.09.1975 |
| சிவமாய்: 29.11.2009 | சிவமாய்: 13.01.2001 | சிவமாய்: 21.08.2000 |
| அமரர் ஏரம்பு முருகேசு | திருமதி முருகேசு மனோன்மணி | அமரர் முருகேசு சுதர்சன் (ராசன்) |
| திதி: துவாதசி | | |

ஆண்டுகள் இரண்டு சென்று
விட்டன - தங்களின்
ஆனந்த முகத்தைக் கண்டு
சாந்தமான தங்களின்
பேச்சைக் கேட்க
ஆவலாய் நிற்கின்றோம்
ஆயிரம் உறவுகள் இருந்தும்
என்ன - அப்பா
உங்கள் அன்பைப்
போல் வருமா அப்பா

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
நுணாவில் மேற்கு,
மட்டுவடி,
சாவகச்சேரி.
(11257)(1,6,19)

## பத்தாண்டு நினைவஞ்சலி

### அமரர் தம்பிப்பிள்ளை பரமசிவம்

(முன்னாள் கல்வித் திணைக்களஆவணஅறை பொறுப்பாளர்)

தோற்றம் 20.08.1940 — மறைவு 27.11.2001



திதி: துவாதசி
07.12.2011

பத்தாண்டுகள் ஆனதப்பா
நிலவுலகில் ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் நிழல் தந்த பெருமரம்
நீங்கள் இன்று இல்லையே அப்பா
நீரின்றிய தாவரம் போல் உம் பிரிவால்
தவிக்கின்றோம் எம் அப்பா.
சாந்தி! சாந்தி! சாந்தி!!!

125/5, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள் ,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(11321)(8-6-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுக் கிரகங்களில் தண்ணீர் தேடுகின்றனர் விஞ்ஞானிகள் நாங்கள் இங்கு குடிதண்ணீருக்கே அலைந்து திரிகிறோம்

கிளிநொச்சி மாவட்டம், பன்னங்கண்டி சரஸ்வதி கிராமத்தில் தமிழ் மக்களிடம் இருந்து கபளீகரம் செய்யப்பட்டிருக்கும் காணிகளை மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ்.சிறிதரன் நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பன்னங்கண்டி கிராமம் ஒரு தமிழ்க் கிராமம். அங்கு நூறு வீதம் தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். இந்தக் கிராமத்தில் 60 வீதமான காணிகளை இராணுவத்தினரும் அரச ஆதரவுக் கட்சி உறுப்பினர் ஒருவரும் பலவந்தமாக அபகரித்து அவற்றை வேற்று நபர்களுக்கு விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே இக்காணிகளை மீண்டும் அந்தக் கிராம மக்களிடமே ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் சிறிதரன்.

நேற்று நாடாளுமன்றத்தில் நீர் விநியோகம் மற்றும் நீர் வழங்கல் ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே சிறிதரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. நேற்றும், நேற்றுமுன்தினம் போலவே வாய்மூல விடைக்கான ஏழு கேள்விகள் எழுப்பப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த ஏழு கேள்விகளில் ஒரே ஒரு கேள்விக்கு மட்டுமே பதில் அளிக்கப்பட்டது.

**நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கி விடும் அபாயம்**

மழைக்காலத்தில் பெருக்கெடுக்கும் வெள்ள நீரை கடலுக்குள் கொண்டு செல்லவும் தேக்கி வைப்பதற்காக காணிகள் ஏரிகளாக மாற்றப்படுகின்றன. இதனால் பெரும் பாதிப்புகள் ஏற்பட இடமுண்டு. இதற்கென அரசு செலவிட்டுள்ள தொகை எவ்வளவு என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க பிரதமரிடம் கேள்வி எழுப்பினார். இக் கேள்விக்கு ஆளும்கட்சியின் பிரதம அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார்.

ஏரிகளை அமைப்பதற்கு புதிதாக காணிகள் பெறப்படவில்லை. மாறாக மழை நீர்கடலுக்குக்குள் எடுத்துச் செல்லப்படும் கால்வாய்களும், நீரேந்து ஏரிகளும் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக சபாநாயகரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய தியவன்னஓயா ஆழமாக்கப்பட்டுள்ளது. காரணம் இந்த ஆறு பெருக்கெடுக்கும் போது நாடாளுமன்றமே நீரில் மூழ்கும் நிலை. ஏற்கனவே நாடாளுமன்றம் நீருக்குள் மூழ்கியது அனைவரும் அறிந்ததே.

இப்படியான விபரீதங்களைத் தடுக்கும் வகையிலேயே ஏரிகள் ஆழமாக்கப்படுகின்றன என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நீண்ட ஒரு விளக்கத்தை அளித்தார்.

ஒரு கேள்விக்கு மட்டும் விடையளிக்கப்பட்ட நிலையில் ஏனைய ஆறு கேள்விகளுக்கும் பதில் அளிப்பதற்காக கால அவகாசம் கேட்கப்பட்டது.

**தனியார் மருத்துவக் கல்லூரிக்கு பட்டமளிக்கும் அதிகாரம்**

தற்பொழுது மாலபேயில் இயங்கிவரும் ''சவுத் ஏசியன் இன்ஸ்ரிடியூட் ஒப் டெக்னோலொஜிஸ் அன்ட் மெடிசின்'' என்ற பெயரில் இயங்கிவரும் தனியார் பல்கலைக்கழகத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பட்டங்களை வழங்குவதற்கான அங்கீகாரம் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரம் தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நேற்று சபையில் சமர்ப்பித்தார்.

சுகாதார அமைச்சு தொடர்பான விவாதம் நடைபெறும் தினத்தில் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியானதும் குறிப்பிடத்தக்கது.

**புத்தளத்தில் 'சீபிளேன்' இறங்குதுறை**

நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கான பிரதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார் ஐ.தே.கட்சி உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா. அப்போது அவர் நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பாக விமர்சனம் செய்தார்.

நாஸா விஞ்ஞானிகள் வேற்றுக் கிரகங்களில் குடிதண்ணீர் இருக்கின்றதா என்று ஆராய்ச்சி செய்யும் போது நாம் நல்ல நீரைத்தேடி அலைய வேண்டிய நிலை என்றும் ஜயவிக்கிரம பெரேரா குறிப்பிட்டார்.

**இறுவட்டுகளை வைத்துக்கொண்டு எப்படிப் பேசுவது?**

நாடாளுமன்றத்தில் சகல அமைச்சுகள், திணைக்களங்கள் தொடர்பான செயலாற்று அறிக்கைகளும் புத்தகமாக அச்சிட்டு வழங்குவது வழமை. ஆனால் கடந்த சில தினங்களாக இந்த அறிக்கைகள் இறுவட்டுகளின் மூலம் வழங்கப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக ஐ.தே.கட்சி உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

கௌரவ சபாநாயகர் அவர்களே! இப்போது எமக்கு வழங்கப்படும் அறிக்கைகள் இறுவட்டுகளாக வழங்கப்படுகின்றன. தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து வருவது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்தச் 'சீடி'க்களைசபையில்வைத்துக்கொண்டு அமைச்சுகள் தொடர்பாக நாம் எப்படி பேசுவது?

அதற்கான வசதி வாய்ப்புகளும் தொழில்நுட்ப வசதிகளும் இந்த சபையில் இல்லையே. எனவே இந்த அறிக்கைகளை வழமைபோல் புத்தகமாகவும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார் ஜோசப் மைக்கல் பெரேரா.

**சிறிதரனின் அபாய அறிவிப்பு**

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட குறைபாடுகள் தேவைகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்த கூட்டமைப்பு உறுப்பினர் சிறிதரன் ஓர் அபாய அறிவித்தலையும் வெளியிட்டார். ''அரசு ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் அதாவது இரணைமடுவில், இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தையும், விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றது. நீர்ப்பாசனத் திட்டத்துக்குப் பெரிய அணைக்கட்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதேவேளை அருகிலேயே விமான நிலையமும் இருப்பதால் அடிக்கடி விமானங்கள் ஏறிஇறக்கும் போது நில அதிர்வுகள் ஏற்படும். இதனால், அணைக்கட்டுகளில் வெடிப்பு ஏற்படுவதைத் தடுக்க முடியாது. எனவே அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார் சிறிதரன்.




**அமைச்சரைப் பாராட்டிய பொன்.செல்வராசா**

வழமையாகவே தனது பிரதேச மக்களின் தேவைகளையும் குறைகளையும் ஆணித்தரமாகப் பேசுபவர் கூட்டமைப்பு உறுப்பினர் பொன். செல்வராசா. அதேவேளை செய்த நன்மைகளையும் கூறத்தயங்கமாட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசு மேற்கொண்டுவரும் பாசனத்திட்டங்களை வரவேற்றுப் பேசியதுடன்; கித்துள்ஓயா - உறுகாமம் இரண்டையும் இணைத்து மேலும் ஒரு பெரிய நீர்விநியோகத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தனது கோரிக்கையும் ஏற்றுக்கொண்ட அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இவ்விடயம் தொடர்பாக தான் எழுதிய கடிதத்துக்கு நன்மையான பதிலை வழங்கியமைக்கு நன்றியையும் தெரிவித்துக்கொண்டார் பொன். செல்வராசா.

**பொம்மைவெளியில் கழிவு நீர் சுத்திகரிப்பு**

குடாநாட்டு மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பற்றி பூர்த்தி செய்யும் நோக்குடன் 2 ஆயிரம் கோடி ரூபா செலவில் இரணைமடு நீர்ப்பாசனத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் யாழ்ப்பாணத்தில் 70 வீதமானவர்களின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

அதேவேளை பொம்மைவெளியில் கழிவுநீரை சுத்திகரிக்கும் திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதனை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியும் என்று கூறிய பிரதி அமைச்சர் முரளிதரன், கூட்டமைப்பு உறுப்பினர் பொன்.செல்வராசாவை பாராட்டவும் தவறவில்லை. அத்துடன் பிரிவினைகளை கைவிட்டு ஒன்றுபட்டு செயல்படவாரீர் என்றும் அழைப்பு விடுத்தார்.

நீர்ப்பாசனம் மற்றும் நீர்வடிகால் அமைப்பு தொடர்பான விவாதம் நீரோட்டம் போன்று அமைதியாக முடிந்தது.

**சூடுபிடித்தது சுகாதார அமைச்சின் விவாதம்**

மதியபோசன இடைவேளையின் பின் சுகாதார அமைச்சு மற்றும் சிறுவர் பராமரிப்பு மகளிர் விவகார அமைச்சுகளுக்கான விவாதம் ஆரம்பமானது.

விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய ஐ.தே.க. ஜோன் அமரதுங்க பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட கத்தோலிக்க கன்னியாஸ்திரி தொடர்பாகப் பேசினார்.

ஒரு சாதாரண தொலைபேசியில் அநாமதேய முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாரின் இந்த நடவடிக்கை அனைத்து கத்தோலிக்கர்களையும் வேதனைப்படுத்தி உள்ளது. இதனால் அரசு நடத்தும் எந்த ஓர் அரச கிறிஸ்தவ நிகழ்வுகளிலும் கத்தோலிக்கர்கள் கலந்துகொள்வதில்லை என்று பேராயர் மல்கம் ரஞ்சித் தலைமையில் கூடிய சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். இந்த வேளையில் பிரதி அமைச்சர்களான ஹிஸ்புல்லாவும் லலித் திஸா நாயக்கவும் அடிக்கடி இடையூறு செய்தனர். மாறிமாறி சொல்லம்புகளை வீசிக்கொண்டே இருந்தனர். இதனால் விவாதத்தின் ஆரம்பமே சூடாக ஆரம்பித்தது.

**சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக முறைப்பாடுகள்**

ஜோன் அமரதுங்காவின் பேச்சுக்கும் பதில் அளிப்பது போல் உரையாற்றினார் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா.

பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மத சாயமோ, அரசியல் சாயமோ பூசக்கூடாது. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விசேட பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த மாதத்தில் மட்டும் நூறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை, எதிரணி உறுப்பினர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம் தொடர்பாகவும் வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**சிறுவர் காப்பகத்தில் 14 வயது கர்ப்பிணித் தாய்**

குறிப்பிட்ட காப்பகத்தில் ஆகக் கூடுதலாக 29 சிறுவர்களுக்கு மேல் தங்க வைக்க முடியாது. ஆனால் அங்கு 65 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் காணப்பட்டிருந்தனர். அவர்களுள் 14 வயது கர்ப்பிணித் தாய் ஒருவரும் காணப்பட்டார். இவர்களுடன் ஒரு வெளிநாட்டுத் தம்பதியரும் இருந்தனர். இவர்கள் குழந்தை ஒன்றை தத்து எடுப்பதற்கான தஸ்தாவேஜுகளுடன் காணப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்கு நாம் மத சாயம் பூசக் கூடாது.

**பௌத்த பிக்குவும் இஸ்லாமியரும் கைது**

கடவத்தையில் பௌத்த பிக்கு ஒருவரினால் நடத்தப்படும் சிறுவர் விடுதியில் தங்கி நின்ற சிறுவர்கள் தப்பி ஓடி உள்ளனர். இவர்களை விசாரித்த போது அங்கு இடம்பெற்ற துஷ்பிரயோகம் தொடர்பாக பௌத்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று இஸ்லாமியர் ஒருவர் நடத்திய விடுதி ஒன்று தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து இஸ்லாமியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இங்கு மத பேதங்களுக்கு இடமில்லை என்றார் ஹிஸ்புல்லா.

**சஜித் பிரேமதாசாவின் பரந்த நோக்கு**

ஐ.தே.க. உறுப்பினர் உரையாற்றும் போது வடக்கு - கிழக்கு, மலையகம் உட்பட பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படும் மந்த போஷாக்கு, குறைப் பிரசவம். பெருகி வரும் மரண வீதம் சுகாதார குறைபாடுகள், மருந்துத் தட்டுப்பாடு, வைத்தியர்கள் பற்றாக்குறை தொடர்பாக புள்ளி விவரத்துடன் சுட்டிக் காட்டினார்.

**காணாமற்போய்விட்ட மலையக தலைமைகள்**

இன்று நாட்டில் சுகாதார சீர்கேடுகளும் போசாக்கின்மை, தொற்றுநோய்கள், மரண வீதம், குறைப் பிரசவம் என்பன அதிகம் காணப்படுவதும் மலையகத்தில் தான். ஆனால் இது தொடர்பாகப் பேசுவதற்கு மலையகத் தலைவர்களில் ஒருவரைக் கூட சபையில் காணமுடியவில்லை.

**சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளேயின் ஆதங்கம்**

ஆளும்கட்சி உறுப்பினரான டொக்டர் சுதர்ஷினி பெர்ணாண்டோ புள்ளே பேசும் போது,

சமூகத்தில் காணப்படும் கலாசார சீர்கேடுகள் தொடர்பாகக் குறிப்பிட்டார்.

நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகமும் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. எமது பிரதேசத்தில் ஒரு தந்தையே தனது இரு புதல்விகளை வன்புணர்வுக்கு உட்படுத்தியாக முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.

இவ்வாறான துஷ்பிரயோகச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். குறிப்பாக வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களாக பெண்களை அனுப்புவது தடை செய்யப்படவேண்டும் எனும் ஆலோசனையை முன்வைத்தார் டொக்டர் சுதஷ்சினி பெர்ணாண்டோ புள்ளே.

சிறுவர் பராமரிப்பு மற்றும் மகளிர் விவகாரம் தொடர்பாக விவாதத்தில் பெண் உறுப்பினர்களே கூடுதலாக உரையாற்றினர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஒ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
07 டிசெம்பர் 2011 புதன்கிழமை

# இலங்கை முத்திரை பதிக்கப்பட்ட ஆயுதங்களுடன் வந்த கப்பல் குஜராத் நாவலாக்கி துறைமுகத்தில் தடுத்துவைப்பு

இந்தோனேசியாவிலிருந்து குஜராத்தில் உள்ள நாவலாக்கி துறைமுகத்துக்கு வந்த கப்பலில் இலங்கையின் முத்திரை பதிக்கப்பட்ட 392 தோட்டாக்கள் மற்றும் 4 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக இந்திய சுங்க வரி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த 4 துப்பாக்கிகளும் இலங்கை கடற்படை ஆயுதங்களை சேர்ந்தது என்றும் அந்த கப்பலில் 2 பாதுகாவலர்களும் வந்துள்ளதாகவும் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். இதுகுறித்து இலங்கை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு விசாரணை செய்யப் போவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தோனேசியாவிலிருந்து வந்த இந்தக் கப்பலில் இலங்கையின் முத்திரை இருந்தது. மேலும் நிலக்கரி வழங்க இந்த கப்பல் நங்கூரமிடப் பட்டிருந்தது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இதேவேளை சோமாலியர்களிடமிருந்து தங்களை காத்துக்கொள்ள இந்த ஆயுதங்களைக் கொண்டு போவதாக கப்பலின் தலைவர் முதற்கட்ட விசாரணையில் கூறினார்.

ஆனால் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஆயுதங்களுக்கு முறையான ஆவணங்களை சமர்ப்பிக்காவிட்டால் அவர்களுக்கு துறைமுகத்தை கடக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



அளவெட்டி அருணாசலம் வித்தியாலய ஆசிரியர் தின விழாவில் பாடசாலை அதிபருக்கு கிராம சேவையாளர் என். உமாகாந்தன் நினைவுப்பரிசில் வழங்குகின்றார். (வ-36)

# தான் பணிபுரிந்த எஜமானி வீட்டில் திருடிய இலங்கைப் பணிப் பெண்

இலங்கைப் பணிப்பெண் ஒருவர் துபாயில் தான் பணி புரிந்த வீட்டில் இருந்து 128, ஆயிரம் துபாய் திர்காம் பணம் மற்றும் 3 கையடக்கத் தொலை பேசி என்பவற்றைத் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை துபாய் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்றபோது முதலில் தமது குற்றத்தை குறித்த பெண் ஒப்புக்கொள்ளவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுச் சம்பவத்தை இலங்கைப் பெண் மறுத்ததால் அவரை சோதனை செய்யுமாறு கேட்கப்பட்டபின், பெண் பொலிஸார் குறித்த இலங்கைப் பெண்ணிடம் சோதனை செய்துள்ளனர்.

அப்போது அவரிடமிருந்து 1,520 துபாய் திர்காம் பணம் மற்றும் இரு கையடக்கத் தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கைப் பணிப் பெண்ணின் கை பையில் இருந்து 3,200 டுபாய் திர்காம்பணம் மற்றும் தொலைபேசி பண நிரப்பு அட்டைகள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க செய்தி இணையத்தளம்

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தள அறிமுக விழா கடந்த 26 ஆம் திகதி ஆயர் சவுந்தரநாயகம் ஊடக நிலையத்தில் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை மறைமாவட்டங்களில் தமிழ் கத்தோலிக்க செய்திகளை உத்தியோகபூர்வமாக அறிக்கையிடும் ஓர் இணையத்தளமாக இது செயற்படும். இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மறைமாவட்டங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் செய்திகளையும் இந்த இணையத்தளத்தில் முழுமையாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று ஆயர் சவுந்தரம் ஊடக இயக்குநரும் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தள ஆசிரியருமான அருள்திரு ரூபன் மரியாம் பிள்ளை அடிகளார் தெரிவித்தார். இந்த இணையத்தளத்தை tcnlnet.com எனும் முகவரியில் பார்வையிட முடியும். (வ)

# போலிக் கடவுச் சீட்டுடன் இலங்கைப் பிரஜை கைது

போலி கடவுச்சீட்டு மூலம் இலங்கைக்குச் செல்ல முற்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவர் இந்திய திருச்சி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

இலங்கையில் அக்பர்லேக் பகுதியைச் சேர்ந்த முகமது சரீப்பின் மகனான முகமது சப்ராப் (வயது 26) புடைவை வியாபாரமும் செய்து வருகிறார். வியாபாரம் சம்பந்தமாக இவர் அதிகமாக தமிழகத்துக்கு சென்று வருவார்.

இதேபோல் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தமிழகம் வந்த இவர் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இலங்கைக்கு திரும்பிச் செல் லாமல் தமிழகத்திலேயே தங்கி விட்டார். விசா முடிந்த பின்னர் அவர் சொந்த ஊருக்குச் செல்வதற்கு மாநகர பொலிஸ் ஆணையாளரிடம் சிறப்பு அனுமதி பெற வேண்டும். இவ்வாறு அனுமதி பெற்றால் மட்டுமே அவர் முறையாக இலங்கைக்கு திரும்பி செல்ல முடியும்.

ஆனால் முகமது சப்ராப் இவ்வாறு முறையாக செய்யாமல் இலங்கையில் உள்ள ஒரு முகவரைத் தொடர்பு கொண்டு புதிதாக ஒரு போலிக் கடவுச் சீட்டைத் தயார் செய்து இலங்கையில் இருந்து சென்னை வழியாக தமிழகத்துக்கு வந்தது போன்று போலியாக ஒரு முத்திரையையும் பதித்துள்ளார்.

இந்த போலிக் கடவுச் சீட்டை வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு திருச்சி விமான நிலையத்தில் இருந்து இலங்கை செல்லும் தனியார் விமானம் மூலம் அவர் இலங்கைக்குச் செல்ல முயன்றார்.

அப்போது விமான நிலைய குடிவரவு துணை பொலிஸ் அதிகாரி ஸ்ரீதர் அவரது கடவுச் சீட்டை வாங்கி ஆய்வு செய்த போது மேற்கண்ட விவரங்கள் தெரிய வந்தன.

இதனையடுத்து முகமது சப்ராப்பை அருகில் உள்ள விமான நிலைய பொலிஸில் அவர் ஒப்படைத்தார். (வ)

# வீதியில்வெள்ளம்; மக்கள் சிரமம்

நவாலி பிரசாத் சந்தை வீதி மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் சந்தைக்கு வரும் மக்களும் அந்த வீதியால் பிரயாணம் செய்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்படி வீதியில் குழிகள் காணப்படுவதாலும் வெள்ளம் செல்லும் வாய்க்கால் மிகச் சிறியதாக இருப்பதால் வெள்ளம் மிகவும் தாமதமாகவே வயலுக்குச் செல்கிறது. இதே வேளை இந்த வீதிக்கு முன்பாக தனியார் வைத்தியசாலை ஒன்றும் அமைந்துள்ளதால் அங்கு நோயாளிகளை ஏற்றி வரும் வாகனங்கள் மேற்படி சந்தைக்கு முன்னால் நிறுத்துவதாலும் சந்தைக்கு வருவோரின், சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பனவற்றை பாதுகாப்பில் விடாது இங்கு நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது. (வ-100)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக 01.12.2011 முதல் கடமையேற்றிருக்கின்ற

உயர்திரு

**கோ.வரதராஜமூர்த்தி**

அவர்களை அக மகிழ்வுடன் வரவேற்பதோடு அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று பல்லாண்டு காலம் சேவைபுரிய வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/விசுவமடு ம.வி, முல்லைத்தீவு.

(11310)(1,6,19)

## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



யா/மட்டுவில சாந்தநாயகி வித்தியாலய வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றி இளைப்பாறிய அதிபர்

**திருமதி வசந்தாதேவி வைகுந்தநாதன்**

அவர்களை மனமுவந்து பாராட்டுவதுடன் ஓய்வுகாலத்தில் நலன்கள் பலபெற்று குடும்ப உறவுகளுடன் குதூகலமாக மகிழ்வுடன் நீடூழி வாழவும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தி,
சாவகச்சேரி.

(சி-2879)(1,6,19)

## மணமகள் தேவை

பருத்தித்துறையைச் சேர்ந்த கௌரவ குடும்பத்திலான 32 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. போரில் கணவனை இழந்தவர்களும் தொடர்பு கொள்ளவும்: 0750389463

## கட்டடம் வாடகைக்குண்டு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் கே.கே. எஸ் வீதிக்கு 10 யார் தூரத்தில் 2200 சதுர அடி உடைய சகல வசதிகளும் கொண்ட கட்டடம் வாடகைக்குண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது). T.P. 0777162428

## வாகனம் விற்பனைக்கு

28 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய பாவனையில் உள்ள கன்டர் (250) ரக வாகனம் உடன் விற்பனைக்குண்டு.
T.P. 0212225051

## கார் வாடகைக்கு

திருமண வைபவங்களுக்கான சொகுசு கார் வாடகைக்கு உண்டு.
T.P. 0776544520

## HIACE VAN விற்பனைக்கு

252 XXXX இலக்க Dolphin van விற்பனைக்குண்டு. வெள்ளை, நீட்டு மொடல் Dual A /C, Alloy whell தொடர்பு: 0775430190, 0776121643

## அருள் முருகன் திருமண சேவை

Doctors, Engineers, Accountants, Lecturers, அரச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், வெளி நாடு மணமக்கள் மற்றும் தகுந்த மணமக்கள் தேவைக்கு தொடர்பு 0718475114. (கௌரவ சேவை), 03, யாழ் வீதி, சிறாம் பியடி லேன், (ஸ்ரான்லி வீதியில் ஆரியகுள சந்திக்கு கிட்டவாக உள்ள லேன்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியை செல்வி வி.கோமேஸ்வரி அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தின் சண்டிலிப்பாய் கோட்டத்தில் சிறந்த ஆசிரியராக தெரிவுசெய்யப்பட்டு நல்லாசிரியர் விருதினை பெற்றுள்ளார். அவரை பாராட்டி வாழ்த்துவதோடு அவரது சேவை மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ மாதகல் சென்.ஜோசப் ம.வி, யா/மாதகல் நுணசை வித்தி.

## வட இலங்கை சுதேச வைத்தியசபை

யாழ்ப்பாணம்

லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரி

**2012 ஆம் ஆண்டுக்கான ஆயுள்வேத டிப்ளோமா (DAM)**

கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

### அடிப்படைத் தகைமைகள்

வயது எல்லை

- 31.12.2011 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
- கல்வித்தகைமை க.பொ.த (உ/த) பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- தாய் அல்லது தந்தை பரம்பரை வைத்தியமாக இருந்தால் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவையில் விஞ்ஞானம், தமிழ் மொழி உட்பட சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 15.01.2012க்கு முன் அனுப்பி வைக்கவேண்டும்.
- கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் 2012 ஆயுள் வேத டிப்ளோமா கற்கை நெறி என்று குறிப்பிட்டு கீழ் உள்ள விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

அதிபர்,
லங்கா சித்த ஆயுள்வேத
வைத்தியக் கல்லூரி,
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

வடஇலங்கை சுதேச வைத்திய சபை
சுன்னாகம்,
யாழ்ப்பாணம். (11253)(6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறாவூர் பிரதேசத்தில் டெங்கு தீவிரம்; இதுவரை 600 பேர் நோயால் பாதிப்பு

**முழுப் பொறுப்பையும் மக்களே ஏற்கவேண்டும் என்கிறார் சுபைர்**

மட்டக்களப்பு,டிசெ.7

ஏறாவூர் பிரதேசத்தில் மட்டும் இதுவரை சுமார் 600 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கான முழுப் பொறுப்பையும் ஏறாவூர் மக்களே ஏற்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

கடந்த 3 மாதங்களிலேயே டெங்கு நோயினால் பாதிப்புற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பொதுமக்களின் அசமந்தப்போக்கும், ஒத்துழைப்பின்மையுமே இதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு சுகாதார அமைச்சு, மட்டக்களப்பு சுகாதார சேவைப் பணிமனை மற்றும் ஏறாவூர் நகரசபை என்பன டெங்கு



நோய் அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்தபோதும், பொது மக்களிடமிருந்து எமக்கு பூரண ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.

டெங்குநோய் தீவிரமடைந்ததற்கான எந்தவொரு பொறுப்பையும் சுகாதார அமைச்சோ அல்லது ஏறாவூர் நகரசபையோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அருந்தும் குடிதண்ணீரிலும் டெங்குநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த மத்திய சுகாதார அமைச்சின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளோம்.

ஏறாவூர் நகரில் 9,000 குடிதண்ணீர் கிணறுகள் உள்ளன. இவற்றுக்கு 'அபே' எனப்படும் மருந்துக்கலவையை விசுறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்துக் கலவை 2,000 கிணறுகளுக்கு இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதியாகவுள்ள 7,000 கிணறுகளுக்கும் இதனை பயன்படுத்த சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மஹிபால உறுதியளித்துள்ளார் - என்றார். (ச)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்து

தியத்தலாவை, டிசெ.7

மழையினால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏனையவர்களைப் போன்று வெள்ள நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் மலையகப் புத்திஜீவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக் காலமாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டு மிகவும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மழை காலங்களில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வது மிகவும் ஆபத்தானது.

மண் சரிவு, இடி மின்னல் மற்றும் காட்டாறுகள் பெருக்கெடுத்தல், கடும் குளிர் போன்ற காரணங்களால் அவர்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்க வேண்டிய நிலை ஏற்படும்.

அவ்வாறு வேலைக்குச் செல்லாத நாள்களில் தோட்ட நிர்வாகங்கள் சம்பளத்தை வெட்டிவிடுகின்றன. இவ்வாறான நிலைமைகளால் தொழிலாளர்கள் மழைகாலத்தில் இக்கட்டான நிலைக்குத் தள்ளப் படுகின்றனர்.

எனவே, மழைகாலங்களில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படவேண்டும் அல்லது அதற்குரிய நிவாரணத்தையாவது வழங்குவது காலத்தின் தேவை என்று மலையகத்திலுள்ள புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணப் பொருள்கள் வழங்கி வருவதுபோல் இவர்களுக்கும் நிவாரணம் வழங்குமாறு தோட்டக் கம்பனிகளுக்கு அரசு பணிப்புரை வழங்கவேண்டும் என்று மலையக புத்திஜீவிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# வர்த்தக நிலையத்தில் திருட்டு

தியத்தலாவை, டிசெ.7

வெல்லவாய பிரதேசத்தின் அத்திமலை நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றை உடைத்து, 4 லட்சத்து 68 ஆயிரத்து 225 ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று அத்திமலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளர் அத்திமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்திமலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உயரதிகாரிகளும், வெல்லவாய பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைந்து இரு நாள்களாக பிரதேசமெங்கும் சோதனை மேற்கொண்டபோதும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ச)



சப்ரகமுவ மாகாணத்தில் கல்விக்காக ஆற்றிய சேவைக்காக இந்தியாவில் மகாத்மாகாந்தி விருதுபெற்ற சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத்தை பிரதமர் டி.எம்.ஜயரத்ன மாலை அணிவித்துப் பாராட்டுகின்றார்.

**மருதமுனை வர்த்தக நிலைய திருட்டு:**

# இரவுநேர பாதுகாப்புக்கு 7 பேர் கொண்ட குழு நியமனம்

பெரியநீலாவணை, டிசெ.7

மருதமுனை வர்த்தக நிலையங்களில் இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களை நிறுத்தும் நோக்கில் கல்முனை பொலிஸாருடன் இணைந்து ஏழுபேர் கொண்ட குழுவொன்றை அமைத்து இரவுநேர பாதுகாப்பில் ஈடுபடுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

மருதமுனை வர்த்தக சங்கத்தினருக்கும் கல்முனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும் குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரியுமான எஸ்.எம். சதாத்துக்குமிடையில் மருத முனை மஸ்ஜிதுன் நூரில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கம் காணப்பட்டது.

வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.எம்.சபீக் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அண்மைக் காலமாக மருதமுனைக் கிராமத்தில் சிறுசிறு திருட்டுகள் மற்றும் கடை உடைப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. (ச)

# மலையக ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது

நுவரெலியா, டிசெ.7

சரக்கு ரயிலொன்று தடம்புரண்டதால் பாதிக்கப்பட்டிருந்த மலையக ரயில் சேவைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளன என்று மத்திய ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

ரயில் பாதையை சீர்செய்யும் பணிகள் நேற்றுமுன்தினம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

எரிபொருள் ஏற்றிச்சென்ற ரயில் கலபொட மற்றும் வட்டவளைக்கு இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தடம்புரண்டது.

இதனால் சுமார் 5,200 லீற்றர் டீசலை ஏற்றிச்சென்ற எண்ணெய்த் தாங்கிக்கு சேதம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கிழக்கு பல்கலையில் பொறியியல்பீடம்; அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

**நாடாளுமன்றில் செல்வராசா எம்.பி கோரிக்கை**

மட்டக்களப்பு,டிசெ.7

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சட்ட மற்றும் பொறியியல் பீடங்களை அமைக்கவும், நிரந்தர துணைவேந்தர் ஒருவரை நியமிக்கவும் உயர்கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

வரவு-செலவுத்திட்டத்தின் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

50 மாணவர்களுக்கும் குறைவாகவுள்ள 1,590 பாடசாலைகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. இவற்றுள் அதிகமானவை வடக்கு, கிழக்கில்தான் உள்ளன. இந்த நிலை தொடர்ந்தால் கல்வி நிலைமை மிக மோசமாகப் பாதிப்படையும்.



வரவு குறைதல் மற்றும் இடைவிலகல் போன்றவையே இந்த நிலைமைக்குக் காரணம். பெற்றோருக்குத் தொழில் இன்மை, அவர்களின் கவனயீனம் மற்றும் வறுமை போன்றவையே இடைவிலகல் மற்றும் வரவு குறைதலுக்குக் காரணம்.

இதை நிறுத்த தேசிய ரீதியில் நடவடிக்கை தேவை. மதிய உணவுத்திட்டம் மாத்திரம் இதற்குப் போதாது. இதற்குப் புறம்பாக வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

வருடந்தோறும் மூன்றரை லட்சம் மாணவர்கள் பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களுள் 25 ஆயிரம் மாணவர்கள்தான் பல்கலைக்கழகம் செல்கின்றனர். ஏனைய மாணவர்கள் தொழில்சார் கல்வி நிறுவனங்களை நாடவேண்டியுள்ளது. ஒரு லட்சத்து 65 ஆயிரம் மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையத் தவறுகின்றனர்.

பட்டதாரிகள் உருவாக்கப்பட்டு அவர்கள் வேலையில்லாப் பட்டதாரிகளாக ஆக்கப்படுகின்றனர். கிழக்கில் 6 ஆயிரம் பட்டதாரிகள் வேலையின்றி வீதிகளில் அலைகின்றனர். அரசு தொழில்சார் பட்டதாரிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மருத்துவப்பீடம் இருந்தும் பேராசிரியர் ஒருவர் இல்லை என்றால் அது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மட்டும்தான். இந்தக் குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். கிழக்குப் பல்கலைக் கழகத் திற்கு நிரந்தர துணைவேந்தர் ஒருவர் இன்னும் நியமிக்கப்படவில்லை. உடனடியாக தகுதிவாய்ந்த துணைவேந்தர் ஒருவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச)

# கடலில் குளிக்கச் சென்ற சிப்பாய் சடலமாக மீட்பு

திருகோணமலை, டிசெ.7

திருகோணமலை கடற்படை சிப்பாய் ஒருவரின் சடலம் கடற்படை முகாம் கடற்கரைப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டவர் குருநாகல், குளியாபிட்டிய பகுதியைச் சேர்ந்தவரும், திருகோணமலை கடற்படை முகாமில் கடமையாற்றும் மங்கல றங்கனாத் விஜேசேகர (வயது-35) எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை நண்பர்களுடன் கடலில் குளிப்பதற்காக சென்றபோது இவர் நீரில் மூழ்கியுள்ளார் எனவும், பின்னர் கடந்த ஞாயிற்றுக் கிழமை இவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சடலத்தை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் யூ.எல்.ஏ.அஸ்ஹர் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் வைத்தியரின் விசேட பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எதிலும் சிக்கனமாக இருப்பீர்கள். இரண்டு நாள்களாக இழுத்தடித்த வேலை ஒன்று இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். மாமன், மைத்துனர்கள் உங்களின் எண்ணம் போல நடந்து கொள்வர். குடும்பத்தினர் சிலர் உங்களின் பேச்சைக் கேட்காமல் நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். உதிரி வரவு கிட்டும்.

**இடபம்:**
பணப்பற்றாக் குறையால் சிலரிடம் திடீரென உதவி கேட்கலாம். ஒருவர் மீதுள்ள கோபத்தை நீங்கள் மற்றொருவரிடம் காண்பிப்பீர்க்ள். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். விருந்தினர்கள் சிலரின் வருகையை எதிர்பார்த்து வீட்டை அழகாக வைத்திருக்க முற்படுவீர்கள். மறதியால் அவதியுண்டு.

**மிதுனம்:**
கணிசமான பணவரவுகளைப் பெறலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். முக்கியஸ்தர்களின் சந்திப்பு நிகழும். யாரையும் நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் நீங்களே அனைத்து வேலைகளையும் செய்வீர்கள். சந்தோஷ செய்திகளைக் கேட்கலாம். நிம்மதி, சந்தோஷம் குடிகொள்ளும் நாள்.

**கடகம்:**
ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள் மூலம் சில உதவிகளைப் பெறலாம். அயலாரிடம் கலகலப்பாகப் பேசி அவர்களை மகிழ்விப்பீர்கள். பிள்ளைகளுக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுக்க கணிசமான தொகையைச் செலவிடலாம். வழக்கத்திற்குமாறாக கூடுதல் வேலைப்பளுஉருவாகும்.

**சிங்கம்:**
வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். உடல் நலம் இல்லாமல் இருக்கும் ஒருவரைப் பார்க்கலாம். சிலரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கலாம். உங்களுக்கு எதிரான சிலர், சிக்கலுக்குட்பட்டுக் கொண்டிருப்பது கண்டு சந்தோஷம் அடைவீர்கள். கேளிக்கை, கொண்டாட் டங்களில் நாட்டம் செல்லும். சோம்பல் ஆள்கொள்ளும்.

**கன்னி:**
நண்பர்கள், உறவினர்கள் சிலரை விமர்சித்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். புதிய முயற் சிகளைத் தவிர்க்க வேண்டும். சில பொருள்களை ஆசைப்பட்டு வாங்கியும் அதில் திருப்தி இல்லாமல் போகலாம். கவனக் குறைவைத் தவிர்க்கவும்.

**துலாம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளுக்காக அலைய நேரிடலாம். நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். நீங்கள் தேடிச்சென்ற போது சந்திக்க முடியாத ஒருவரை இன்று எதிர்பாராமல் சந்திக்கலாம். தற்பெருமையுடன் நடப்பீர்கள்.

**விருச்சிகம்:**
எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். நீண்டநாள் நண்பர்களின் யோசனையை கேட்டு சில விடயங்களில் செயற்பட முற்படுவீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறும் சூழ்நிலை உருவாகும். மாமன், மைத்துனர்கள் ஆதரவு கிடைக்கும். ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். அனுகூலமான நாள்.

**தனுசு:**
விருப்பம் இல்லாமல்,வேண்டா வெறுப்பாகச் சிலசெலவுகளைச் செய்யலாம். உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம். உடல் உபாதைகளால் உற்சாகம்குறையும். திடீர் பயணம் செல்லலாம்.

**மகரம்:**
நீண்ட பயணங்களால்உடல் அசதி, சோர்வு ஆள்கொள்ளும். பெண்கள் உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை நீங்கள் மற் றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். கடந்த காலத்தில் உதவிசெய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். விரும்பாத ஒருவரை நீங்கள் செல்லும் இடத்தில் சந்திக்கலாம்.

**கும்பம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். உங்களிடம் உதவிகளைப் பெற்ற வர்கள் பாராட்டுவர். நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் உங்களின் ரகசியங்களைச் சொல்வீர்கள். நேற்று வராமல் தடைப்பட்ட பணவரவு ஒன்று இன்று வரலாம். நீண்ட நாள்களாக இழுபறியில் இருந்த காரியம் முடிவுக்கு வரும். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும்.

**மீனம்:**
பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம். வீடு, வாகனங்களைப் பராமரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். எப்படியும் முடிந்து விடும் என்று நினைத்த காரியம் ஒன்றில் தடை ஏற்படலாம். அவசரத் தேவைக்காக சிலரிடம் பணம் கடன் வாங்கலாம். வாக்குவாதம் வேண்டாம்.

# ‘தப் ...
## ஒடுக்கப்பட்ட ...
# ஆயு ...

மண்ணின் மைந்தர்களான ஆதி தமிழர்கள் சாதியக் கட்டமைப்புக்குள் சிக்க வைக்கப் பட்டுத் தாழ்த்தப்பட்டவர்களாக்கப்பட்ட நிலை இன்னும் மாறவில்லை. சாதியின் பெயரால் அவர்கள் தொடர்ந்தும் ஒடுக்கப் படுகிறார்கள் என்கிறார் ஆடலரசு வேணு. சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி ஆதித் தமிழன் விடுதலைக்காக உழைக்கின்ற ஓர் அமைப்பில் இயங்கக்கூடிய சமூகப் போராளியாகத் தன்னை இனங்காட்டிக் கொள்ளும் ஆடலரசு வேணுவின் இயற் பெயர் வெங்கடேசன் வேணுகோபால். இவர் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற செயல்திறன் அரங்க இயக்கம் (Active Theatre Movement - ATM) என்கின்ற தொழில்சார் நாடக நிறுவனத்தின் அழைப்பின் பேரில் நவம்பர் மாத இறுதியில் இருந்து ஒரு வார காலம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து நாற்பது இளைஞர், யுவதிகளுக்கு தமிழர்களின் நாட்டார் கலைகள் தொடர்பான பயிற்சியை வழங்கியிருந்தார். பயிற்சி முடிவில் டிசெம்பர் நான்காம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரி ஆகியவற்றில் சிறப்பான நிகழ்ச்சிகளையும் வழங்கி இருந்தார். உதயன் சார்பில் அவருடன் சிறிது நேரம் உரையாடினோம்.

*உங்களைப் பற்றி சொல்லுங்கள்...*

சென்னையிலிருந்து 40 கிலோ மீற்றர் தூரத்திலிருக்கின்ற முறிச்சம்பேடு கிராமத்தைச் சேர்ந்தவன். சட்டத்துறையில் பட்டம் பெற்றிருக்கிறேன். சட்டத்தரணியாகப் பணியாற்றுவதுதான் எனது எதிர்காலத் திட்டம். இடையே, சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை (எம்.ஏ.) இதழியல் கற்றுக் கொண்டிருக்கிறேன். நாங்கள் கூட்டுக் குடும்பம் எனது மாமாதான் எங்களையெல்லாம் படிக்க வைத்தார். வீட்டில் பிள்ளைகள் நாங்கள் மூன்று பேர். தம்பியும் தங்கச்சியும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரையும் மாமா தான் படிக்க வைக்கிறார். எங்கள் கிராமத்தில் நான்தான் முதலாவது பட்டதாரி. ஆதித் தமிழர் விடுதலை இயக்கத்தின் கலைக்குழுத் தலைவராக இருக்கிறேன்.

*கலைத்துறை ஈடுபாட்டுக்கு உந்து சக்தியாக இருந்தது எது?*

தாத்தா ஓர் கூத்துக் கலைஞர். ஆனால் அதன் தொடர்ச்சி எமக்குக் கிடைக்கவில்லை. இடையில் அறுபட்டுப் போய்விட்டது. பின்னர் என்னுடைய மாமா ஊடாகவே கலைத்துறை ஈடுபாடு ஏற்பட்டது. தாத்தாவிடம் அவர் கற்றுக் கொண்டவற்றை எமக்கு கற்றுத் தந்தார். பல கலைஞர்களை ஊருக்கு வரவழைத்து முறைப்படி தப்பு இசையைப் பழக்கினார். தப்புதான் எமக்கு முக்கியமானது. மற்றையவற்றைத் துணையாகக் கற்றுக் கொண்டோம்.

தமிழ் நாட்டில் ஆதித் தமிழர் விடுதலை இயக்கத்தின் கலைக் குழு முக்கியமானது. அதில் இணைந்து செயற்பட்டதுதான் எனக்கான தூண்டுதலாக அமைந்தது. குழுவின் நான்காவது தலைமுறையைச் சேர்ந்தவன் நான். இப்போது இதனை நடத்துகின்ற பொறுப்பை நான் ஏற்றிருக்கின்றேன்.

*உங்களது செயற்பாடுகளை, எத்தகைய கொள்கை சார்ந்து முன்னெடுக்கிறீர்கள்?*

பெரியாரினது சாதி மறுப்பு, மற்றும் மத மறுப்பு கொள்கையைத்தான் நாங்கள் வரிந்துகொண்டுள்ளோம். தொல்குடித் தமிழர்களின் அடையாளமாக தப்பு இசையைக் கருதுகிறோம். அதனால் அதனை மீட்டுருவாக்கம் செய்ய அவாப்படுகிறோம். அதனோடு எம்மை அடையாளப்படுத்த வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கின்றோம்.

ஒடுக்கப்படுகின்ற இனங்கள் எல்லாம் தமது விடுதலைக்கான அடையாளமாகத் தமது பாரம்பரியக் கலைகளையே கருதியிருக்கிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான ஆயுதமாகவே கலைகளைப் பார்க்கவேண்டும். நாங்களும் தப்பு இசையை விடுதலைக்கான ஆயுதமாகவே பார்க்கிறோம்.

பேச்சால் சொல்ல முடியாததை [illegible] இசை [illegible] கொண்டு சேர்க்க



யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ...
மூன்று இடங்களில் அவர்களின் ஆற்றுகைகள் ந...



வேணுவால் பயிற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாணத்து மாணவர்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலையரங்கில் தப்பு வாசித்தபடியே ஆடுகிறார்கள் வேணுகோபாலும் அவரது மாணவர்களும். நேற்று வரையில்
ற்றுகைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

# ப்பு’
# ட்ட மக்களின்
# யுதம்

முடியும். தப்பு எமது மூதாதையர்கள் பயன்படுத்திய தொடர்பு சாதனம். திரிபு வாதத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்ட ஆயுதமாகவே நாங்கள் இதைப் பயன்படுத்துகின்றோம். நான் இந்தியன் என்று சொல்வதைவிட ஒரு தமிழன் என்று என்னை அடையாளப் படுத்துவதற்கான ஆயதமாகவே தப்பு இசையைக் கருதுகின்றேன். கலை, விடுதலைக்கான ஆயுதம்.

*உங்களது இந்த பயணம் வெற்றியை நோக்கிச் செல்கிறதா?*

வெற்றிக்கான பாதையைத் தேடிக்கொண்டிருக்கிறோம் என்றே சொல்லலாம். வெற்றியை நோக்கி செல்கிறோம் என்றும் சொல்லலாம். நிறையத் தடைகள் இருக்கின்றன. எம் மத்தியிலே இன்றும் வலுவாகக் காணப்படுகின்ற சாதியக்கட்டமைப்பு, அரச கெடுபடி, தப்பு இசையைத் தாழ்ந்ததாகப் பார்க்க வைத்திருக்கிறது. பரதநாட்டியம் போன்றவற்றை உயர்வாகப் பார்க்கிற போது தப்பு இசையைத் தாழ்வாகப் பார்ப்பது, ஒடுக்கப்பட்டோர் தொடர்ந்தும் வறுமையில் வாடுவது, சினிமாவின் ஊடாக நாட்டார் கலைகள் பற்றிக் கொடுக்கப்படுகின்ற பிழையான கருத்துருவாக்கங்களால் ஏற்படும் திரிபுவாதம் என்பன எமது வெற்றிப் பயணத்துக்கான தடைகள். அவற்றைக் களைந்தெறியும்போது எமது பயணம் முழுமையான வெற்றியைப் பெறும்.

*சென்னைப் பல்கலைக்கழகத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், கலை சார்ந்தும் கல்வி சார்ந்தும்?*

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடர்பியல் மற்றும் இதழியல் துறையில் முதுகலை கற்று வருகிறேன். 2009ஆம் ஆண்டு உங்கள் மண்ணிலிருந்து (யாழ்ப்பாணம்) சென்னை பல்கலைக்கழகத்துக்கு கற்க வந்திருந்த தே.தேவானந்த் அங்கு “முற்றம்” என்ற கலைக் குழுவை ஆரம்பித்திருந்தார். அந்தக் குழு மூலமாக ‘விட்டில்கள்’ என்ற நாடகம் ஒன்றையும் எழுதி, நெறிப்படுத்தி மேடையேற்றியிருந்தார். அந்த நிகழ்வில் தப்பு இசை நிகழ்த்துவதற்காக ஆதித் தமிழர் கலைக்குழுவை, அப்போது இதழியல் மாணவராக இருந்த அருட்தந்தை சகாயராஜ் அழைத்திருந்தார். அதிலிருந்து தான் இதழியல் துறை தலைவர் மற்றும் பேராசிரியர் கோ.ரவீந்திரனின் அறிமுகம் கிடைத்தது. தேவாண்ணாவின் தொடர்பு கிடைத்தது.

அதன் பின்னர் எனக்கும் ஆர்வம் ஏற்பட்டதால் அதே இதழியல் துறையில் மாணவனாக இணைந்து கொண்டேன். ‘முற்றம்’ கலைக்குழுவை இப்போது தலைமை தாங்கி நடத்தி வருகின்றேன். பேராசிரியர் கோ.ரவீந்திரன் கலைவளர்க்கும் ஆர்வம் கொண்டவர், சமூக முற்போக்குவாதி. அவரின் முயற்சியால் இன்று பல்கலைக்கழகத்தில் தப்பு இசையைத் தொடர்ந்து கேட்க முடிகிறது. ஏற்றத்தாழ்வுகள் தாண்டி மாணவர்கள்

(26 ஆம் பக்கம் பார்க்க)



து மாணவர்கள் சாட்டைக்குச்சி ஆட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

## இன்னும் கொஞ்சம் முன்னேறு



ஓர் அழகான காடு. அதில் மரங்கள் வலை பின்னியிருந்த இலைப் பந்தலின் கீழ் முனிவர் ஒருவர் இருந்தார். அந்தக் காட்டின் முகப்புப் பகுதியில் ஒரு முதியவர் விறகு சேகரித்துக் கொண்டிருந்தார். முனிவருக்குத் தெரிந்து பத்துப் பன்னிரண்டு வருடங்களாக அந்தக் கிழவர் சுள்ளி பொறுக்கி, சிறு மரங்களைப் பிளந்து விறகு சேகரித்து நகரில் விற்று தன் கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழி செய்து கொள்வார்.

திடீரென்று ஒரு நாள் முனிவருக்கு அந்தக் கிழவர் மீது கருணை பிறந்தது. அடிக்கடி அந்தப் பெரியவரை அவர் பார்க்க நேர்ந்தாலும் இதுவரை எதுவும் பேசியதில்லை. முனிவர் முறுவலித்தார். கிழவர் கையெடுத்துக் கும்பிட்டார். முனிவர் கையை உயர்த்தி ஆசீர்வதித்தபடி ‘இன்னும் கொஞ்சம் முன்னேறிச் செல்’ என்று கூறிவிட்டு நகர்ந்து விட்டார். இன்னும் கொஞ்சம் முன்னேறிச் செல் என்ற கட்டளை மிகப் பெரிய மந்திரம்போல் இருந்தது முதியவருக்கு. காட்டுக்குள் கொஞ்சம் முன்னேறினார். என்ன ஆச்சர்யம்... வெட்ட வேண்டிய சிரமம் இல்லாமலேயே நிறைய மரக்கிளைகள் முறிந்து கிடந்தன. மகிழ்ச்சியுடன் அள்ளிச் சென்று விற்றார். அவர் வயிறு நிரம்பியது.

முனிவர் சொன்ன முந்திர மொழி காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.... இன்னும் கொஞ்சம் முன்னேறினார். கமகம என்ற வாசனை வைத்தது..... அத்தனையும் அரிய வகை சந்தன மரங்கள். முதியவருக்கு இனிமையானது.

மறுபடி மறுபடி மந்திரம் அவரை உந்தியது. இன்னும் முன்னேறினார்... அரிய வகைக் கற்கள் வைர, வைடூரியங்கள் அவருக்கு அகப்பட்டன. அத்தனையும் ஆயிரம் ஆயிரமாய் அவருக்கு அள்ளித்தந்தன. அவரது வாழ்வே மாறி முற்றிலும் வளமான வாழ்வு வாய்த்தது.

ஊன்றிக் கவனித்தால் இந்த மந்திரம் நமது வாழ்வையே புரட்டிப் போடும் வல்லமைமிக்கது என்பது புலனாகும்.

ஒவ்வொரு துறையிலும் பலர் வெளியிலேயே சுள்ளி பொறுக்கிக் கொண்டு சாதாரண சராசரி வாழ்வு வாழ்கிறார்கள். கொஞ்சம் கவனத்துடன், துணிவுடன் முன்னேறிப் போகப் போக வாழ்வில் சந்தனம் மணக்கிறது. வைர, வைடூரியங்கள் கிடைக்கின்றன. இதற்கு என்ன தேவை? முன்னேற வேண்டும்......மேலும் முன்னேற வேண்டும் என்கின்ற ஆர்வம், கொஞ்சம் துடிப்பு, இவைதான் தேவை.

இந்த இயல்பு உள்ளவர்கள் உயர்கிறார்கள் வளர்கிறார்கள்.... உலகையே மாற்றியமைக்கும் உன்னத மனிதர்களாகிறார்கள். எதைச் செய்தாலும் இவர்கள் திருப்தி அடைவதில்லையே என்று மற்றவர்கள் இவர்களைக் குறை சொல்வார்கள். தயவு செய்து அதைப் பெரிது படுத்தவேண்டாம். அதிருப்திதான் புதிய புதிய கண்டுபிடிப்புகளை உண்டாக்கியிருக்கின்றது. கட்டை வண்டியில் கடக் கடக்கென்று முதுகெலும்பு முறியப் போய்க் கொண்டிருந்த மனிதனை விமானத்தில் மணிக்கு இரண்டாயிரம் மைல் வேகத்தில் காற்றைப் போல்பறக்க வைத்திருப்பது அதிருப்திதான்.

எந்த வேலை செய்தாலும், “இதை இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்ய முடியுமா? இன்னும் கொஞ்சம் நிறைவாகச் செய்ய முடியுமா? இன்னும் கொஞ்சம் எளிமையாகச், அதிக சிரமம் இல்லாமல் செய்ய முடியுமா?” என்று தயவு செய்து யோசியுங்கள். நீங்கள் முன்னேற்றம் அடைவது நிச்சயம். நீங்கள் செய்து முடித்த வேலையை இன்னும் கொஞ்சம் சிறப்பாகச் செய்யலாம் என்று உங்கள் மேலதிகாரியோ, முதலாளியோ, வாடிக்கை யாளரோ, நண்பரோ சொன்னால் முகம் கறுத்து வாடிவிடாதீர்கள். கோபப்படாதீர்கள். எப்படி.... எப்படி இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்ய முடியும் என்று உற்சாகத்துடன் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். இது தான் முன்னேற்றத்தின் மூலமந்திரம்.

ஒரு வீட்டில் மனைவி பரிமாற கணவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். திடீரென்று, “என்ன குழம்பு இது.. வாயில் வைக்க முடியவில்லையே!” என்று கணவன் கோபப்பட்டால் நல்ல குடும்பத்தில் பிறந்த பெண் என்ன கேட்பாள். ‘ஏன்... குழம்பு சரியா கொதிக்கலையா? உப்பு குறைவா? காரம் கூடிவிட்டதா? என்ன தப்பு.. என்ன செய்தால் அந்தக் குடும்பம் முன்னுக்கு வரும்.

இப்படி குறைசொல்பவர்களிடமே என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டால் அதில் இன்னொரு நன்மையுண்டு. திடீரென்று அவர் என்ன செய்யவேண்டும் என்று சொல்லத்தெரியாததால், “இதுவே சரியாத்தான் இருக்கு... இப்படியே விட்டுவிடு” என்று கூட சொல்லி விடுவார்.

“போதும்... போதும்..... இதுவே போதும்..” என்று மனைவி சண்டைக்கு வந்தால் குடும்பமா அது! இன்னும் சில வீடுகளில் “இவ்வளவுதான் என்னால் முடியும்.... இதுக்குமேல் நல்லா வேண்டும் என்றால் நீங்கள் வேறு ஏதாவது ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்” என்பார்கள்.

இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்யலாம் என்கிற எண்ணம் சமயலில் இருந்து சகலத்திலும் இருக்க வேண்டும்.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிக்கப்பட வேண்டிய மனித உரிமைகள்

இன்றைய சமகால சர்வதேச அரசியலில் நாடுகளின் அபிவிருத்தியை அளவிடுகின்ற அளவீடுகளில் முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் பார்க்கப்படுகின்றது மனித உரிமை. நாடுகளுடைய பொருளாதாரம், பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண், நாட்டின் பொருளாதார, சமூக உட்கட்டமைப்பு வசதிகளுக்கு அப்பால் நாட்டின் மனித உரிமைகள் தொடர்பான பாதுகாப்பு, தனிமனித உரிமைகளின் மதிப்பு போன்றன முக்கியமானவையாகவும் பேணப்பட வேண்டியவையாகவும் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

மனித உரிமைகள் என்பது 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப் பட்டது. இதுவே நாடுகளின் மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையாகும். இந்தப் பிரகடனம் மனித குடும்பத்தைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும் சமமானதும் பராதீனப்படுத்த முடியாததுமான உரிமைகளை உள்ளடக்கி உள்ளது.

**10.12.2011 மனித உரிமைகள் தினம்**

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் மனிதனுக்கு அவசியமான உரிமைகளை உள்ளடக்கிய 30 உறுப்புரைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இந்தப் பிரகடனத்தில், சொல்லப்பட்ட அனைத்து உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள அனைத்து நாடுகளிலும் செயற்படுத்தப்பட வேண்டியது கட்டாயம். 1968 ஆம் ஆண்டு மனித உரிமைகளுக்கான சர்வதேச சம்மேளனத்தில் இவை வெளியிடப்பட்டன.

மனித உரிமைகளைப் பின்பற்றுவதற்கு கைச்சாத்திட்ட நாடுகள் அந்த நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள் போன்றவற்றில் மனித உரிமைகளை உள்வாங்கிக் கொள்கின்றன.

இதனை அடிப்படையாகக் கொண்டே இலங்கை அரசும் முதன்முதலாக 1972 ஆம் ஆண்டு முதலாவது குயடிரசு அரசமைப்பில் 18 ஆம் சரத்தின் முதலாம் பிரிவில் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் என்ற அம்சத்தை உள்ளடக்கியது.

எனினும் அவை மீறப்படும் சந்தர்ப்பத்தில் எந்த விதமான சட்டரீதியான பரிகாரங் களைப் பெறக்கூடிய வாய்ப்புக்களை அந்த அரசமைப்பு தரவில்லை. பின்னர் 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசமைப்பில் மூன்றாவது அத்தியாயத்தில் 10 தொடக்கம் 14 வரையான உறுப்புரைகள் அடிப்படை உரிமைகள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளன. அந்த உரிமைகள் மீறப்படுகின்றபோது அதற்கு எவ்வாறு பரிகாரம் பெறுவது என்றும் 1978 அரசமைப்பில் கூறப் பட்டுள்ளது.

ஒவ்வொரு நாடுகளும் தங்களுடைய அரசமைப்புக்களில் மனித உரிமைகள் தொடர்பான அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளபோதும் இவை எந்தளவுக்கு அந்த நாட்டு அரசுகளால் மதிக்கப்படுகின்றன என்பது கேள்விக்குரியது.

நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கு இடையிலும் கூர்மையடைந்து வருகின்ற இன, மத, மொழி, முரண்பாடுகள் எந்தளவுக்கு மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றன என்பது ஆராயப்பட வேண்டியது.

இன்று உலக வல்லரசாகத் தன் னைக் காட்டிக் கொள்ள முனைகின்ற அமெரிக்கா சர்வதேச அரசியலில் மனித உரிமைகளை வலியுறுத்துகின்ற அதேவேளை எந்தளவுக்கு அதனை மதிக்கின்றது என்பது நோக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். வெள்ளையன், கறுப்பினத்தவன் என்ற வேறுபாடும், இஸ்லாமியன், கிறிஸ்தவன் என்ற வேறுபாடும் மேலைத்தேய நாடுகள், கீழைத்தேய நாடுகள் என்ற வேறுபாடும் அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்ற வேறுபாடுகளும் மனித உரிமைகள் என்ற விடயத்தை மௌனிக்கச் செய்வதாகவே உள்ளன.

இந்த வேறுபாடுகள் எல்லாம் கடந்து 'மனிதம்' என்பது எப்பொழுது முற்று முழுதாக உணரப்படுகின்றதோ அன்றே மனித உரிமைகள் பூரணமாக மதிக்கப் படுகின்ற நிலை தோன்றும்.

இயற்கையாகக் காணப்படுகின்ற மலைகள், குன்றுகள், ஆறுகள், கடல்கள், பாறைகள், ஏரிகள் என்பவற்றைக் கடந்து ஒரே உலகம், ஒரே மக்கள் என்ற உணர்வு சர்வதேச ரீதியாக வளர்க்கப்பட வேண்டியதாகக் காணப்படுகின்றது.

இன்று அபிவிருத்தி அடைந்து வருகின்ற ''மனித உரிமைகள்'' என்ற எண்ணக்கருவானது எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒரு விடயமாக வளர வேண்டும்.

ஒருவன் எப்பொழுதும் தன்னுடைய உரிமைகளைச் சிறப்பாக அனுபவிக்க வேண்டும் என்று எண்ணுபவன். அதே போல மற்றவர்களுடைய உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா? பேணப்படுகின்றனவா? என்பதனை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சில நாடுகளில் அந்த நாட்டு அரசினாலேயே மக்களது உரிமைகள் மீறப்படுகின்றன. இதனை யார் தட்டிக் கேட்பது? அதற்கான பரிகாரங் களை சர்வதேச நீதிமன்றத்தினூடாகப் பெறக்கூடிய நிலைமை இனிவரும் காலங்களில் உருவாக்கப்பட வேண்டும். இதற்கான பூரண ஆதரவை சர்வதேச சமூகம் வழங்குவதன் மூலம் சிறு பான்மை இனங்கள் மனித உரிமை மீறலுக்கு உள்ளாவதைத் தடுத்துக் கொள்ளலாம். மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு அனைத்து மக்களிடமும் ஏற்படவேண் டும்.

ஐக்கிய நாடுகள் சபை அதிகார அரசியல் என்ற நிலையில் இருந்து முற்றாக விடுபட்டு சுயாதீனமாக செயற்படுவதன் மூலம் மனித உரிமைகளைப் பேண முடியும். ஐக்கிய நாடுகள் சபையும் அதனுடன் இணைந்த துணை நிறுவனங்களும் மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக அயராது உழைக்க வேண்டும்.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனமாகி 63 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்கின்ற இந்த வேளையில் மனித உரிமை தொடர்பிலான மதிப்பை சர்வதேச மட்டத்தில் அதிகரித்து உலக மக்களது உரிமைகளைப் பேணி உலக சமாதானத்தை நிலை நிறுத்த வேண்டும். ✱

த.விமல்ஷினி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
16.06.1920

உதிர்வு
08.11.2011

அமரர்
**மயில்வாகனம் கந்தையா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

08.11.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு நாளை (08.12.2011) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும். வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து கொழும்பிலும், சிறுப்பிட்டியிலும் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. (11330)(2-6-19)

## விற்பனைக்கு

தறிக்கப்பட்ட இலுப்பை மரம் (அடிப்பகுதி 6'சுற்று) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776576025

## யாழ் நகரில் புதியதோர் உதயம்

**High way Education Center**

நக்கா வீதி, மருதடி லேன்
(பொஸ்கோ பாடசாலை அருகில்)

**தரம் 02,03,04,05 இற்கான வகுப்புகள் ஆரம்பம்**

✱ பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
✱ 08.12.2011 இல் இருந்து அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**15.12.2011 இல் ஆரம்பம்**

தொடர்புகளுக்கு :
0775026578, 0773132174

(11328)(6-19-8)

## வீடு தேவை

சுன்னாகம் தொடக்கம் கோண்டாவில் வரை K.K.S வீதியில் அல்லது கிட்டிய தூரத்தில் வீடு வாடகைக்குத் தேவை. மாதாந்தம் ரூ.10,000/= (பத்தாயிரம்) வாடகை தரப்படும். இணுவில் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0770440570, 0771393670

## விற்பனைக்கு

C.I.C கோழிக் குஞ்சு (தரமானது) எடுத்துக் கொடுக்கப்படும் .
T.P: 0778806952

## விற்பனைக்கு

கடைக்குப் பயன்படுத்தக் கூடிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777732863

## விற்பனைக்கு

பல்வேறு அளவிலான சேர்ட் வகைகள் மொத்தமாக விற்பனைக்குண்டு.
(வியாபா ரிகள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0776701495

## அறிவித்தல்

## இலங்கை வங்கி

அதிமேற்தரக் கிளை - யாழ்ப்பாணம்.

*எமது வாடிக்கையாளர் சேவையின் ஓர் அம்சமாக மேலும் ஒரு தொகைப் பாதுகாப்புப் பெட்டிகளை (Safety Lockers) வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே புதிதாக பாதுகாப்புப் பெட்டி களைப் பெறவிரும்புவோர் உடனடியாக தங்களின் விவரங்களைக் கொடுத்து முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

*முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இச்சேவையை வழங்க இருப்பதால் முற்பதிவுகளை உடனேயே செய்துகொள்ளுங்கள்.*

*மேலதிக விவரங்களுக்கு முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும்.*

*பிரதான முகாமையாளர்,*
*இலங்கை வங்கி, அதிமேற்தரக் கிளை*
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

(சி-6643)(1,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கலாசார விழாவில் நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வை படத்தில் காண்கிறீர்கள். (எ–26)

# ஆசிரியர், பெற்றோர்களின் செயற்பாட்டில் மாணவர்கள் கல்வியில் முன்னேற முடியும்

## வணபிதா சகாயநாயகம் அடிகளார் தெரிவிப்பு

குருநகர், டிசெ.7

கல்வி மனிதனைப் பண்புள்ள நல்ல பிரஜையாக மாற்றுகிறது என யாழ்.மறைக்கோட்ட முதல்வர் வணபிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார்.

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் பரிசுத் தினம் கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்.செபமாலைத்தாசர் சபையின் தலைவர் வண.பிதா பிரான்சிஸ் ஜெயம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரை வழங்கிய போதே வணபிதா ஆர்.எச்.சகாயநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்:

ஒருபாடசாலையின்வளர்ச்சியில் பரிசளிப்புத் தினம் மிக முக்கியமானது. இத்தினம் பாடசாலையில் வருடாவருடம் நடத்தப்படுவது அவசியம். பிரித்தானியர் வருகையின்பின்னர் எமது கல்வியில் பாரிய மாற்றமேற்பட்டது. கல்வி வளர்ச்சியடைந்தது. கல்வி மனிதனை முழுமையடையச் செய்தது. எமது மண்ணில் நடைபெற்ற யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர். இதனால் எமது கல்வி பாதிப்படைந்தது.

தற்போது எமது மண்ணில் அமைதி உருவாகியுள்ள போதிலும் பல தீய சக்திகளினால் எமது கலாசாரம் சீரழிந்து செல்கிறது. இக்கலாசார சீரழிவுகளில் எமது மாணவர்கள் சிலரும் சிக்குண்டுவருவது எமக்கு மனவேதனையை உருவாக்கியுள்ளது.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் சமூகமும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் எமது மாணவர்களின் கல்வியில் வளர்ச்சியை உருவாக்க முடியும். கலாசார சீரழிவிற்குள் ளாகும் மாணவர்களையும் நல்ல பாதைக்கு கொண்டு செல்ல முடியும்.

வீட்டின் சூழலும், சமூக சுற்றாடலும் மாணவர்களின் கல்விக்கு துணை நிற்க வேண்டும்.

மாணவர்கள் கல்வி கற்பதன் மூலம் சமுதாயத்தில் சாதனையாளர்களாகவும், மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவும் மாற முடியும். கல்வியைத் தமதாக்கிக் கொள்வது மாணவர்களது கடமையாகும். மாணவன் சிறந்த கல்வியைப் பெற்று உயர்வடைவதற்கு தேவையான அனைத்து விடயங்களையும் மாணவர்களின் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் கல்வி மூலம் தமது எதிர்காலத்தினை வளப்படுத்திக் கொள்ள முடியும். (எ-51)

# மாற்று வலுவுள்ள கலைஞர்களின் கலை நிகழ்வுகள்

கைதடி, டிசெ.7

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச தேவைக்குட்பட்டோர் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வொன்று கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ஆ.மகேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் கலைப் பீடாதிபதி இரா.சிவசந்திரனும் திருமதி சறோஜா சிவசந்திரனும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட சமூக சேவை அலுவலர் ஏ.ஞானவேலும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களத்தின் கணக்காளர் பி.அகிலன், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் மாற்று வலுவுடையோர்களின் நடனம், நாடகம் மற்றும் இன்னிசை ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (எ-288)




பனை மரக்காட்டுக்குள்ளே வழிகாட்டும்

**“திசைகாட்டி”** தற்போது புதிய நிர்வாகக் கட்டமைப்புடன் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக..........

கல்வி வியாபாரப் பிரிவு.
ஆங்கிலக் கல்வி:
7 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கானது. **TKY07**
(யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக அகலத்திரையில் புறஜெக்ரர் மூலம் இளவயதினருக்கு கற்பித்தல் எமது நிறுவனத்தில் மாத்திரமே)
ஆங்கில எழுத்துக்களை உறுப்பமைய எழுதப்பழகக்கல்.
சொற்பிரயோகம், வசனம் அமைத்தல், கட்டுரையாக்கம்.
இலக்கண வேதனையின்றி பேச்சு ஆங்கிலமும் விளங்கிக் கொள்ளலும்.
பாடல்கள், கதைகள், ஆங்கிலப் பத்திரிகைகள்.
இக்கற்கை நெறி பிரபல நிபுணர்களால் குழந்தைகள் உளவியலுக்குட்பட்டுத் தயாரிக்கப்பட்டது.
அத்தோடு மாதாந்தம் பெற்றோர்களுடனான சந்திப்பு
மாதாந்த தர மதிப்பீடு
கற்கைநெறியின் பாதியில் உங்கள் குழந்தைகளின் ஆற்றல்கள் வெளிக்கொணருமுகமாக அரங்க செயற்பாடுகள்

தரம் 5 மாணவர்களுக்கானது. **TKY05**
புலமைப்பரிசிலில் சித்தியடைந்த சித்தியடையாத ஆங்கில மொழி மூலம் கல்வி பயில விழையும் மாணவர்களுக்கான விசேட 3 மாதகாலக் கற்கை நெறி.
(யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக அகலத்திரையில் புறஜெக்ரர் மூலம் இளவயதினருக்கு கற்பித்தல் எமது நிறுவனத்தில் மாத்திரமே)

தரம் 6 மாணவர்களுக்குரியது: **TKY 06**
எம்மிடம் தரம் 5 இற்குரிய TKY05 கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்குரிய 1 வருட விசேட கற்கைநெறி.
தரம் 6 இற்குரிய ஆங்கிலப்பாடவிதானம், விஞ்ஞான, கணித, பூகோளவியல் கலைச்சொற்கள்.

வளர்ந்தோருக்கு:
வாழ்நாள் ஆங்கிலம்: **TKY EL**
பாடசாலைக் கல்வியை முடித்தோர்,
பல்கலை மாணவர்கள்,
தொழில் புரிவோர்கள்,
ஏற்ற
இலக்கண வேதனையின்றி பேசும் ஆங்கிலம்
சொற்கள் அறிமுகம்
ஆங்கிலப் பத்திரிகைகள்
ஆங்கிலச் செய்திகள்
அனைத்தும் அகலத்திரையில் புறஜெக்ரர் உதவியுடன்.
அவரவர் வயதுக்கும், தொழிலுக்கும் ஏற்ற தனித்தனிப் பிரிவுகள்.

திசைகாட்டி நிர்மாணிக்கப்பட்டதன் பின்னணி......

இது இலாப நோக்கான வியாபார நிறுவனமாக இருந்தபோதும் காலத்தின் தேவை கருதியே யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது காலத்தின் தேவை என்ன?
யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக இளைஞர் யுவதிகள் கல்வி கற்பதற்கான 'மாணவர்களுக்குரிய விசா' மீது அதிகளவில் ஆர்வம் கொண்டுள்ளனர். இதற்காக பல நிறுவனங்கள் கவர்ச்சியான விளம்பரங்களுடன் மேலைத்தேய பாணியில் அமைந்த பெயர்களுடன் வெளியிடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்தன இந்நிறுவன புறத்தோற்றதிலும் அளவுகடந்த உள்ளக வசதிகளும் அந்நிறுவனப்பணியாளர்களின் ஆங்கிலம் கலந்த வாய்ப்பந்தல்களாலும் கவரப்பட்ட எம் ஊர் இளைஞர் யுவதிகள் பல லட்சம் ரூபாய்கள் முற்பணமாக அள்ளி அவர்கள் கைகளில் வழங்கினர். முற்பணங்களுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் எவையும் பெறப்பட்ட வரலாறுகளும் இருந்திருக்கவில்லை என்பது தான் இங்கே வேதனைக்குரிய விடயமாகும். அவர்களில் பல பேருக்கு நிலையான தொலைபேசி வசதிகள் கூட இருந்திருக்கவில்லை. இந்த நிலையில் இரண்டொரு மாதத்தில் எதுவும் நிகழாமலே அந்தக் கனவான்களின் செல்லிடப்பேசியும் செயலிழந்து விட எம்மவர்கள் செய்வதறியாது தவித்தனர்.
இந்த நிலையில் சரியான விசா நடைமுறைகள் அதாவது ஒரு நாட்டுக்கு கல்விக்காக அல்லது வேறு எந்தத் தேவைகளுக்காகச் செல்ல வேண்டுமாயின் அந்த நாட்டுக்குடிவரவு நடைமுறைகள் எவை? அவற்றுக்குரிய கட்டணங்கள் என்ன? இவற்றுக்குரிய விளக்கங்களைக் குறைந்த கட்டணத்தில் வழங்கவும் அந்தந்த நாடுகள் கேட்கும் ஆங்கில தகைமைகளுக்கு ஏற்றால்போல் குறைந்த கட்டணத்தில் ஆங்கில கற்கை நெறிகளைக் கற்பிக்கவும் திசைகாட்டி ஏற்படுத்தப்பட்டது. தற்போது தான் தாபிக்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்காக விரியத்துடன் செயற்படுவதுடன் சமூக நோக்கோடு பலதரப்பட்ட கற்கை நெறிகளை ஆரம்பித்துச் செயற்படுத்தி வரும் திசைகாட்டி முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம் என்கின்ற அந்தஸ்தைப் பெற அருகதை உடையதாகின்றது.

அரசாங்கப் போட்டிப்பரீட்சைகளுக்குரிய வகுப்புக்கள்:
SLAS, POSTAL, Court Staff என எல்லாவகையான போட்டிப் பரீட்சைகளுக்குரிய பொது உளச்சார்பு, மொழியறிவு என்பன எம்மால் போதிக்கப்படுகின்றன.
எமது நிறுவனத்தில் பொது உளச்சார்பு பாடத்தில் நீங்கள் கொண்டுவரும் கணக்குகளும் தீர்த்து வைக்கப்படும்.

வெளிநாடு செல்வோருக்கானவை.....
**IELTS...**
கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து Student Visa மூலம் செல்வதற்கு அவசியமான கற்கைநெறி.
Audio, Video, Projector மூலம்

**B1...**
Student Visa மூலம் வெளிநாடு செல்வதற்குரிய இலகுவான பாடத்திட்டம்..
Audio, Video, Projector மூலம் வகுப்புக்கள்
யாழ்ப்பாணத்தில் பரீட்சை இடம்பெறும்.

**A1...**
Sponsor மூலம் வெளிநாடு செல்பவர்களுக்குரியது.
Audio, Video, Projector மூலம் வகுப்புக்கள்
யாழ்ப்பாணத்தில் பரீட்சை இடம்பெறும்.
Diploma in English,
Advanced Diploma in English.

விசா வியளம் விளம்பும் பிரிவு:
- அனைத்து நாடுகளுக்குரிய அனைத்து வகையான விசா ஆலோசனைகள், சட்டத்தரணிகளால் வழிப்படுத்தப்பட்ட ஆலோசகர்களால் உரைக்கப்படும்.
- தற்போது விசேடமாக IELTS இன்றி இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றுக்கு Student Visa வுக்குரிய வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.
- ஆஸ்திரேலியாவுக்கு குடும்பத்துடன் செல்ல வகை சொல்லப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் சிங்கள மொழிப்போதனையில் ஓர் புதிய புரட்சி:
TNL, லங்காதீப ஊடகவியலாளர் திருமதி K.றனி நடத்தும் விசேட கற்கை நெறி அகலத்திரையில் புறஜெக்ரர் மூலம் 3 மாத காலக்கற்கை நெறி. பேச்சுச் சிங்களம், எழுத்து, கவிதை, பாடல்கள் என அமர்க்களப்படுத்தும் வகுப்புக்கள்.

மொழிபெயர்ப்புச் சேவை:
தமிழ்க் கடிதங்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து, கணினியில் தட்டச்சுச் செய்து தரப்படும்.

அனைத்து கற்கை நெறிகளுக்குரிய புதிய பிரிவுகள் எதிர்வரும் சனி 10.12.2011 காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றன.
அனைத்துத் தொடர்புகளுக்கும்:

**திசைகாட்டி பிறைவேற் லிமிற்டெட்**
37, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி. இல. : 021 2219016, 021 4914527

(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் இந்துக்கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலதுபுறமாக வரும் ஒழுங்கை)

மின்னஞ்சல்: thisaikaddi@sltnet.lk
இணையத்தள முகவரி: www.thisaikaddi.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LOVE AND SERVICE


ST. JOHN BOSCOS VIDYALA

யாழ்.புனித ஜோன் பொஸ்கோவின்
2011 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில்
பரீட்சையின் வெற்றிச் சாதனையாளர்களின்

# கௌரவிப்பு விழா









| | | |
|---|---|---|
| செல்வி ரமேஷ் நிதூஷிகா<br>பெற்ற புள்ளிகள் : 192<br>மாவட்ட நிலை: 01<br>தேசிய நிலை: 10 | செல்வி<br>குகபரன் கஜானி<br>பெற்ற புள்ளிகள் : 190<br>மாவட்ட நிலை: 04 | செல்வன்<br>சூரியகுமார் துவாரகன்<br>பெற்ற புள்ளிகள் : 190<br>மாவட்ட நிலை: 04 |

இன்றைய நன்னாளில் பரிசில் பெறும் மாணவர்களை மேலும் பல்கலைகளும்
பெற்று வளமுடன் வாழ வாழ்த்தும்

**பாடசாலைச் சமூகத்தினர்,**

**பெற்றோர்,**

**பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.**

(சீ/6630) (2-6-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடுகுக் கொட்டிலில் ஆரம்பித்து கட்டடங்களுடன் மிளிரும் நாரந்தனை கணேசா கனிஷ்ட வித்தி.



1924 இல் நிரந்தர கட்டடம் ஒன்றுடன் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்ட நாரந்தனை கணேசா கனிஷ்ட வித்தியாலயம் 1919 இல் ஒரு கிடுகுக் கொட்டிலாக ஆரம்பிக்கப்பட்டது. நாரந்தனையின் சைவப் பெரியாராக விளங்கிய மலாயன் நில அளவையாளர் ஆறுமுகம் நாகநாதர் தனது காணியை வழங்கி இந்தப் பாடசாலை ஆரம்பிக்க உதவினார்.

இராசா தில்லைநாதன், க.விசுவலிங்கம் ஆகியோருடன் ஏனைய சிலரும் சேர்ந்து பணம் சேகரித்து புதிய கட்டடம் ஒன்றை அமைத்தனர். பாடசாலையை சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கும்வரை ஆசிரியர்களுக்கான சம்பளமும் இவர்களாலேயே வழங்கப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் ஆறுமுகம் வித்தியாலயம் என்னும் பெயருடன் இயங்கிய இந்தப் பாடசாலை கணேசா வித்தியாலயமாக மாறியது சைவ பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்ட பின்னரேயாகும்.

முதன் முதலாக வேலணையைச் சேர்ந்த தம்பு ஆசிரியர் இங்கு கல்வி கற்பித்தார். ஆரம்பகாலத்திலேயே இது ஒரு கனிஷ்ட வித்தியாலயமாக விளங்கியது.

1945 இல் இலவசக் கல்வியுடன் ஆரம்ப பாடசாலையாக மாற்றப்பட்டது. 1946 இல் தம்பாட்டியில் ஓர் அரசினர் பாடசாலை ஆரம்பமாகவே இங்கு கல்வி கற்ற அந்தப் பகுதி மாணவர்கள் பலர் அந்தப் பாடசாலையில் இணைந்து கொண்டனர். மாணவர் தொகைக் குறைவால் மேல் வகுப்புகள் குறைந்து ஒரு வீழ்ச்சி நிலை இங்கு தென்பட்டது.

தம்பு ஆசிரியருக்குப் பின் பலர் தலைமை ஆசிரியர்களாக இருந்துள்ளனர். இவர்களில் நீண்ட காலம் சேவை செய்தவர் மண்டைதீவைச் சேர்ந்த சி.மாணிக்கம். இவரது துணைவியாரும் நாரந்தனையைச் சேர்ந்தவருமான திருமதி கே. மாணிக்கம் ஓய்வுபெறும் வரை இங்கேயே கடமையாற்றியுள்ளார். இவர்களின் பின் பண்டிதர் க.கணபதிப்பிள்ளை எட்டு ஆண்டுகள் வரை 1965 முதல் பணியில் இருந்துள்ளார்.

1966 இல் நாடாளுமன்ற உறுப்பினர், கல்வி அதிகாரிகள், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரின் முயற்சியால் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. தம்பு, தில்லைநாதன் ஆகியோர் ஐந்து பரப்புக் காணியை நன்கொடையாக வழங்கியிருந்தனர். இந்தக் காணி இவர்களால் விவசாயச் செய்கைகளுக்கெனப் பயன் படுத்தப்பட்டு வந்ததாகும்.

ஆரம்பப் பாடசாலையாகிய கணேசா மீண்டும் 1972 இல் புதிய கல்வித் திட்டத்தின் கீழ் கனிஷ்ட வித்தியாலயமாக மாற்றப்பட்டது. இந்த நாள்களிலேயே வட்டார ரீதியில் நடைபெறும் போட்டிகள், சமூகவிழாக்கள், கண்காட்சிகள், தமிழ்த் திறன் போட்டிகள் ஆகியவற்றில் கலந்துகொண்டு கல்வி அதிகாரிகளின் பாராட்டைப் பெற்றதாக நாரந்தனை மக்கள் மகிழ்ந்ததுண்டு. இங்கு நடைபெறும் பெற்றோர் தினவிழா பிரிவுபசார விழாக்கள், பெரியளவில் கலை நிகழ்வுகளாகவே நடத்தப்பட்டு வந்தன.

சைவப் பெரியார்களால் உருவாக்கப்பட்ட பாடசாலை இது என்பதால் சமய ஆசாரங்கள் முறையாகவே பேணப்பட்டு வந்துள்ளன. நவராத்திரிவிழாவிமரிசையாக இடம்பெறும். விவேகானந்த சபையின் சைவ சமயப் பரீட்சையில் ஒவ்வொரு ஆண்டிலும் பெரும்பாலான மாணவர்கள் சித்தியடைகின்றனர். இங்கு பயின்ற மாணவர்கள் பலர் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் நல்ல பதவிகளில் உள்ளவர்களாகவும் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும் வாழ்ந்த வாழ்வு குறித்து இன்றும் நினைவில் கொண்டுள்ளனர்.

புதிய கல்வித்திட்டப்படி பாடங்கள் இடம்பெற்றதுடன் ஆசிரியர்கள் சேவைக் காலப் பயிற்சிகளில் பங்குகொண்டு தமது வாண்மை விருத்தியில் அக்கறை கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர். தொழில் முன்னிலைப் பாடங்களுக்கான வசதிகள் குறைந்தபோதும் இந்தப் பகுதியின், சூழலுக்கேற்ப மாணவர்களின் எதிர்கால நோக்கில் தொழிற் பயிற்சிகளும் வழங்கப்பட்ட ஒரு பாடசாலையாக நாரந்தனை கணேசா இருந்துள்ளது.

**லக்ஸ்மன்**

அதிபர் இராசதுரையின் காலத்தில் பாடசாலையின் வளங்களைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளில் அவர் அக்கறை கொண்டிருந்தார். இவர்களின் அர்ப்பணிப்புடன் உயர் நிலையைத் தொட்டு நகரத்தொடங்கிய இந்தப் பாடசாலை நாட்டுச் சூழல்களால் தளர்வடைந்துள்ளது.

*(தொடரும்)*




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
**துரைராசசிங்கம் உத்தரகுமாரி**
(ஆசிரியை - நல்லூர் ஆனந்தா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)
(B.A. Tamil Hons, Dip in Education, M.E.D.)

மலர்வு: 21.05.1966
உதிர்வு: 18.11.2011
திதி : துவாதசி (07.12.2011)

வருடம் ஒன்று ஆனபோதும்
வாட்டும் உன் நினைவுகளே
நாள்தோறும் மீட்டிப் பார்க்கின்றனவே
உன் உருவமது அழிந்தபோதும்
உள்ளத்து உணர்வுகளுடன் உன் உருவம்
நீங்காத சிற்பமாய் நிலைத்து விட்டனவே
எம் நெஞ்சமதில்
மரணம் என்பது முடிவல்ல - மாறாக
மறுவாழ்வின் தொடக்கமேயாம்
மறக்கமுடியாத உமது மறைவினில்
மறைந்துவிட்டது ஓராண்டு காலம்
உமது ஆன்மா சாந்திபெற கண்ணீர்
அஞ்சலி மலர்களால்
அர்ச்சித்து நிற்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பொ.கோபாலசிங்கம்*
(மைத்துனர், முன்னாள் கிளை முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)
*சகோதரி திருமதி தி.கோபாலசிங்கம்*
(முகாமைத்துவ உதவியாளர், அச்சுவேலி உப அலுவலகம், புத்தூர் பிரதேச சபை)
*சகோதரி து.பத்மபூஷணகுமாரி*
(ஆசிரியை -யாழ்.சென் மேரிஸ் வித்தியாலயம் O.L.R)
மற்றும் குடும்பத்தினர்

*கோண்டாவில் வடக்கு.*

(11197)(1,6,9)



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24.09.1953

மறைவு
27.11.2001

திதி:-
துவாதசி

**திருமதி அருள்ராசலிங்கம் ரேவதிதேவி**

இன்றுடன் நீ பிரிந்து
ஆண்டுகள் பத்து ஆகுதே!
தேற்ற முடியவில்லை உந்தனது இழப்பை
கதைகள் பல பேசி வலம் வரும் உன் வதனத்தை
எப்போது காண்போம்.

குப்பிளான் தெற்கு, ஏழாலை.
சந்திக்கு அருகில்.

- சி.அருள்ராசலிங்கம்
(கணவர்)

(11249)(2,6)



## கண்ணிவெடி அகற்றுநருக்கான பதவி வெற்றிடம்

ஹெலோரஸ்ட் ஆனது பிரிட்டனைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹெலோரஸ்ட் இன் எதிர்கால வேலைக்கான மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது கண்ணிவெடியகற்றல் துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்கும் கடினமான வேலையாகும், எமது தரமான நடவடிக்கைகள் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்வதுடன், முற்றாக நீக்கமுடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்கள் மற்றும் அனுபவமுள்ளவர்கள் விவரங்களை சமர்ப்பிக்கவும்.

***ஹெலோரஸ்ட் 12, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.***

அனைத்து விண்ணப்பங்களும் 19 மார்கழி 2011 திங்கட்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(11137)(3,6,9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் தெரிவு; இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

## சஜித் பிரேமதாச கோரிக்கை

கொழும்பு,டிசெ.7

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை தெரிவு செய்யும் செயற்குழுக்கூட்டத்தில் கட்சித்தலைவருக்கான தெரிவு இரகசிய வாக்கெடுப்பின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோரியுள்ளார்.

திறந்த நிலை வாக்கெடுப்பு ஒன்று இடம் பெற்றால் அங்கத்தவர்கள் தமது உண்மை நிலைப்பாட்டை தெரிவிக்க அச்சம் கொள்வர். எனவே வாக்கெடுப்பு இரகசியமாக இடம்பெறவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

கட்சியின் செயற்குழுவில் 9 உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் 11 தொழிற்சங்க உறுப்பினர்கள் ஆகிய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளன. எனினும் கடந்த மாதங்களில் தேர்தல்கள் இடம்பெற்றமை காரணமாக அவற்றை நிரப்பமுடியவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைக்காக தற்போது ரணில் விக்கிரமசிங்கவும் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கொழும்பு முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சேவையின்போது உள்வாரிப்பட்டம் பெற்றோரின் சான்றிதழ்களுக்கும் சம்பளம் வழங்க வேண்டும்

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை,டிசெ.7

சேவையில் இருக்கும்போது உள்வாரிப்பட்டம் பெற்றவர்களது சான்றிதழ்களுக்கும் சம்பளம் வழங்க கல்வி அமைச்சு முன்வர வேண்டுமென இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தேசியத் தலைவர் எம்.அனஸ், கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஆசிரியர்கள் பலர் சேவையிலிருக்கும்போது, பல்கலைக்கழகப் பாடநெறிகளைப் பயின்று பட்டச் சான்றிதழுக்குரியவர்களாகின்றனர்.

இவர்கள் வெளிவாரி மாணவர்களாக பல்கலைக்கழகப் பாடநெறிகள் கற்பதிலும் தடையேதுமில்லை.

ஆனால் கற்கை விடுமுறை பெறாது பல்கலைக்கழகங்களில் உள்வாரியாகக் கற்பதில், ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அல்லது கல்வியியற் கல்லூரியில் பயிலும் காலத்தில் பல்கலைக்கழகத்தில் கற்பதிலும் பல்வேறு சட்டத் தடைகளுள்ளன. கற்கை விடுமுறையின்றி உள்வாரியாகப் பயின்றவர்கள் தொடர்பாகச் செயற்படும் விதம் குறித்து 91/6, 2001/12, 2004/31 ஆகிய இலக்கக் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளிலும், சேவையிலிருக்கும்போது பட்டம் பெற்றவர்கள் தொடர்பாகச் செயற்படும் விதம் குறித்து 96/01, 2001/12, 2001/12 (I), 2007/27 ஆகிய கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சபையின் சட்ட ஒழுங்குகளுக்கமைய உயர்கல்வி நிறுவனங்கள் இரண்டில் ஒரே தடவையில் பதிவு செய்திருப்பது தவறானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டத் தடைகளை மீறி உள்வாரிப் பட்டம் பெற்றவர்களுக்கு மேலும் ஒரு தடவை சந்தர்ப்பமளித்து இறுதியாக சம்பளம் வழங்கக் கல்வி அமைச்சு முன் வரவேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# அரசின் தீர்மானத்தை கடுமையாக எதிர்க்கிறது மருத்துவ சம்மேளனம்

கொழும்பு,டிசெ.7

இலங்கையில் சுயமாக இயங்கும் மருத்துவ சபையை பொதுத்துறை நிறுவனமாக மாற்றும் முயற்சிக்கு இலங்கை அரச மருத்துவர் சம்மேளனம் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது .

இந்த நடவடிக்கை இலங்கையின் சுகாதாரத்துறையை செயலிழக்கச்செய்யும் என்று அரச மருத்துவர் சம்மேளனம் எச்சரித்துள்ளது. மருத்துவத்துறையினரின் அனுமதியில்லாமல் இவ்வாறான நடவடிக்கை எவையும் எடுக்கப்படக்கூடாது என்று அந்த சம்மேளனம் கோரியுள்ளது.

மருத்துவ சபையை பொதுத்துறை நிறுவனமாக மாற்றி அதற்கு சர்ச்சைக்குரிய ஒருவரை தலைவராக நியமிக்கும் ஒரு வேலைத்திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதாக இலங்கை அரச மருத்துவ சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

(ச)

# பாதாள உலகக் குழுத் தலைவர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு

கொழும்பு,டிசெ.7

பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் மொஹமட் நியாஸ் நௌபர் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். தற்போது கண்டி, போகம்பரை சிறைச்சாலையில் நௌபர் தண்டனை அனுபவித்து வருகின்றார்.

இந்த நிலையில் தமது பெயரைப் பயன்படுத்தி சில குழுக்கள் கப்பம் கோரல்களில் ஈடுபட்டு வருவதாக நௌபர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப் பட்டுவரும் இந்த கப்பம் கோரல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வருமாறும், சந்தேகநபர்களை கைது செய்யுமாறும் பொட்ட நௌபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

(ச)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்பதிவு செய்யவும். தொடர்பு:

1. நல்லூர் பாம் சென்ரர் , 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், சந்தையடி, கிளிநொச்சி. 0776225944

(10964)(9-6-8)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து (புறோயிலர் 450/= மட்டும்) காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு :01.04.1954
உதிர்வு:18.11.2010

திருமதி
வரதராசன்
சற்குணவதி
(றோசா)

திதி: 07.12.2011



அன்புடன் எம்மை வளர்த்து
அறிவினை எமக்கூட்டி
ஆற்றல்கள் ஆயிரம் ஊட்டி
காவல் தெய்வமாய் இருந்து - எம்மை
காத்து வளர்த்த எம் அன்பு அம்மாவே!
ஆண்டு ஒன்று மறைந்தாலும் என்ன?
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
மறவோம் உம்மை நாம் என்றும்.

இன்று (07.12.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

21, தாளையடி லேன் ,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். 021 222 9423

செ.வரதராசன்
குடும்பத்தினர்.

(11186)(3.6.9)

**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்**
**காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை**
**காங்கேசன்துறை**

**வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2012**
Registration of Suppliers -2012

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறையில் உள்ள கொங்கிறீற் உற்பத்திப் பகுதிக்கும் அலுவலகப் பகுதிக்கும் 2012 ஆம் ஆண்டுக்கு தேவையான பின்வரும் பொருள்களையும் சேவையினையும் வழங் கக் கூடிய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

பொருள்கள்
01. உடைந்த சல்லிக் கல் (Crushed Metal)½", ¾"
02. மணல்
03.மணல் காடு மணல்
04. முறுக்குக் கம்பிகள் (Tore steel)
05. மென் உருக்குக் கம்பிகள் (M.S Bars))
06. கட்டுக் கம்பிகள்(Binding Wire)
07. கட்டட வேலைக்கான உபகரணங்கள்
08. மின்சாரப் பொருள்களும் மின்சார உபகரணங்களும்
09. வாகன உதிரிப்பாகங்கள் (Mitsubishi Double Cab & Tipper வாகனத்துக்குரியவை)
10. ரயர்களும் ரியூப்களும் (Tyre & Tubes)
11. துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
12. காகிதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருள்களும் (Stationary & Office Requisites)
13. அலுவலகத் தளபாடங்கள்
14. கணினி பொருள்களும் உதிரிப்பாகங்களும் (Computer spares)

சேவை
01. வாகனம் பழுது பார்த்தலும் துப்புரவு செய்தலும் (Repairs & Servicing)
02. கணினி பழுது பார்த்தலும் துப்புரவு செய்தலும். (Repairs & Servicing)

மேற்கூறப்பட்ட பொருள்களையும் சேவையினையும் வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்து கொள்ள விரும்புபவர்கள் 25.12.2011 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம் வழங்கப்படக்கூடிய பொருள் சேவை விவரம் கொண்ட விண்ணப்பத்தினை பின்வரும் விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விநியோக உத்தியோகத்தர்,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை.

(C/6625)(6-8)

**பணிப்பெண்தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0777461858

22 ஆம் வருடத்தில்....

"கல்வியே கண் மற்றெல்லாம் பின்"

**ஏசியன் அக்கடமி**
# கேணியடி, கொக்குவில் மேற்கு

கல்வியாண்டு 2012
தரம் 01 முதல் O/L வரை
ஆரம்பம்: 09.12.2011
வெள்ளி பி.ப. 3.00 மணி
★A/L வகுப்புகள் நடைபெறுகின்றன.
★ அனைத்து மாணவர்களுக்குமான கணினி வகுப்புகள் நடைபெறுகின்றன.
★ புலமைப்பரிசில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

(11221)(2,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிசெ.11 இல் ஹசாரே மீண்டும் உண்ணாவிரதம்



டில்லி, டிசெ.7

தாம் பரிந்துரைத்த வலுவான லோக்பால் பிரேரணையை நடைமுறைப்படுத்த கோரி எதிர்வரும் 11 ஆம் திகதி அன்னா ஹசாரே பெரியளவில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தவுள்ளார். இதில் கலந்து கொள்ள அனைத்து கட்சி தலைவர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொண்டு, லோக்பால் குறித்த தங்களது சந்தேகங்களை கேள்விகளாகக் கேட்கலாம் என்று ஹசாரே குழுவின் கிரண்பேடி தெரிவித்துள்ளார்.

இதேவேளை லோக்பால் பிரேரணை வரைவு குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க தமக்கு அதிக கால அவகாசம் வேண்டும் என்று நாடாளுமன்ற நிலை குழு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

அறிக்கையை இறுதி செய்வதற்கு இன்னமும் ஒரு வார கால அவகாசம் தேவை என்று அக்குழுவினர் கேட்டுள்ளனர். இந்த நிலையில் கடைநிலை அதிகாரிகளை லோக்பாலில் உள்ளடக்க கூடாது என்று அரசின் பரிந்துரைக்கு ஹசாரே கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். (வ)

# 5 மீனவர்களையும் விடுவிக்கக் கோரி பாம்பனில் நாளை உண்ணாவிரதப் போர்

சென்னை, டிசெ.7

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஐந்து பேரையும் விடுதலை செய்யுமாறு கோரி நாளை வியாழக்கிழமை உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளனர்.

ராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழக மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனை முடிவுக்குக் கொண்டு வர ராமநாதபுரம் மாவட்ட ஆளுநருக்கும் மீனவர்கள் இடையே பேச்சு நடைபெற்றது. ஆனால் இந்த பேச்சு தோல்வியில் முடிந்தது.

இதனையடுத்து மீனவர்கள் விடுதலை செய்யப்படும் வரை போராட்டம் தொடரும் என்றும், நாளை வியாழக் கிழமை பாம்பனில் உண்ணாவிரதம் நடைபெறும் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட 5 தமிழக மீனவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை காவலில் வைக்க மல்லாகம் நீதிபதி கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த இந்திய மீனவர்கள் கடந்த 3 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் போதைப் பொருள் தொடர்பாக கொழும்பு இரசாயனப் பகுப்பாய்வு சோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே தமிழக மீனவர்களின் நலன்களைக் கவனித்துக் கொள்ள சட்டத்தரணி மூலம் மனுவொன்றை நீதிமன்றத்தில் இந்திய தூதரகம் தாக்கல் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)



குஜராத் மாநிலம் சபர்மதி ஆசிரமத்துக்குச் சென்ற பூட்டான் ராணி ஜெட்சன் பெமா, அங்குள்ள ராட்டையில் நூல் நூற்றார்.

## அந்நிய நேரடி முதலீட்டை நிறுத்தியது மத்திய அரசு

### பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

டெல்லி, டிசெ.7

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு என்ற அரசின் முடிவால் ஏற்பட்டுள்ள நாடாளுமன்ற முடக்க நிலைக்குத் தீர்வு காண, மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பா.ஜ.க. மூத்த தலைவரும், மக்களவை எதிர்க் கட்சித் தலைவருமான சுஷ்மா ஸ்வராஜை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசிய பிரணாப் முகர்ஜி, மத்திய அரசு தனது முடிவை நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில், எதிர் கட்சிகளுடன் சுமூகத் தீர்வு ஏற்படும் வரையில், சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முத



லீடு என்ற மத்திய அரசின் முடிவு நிறுத்தி வைக்கப்படும் என்று பிரணாப் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் எதிர்க்கட்சிகளின் அமளியால் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை சரிசெய்யும் வகையிலேயே மத்திய அரசு தனது பிடிவாதத்தைத் தளர்த்தியுள்ளதாகத் தெரிகிறது.

## பேச்சுக்கு வருமாறு மத்திய அரசு தமிழகம், கேரளத்துக்கு அழைப்பு

டில்லி, டிசெ.7

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக பேச்சு நடத்த வருமாறு தமிழகம், கேரளத்துக்கு மத்திய அரசு நேற்று முன்தினம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த விவகாரத்தில் கேரளத் திலும், தமிழகத்திலும் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் இரு மாநில அரசுகளும் பேச்சு நடத்தி பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு அழைத் துள்ளது.

இது தொடர்பாக மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் இருமாநில நீர்வளத் துறை செயலர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளது. அதில் டில்லியில் எதிர்வரும் 15 அல்லது 16 ஆம் திகதி பேச்சுக்கான சந்திப்பை நடத்தலாம். இந்த இருநாள்களில் உங்களுக்கு ஏற்ற ஒரு நாளை தெரிவு செய்யலாம் என்று தமிழக, கேரள மாநில அதிகாரிகளுக்குக் கூறப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டத்தின் அடுத்த கட்டமாக இரு மாநில அமைச்சர்கள், முதல்வர்களும் சந்திக்கலாம் என்றும் மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மத்திய அரசுடன் பேசக் கூடாது

### ராமதாஸ் தெரிவிப்பு

முல்லைப் பெரியாறு அணை வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு ஒருமுறை கூடக் கேரளாவை மத்திய அரசு கண்டித்ததில்லை. எனவே அப்படிப்பட்ட மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ள பேச்சுக்கு தமிழக அரசு போகக் கூடாது என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்:

முல்லைப் பெரியாறு விவகாரத்தில் இதுவரை ஒருமுறை கூட மத்திய அரசு, கேரளாவைக் கண்டித்ததில்லை. உச்சநீதிமன்றத் தீர்ப்பையும், உத்தரவுகளையும் கடைப்பிடிக்குமாறு ஒருமுறை கூட அது கேட்டுக் கொண்டதில்லை, உத்தரவிட்டதில்லை. இந்தப் பேச்சில் தமிழகம் கலந்து கொண்டால் அது கேரளாவுக்கு சாதகமாகி விடும் - என்றார். (வ)

## எல்லை தாண்டிய குரங்கு பாகிஸ்தானில் 'கைது'!



இந்தியாவில் இருந்து எல்லையைத் தாண்டி தமது நாட்டுக்குள் வந்ததாக குரங்கு ஒன்றை பாகிஸ்தான் அரசு கைது செய்துள்ளது.

முன்னதாக இந்தக் குரங்கைப் பிடிக்க உள்ளூர் வாசிகள் முயன்றதாகவும், ஆனால் அவர்களால் அதைப் பிடிக்க முடியவில்லை என்றும் பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் எக்ஸ்பிரஸ் ட்ரிபியூன் செய்தி வெளியிட்டுள்ளது.

பின்னர் அவர்கள் வனத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தனர். அவர்கள் வந்து அந்தக் குரங்கைப் பிடித்தனர். இதைத் தொடர்ந்து பாஹ வல்பூர் வன விலங்குகள் சரணாலயத்தில் அந்தக் குரங்கு விடப்பட்டது. அந்த குரங்குக்கு பாபி என்று செல்ல பெயர் வைக்கப்பட்டுள்ளது.


எல்லை தாண்டுவதாக விலங்குகள் கைது செய்யப் படுவது இது முதல்முறையல்ல.

கடந்த ஆண்டு மே மாதம் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவின் பஞ்சாப் எல்லைக்குள் ஒரு புறா பறந்து வந்தது. அதை இந்திய ராணுவத்தினர் உயிருடன் பிடித்து கைது செய்தனர்.

உளவு பார்ப்பதற்காக பாகிஸ்தான் அதிகாரிகள் அதை இந்திய [illegible] டார்களா என்று அப்போது விசாரணை [illegible] பட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்





அம்மா உங்களை
உச்சரிக்கும்போதெல்லாம்
எமக்குள் நேசநதி
அருவியாய் ஆதரவெடுக்கிறது
புரண்டுபடுத்தால் நாம்
இறந்து விடுவோமோ என்று
கருவில் இருந்த நமக்காக
தூக்கத்தைக் கூட தொலைத்துவிட்டு
இரவில் விழித்திருந்த சூரியன் அன்பே

ஒரு குடும்பம்
அழிந்து போவதற்கு
யார் வேண்டுமானாலும்
காரணமாக இருக்கலாம்
நன்றாக இருப்பதற்கு
ஒரு பெண்தான் காரணமாக
இருப்பாள் அம்மா
என்ற உலக கருத்தின்படி
நம் குடும்பத்தின் நலத்திற்கு
அது நீதானே அம்மா
இன்னும் பல ஜென்மங்கள்
இருக்குமென்றால்
அதிலும் நீயே எம்தாயாக
வேண்டுமென கேட்டு கடவுளிடம்
தொந்தரவு செய்வோம்
உன் ஐந்து பிள்ளைகளும்
என்றும் எங்கள் குடும்பத்திற்கு
ஒளி வீசிக்கொண்டிருக்கும்
எம் ஆருயிர் குத்துவிளக்கே

### திருமதி ஜெயம் பரிமளம் (கல்யாணி)

*மலர்வு: 23.02.1953*
*உதிர்வு: 07.12.1998*

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் உங்கள் பிரிவால் கண்ணீரில் மூழ்கும்:

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்

வ. ஜெயம் (கணவர்)
வண்ணாண்கேணி, பளை.
0772726341

(8025)(1,6,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRM UNIVERSITY
(Under section 3 of UGC Act 1956)
Since 1985

# Build your career on world class education with SRM University

INDIA'S No.1 MULTIPLE STREAMS UNIVERSITY

SRM is ranked India's No.1 Multiple Stream University (Engineering and Medicine) by The Times of India (The Education Times)

# ADMISSION 2012

## INTERNATIONAL AND NRI STUDENTS

**PROGRAMS AT CHENNAI AREA MAIN CAMPUS KATTANKULATHUR**

## MEDICINE AND HEALTH SCIENCES

**M.B.B.S | B.D.S | BASLP | B.Optom | BMRS | BMLT** | **Diploma**- Optometry, Medical Laboratory Technology, Medical Record Science, | B.Sc-Nursing | **BOT | BPT** | B.Pharm | Pharm-D | Pharm-D-Post Baccalaureate

## ENGINEERING

**B.Tech-** Aerospace | Automobile | Bioinformatic | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science | Electrical & Electronic | Electronic & Communication | Electronic & Instrumental | Food & Process | Genetic | Information Technology | Information & Telecommunication | Instrumentation & Control | Mechanical | Mechatronics | Nanotechnology | Software | **B.Arch-** Bachelor of Architecture | **B.Des-**Interior Design

## SCIENCE & HUMANITIES

**B.A-**Journalism & Mass Communication | **B.B.A | B.C.A | B.Com | B.Ed | B.Sc-** Biotechnology, Biotechnology & Bioinfomatics, Chemistry, Computer Science, Econometrics. Film Technology, Hotel & Catering Management, Information & System Management, Information Technology, Mathematics, Physics, Visual Communication | **Diploma**-Hotel Management, Teacher Education, Film Acting

* **ACCREDITATION:** The University is accredited by NAAC and other competent authorities including ABET, US, for B.Tech ECE.
* **ACADEMIC ENVIRONMENT:** Sprawling 550 acres, hi-tech facilities, eminent faculty flexible and dynamic curriculum and exciting research.
* **SEMESTER ABROAD PROGRAM:** Over 300 students sponsored to 35 foreign Universities like MIT, Harvard Medical, CMU, Cornell, Madison, UC Davis, Warwick and Western Australia.
* **SCHOLARSHIPS:** 10 scholarships are awarded for International /NRI students based on academic performance.

**KATTANKULATHUR CAMPUS**



**Call Us on:** +94112592323
+94718554508
**hotline** : +94772885684
**Email** :info@srmlanka.com
**Meet Us at:** SRM Lanka (Pvt) Ltd,
329-1st Floor,
Meewella Building,
Galle Road, Colombo-04,
Sri Lanka.

An associate of

PARTNERS INTERNATIONAL PROGRAM | MASSACHUSETTS GENERAL HOSPITAL | BRIGHAM AND WOMEN'S HOSPITAL | *Teaching affiliates of* HARVARD MEDICAL SCHOOL

**CONTACT**: The Principal Counselling Officer, **SRM Global Consultancy FZ LLC***
D01, 8th Floor, Block 10, PO Box No:345020,
Dubai International Academic City (DIAC), Dubai, UAE.
Tele:+97144225660 | Mobile:+971554347813 | Fax: +97144201094
Email: admissions@srmglobal.ae
*Authorized global consultant of SRM University for International Student Admissions

SRM GLOBAL CONSULTANCY FZ LLC

**SRM University**, SRM Nagar, Kattankulathur 603203, Chennai Area, Tamil Nadu, India.
Tel:+91 44 27456701, 27451643, 27451644, 27417250, 27417252

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கனில் இருவேறு நகரங்களில் குண்டுத் தாக்குதல்; 34 பேர் சாவு



காபூல், டிசெ.7

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் மற்றும் மஸார் இஷெரீப் ஆகிய இரு நகரங்களில் நடத்தப்பட்ட இரட்டைத் தற் கொலைப்படைத் தாக்குதலில் 30 இக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

ஷியா முஸ்லிம்கள் முஹர்ரம் ஊர்வலத்திற்காகத் தயாராகிக் கொண்டிருந்தபோது இந்தக் குண்டுவெடிப்புகளை தீவிரவாதிகள் தற்கொலைப் படையினர் மூலம் நடத்தியுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

காபூலில் உள்ள மசூதியில் முஹர்ரம் ஊர்வலத்திற்காக ஷியா முஸ்லிம்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது முதல் தாக்குதல் நடந்தது. இதன் போது தற் கொலைப் படை தீவிரவாதி ஒருவன், தனது உடலில் கட்டியிருந்த வெடி குண்டுகளை மசூதியின் வாசலில் நின்றபடி வெடிக்கச் செய்தான். அதில் 30 பேர் கொல்லப்பட்டனர்.

அதேபோல மஸார் இஷெரீப் என்ற இன்னொரு நகரில் மசூதியில் நடந்த குண்டு வெடிப்பில் 4 பேர் கொல்லப்பட்டனர். இங்கு சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் ஒரு பொலிஸ் அதிகாரியும் கொல்லப்பட்டார். (ந)

# பாகிஸ்தான் உறவை மீள் பரிசீலனை செய்ய அமெரிக்க செனட் உறுப்பினர்கள் கோரிக்கை

வாஷிங்டன், டிசெ.7

பாகிஸ்தானுடனான அமெரிக்க உறவை மறு பரிசீலனை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டதாக அமெரிக்க செனட் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நேட்டோ படைத் தாக்குதலில் பாகிஸ்தான் ராணுவத்தினர் பலியானதைத் தொடர்ந்து அமெரிக்கா - பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவின் செனட் உறுப்பினர்களான ஜோன் மெக்கெய்ன் மற்றும் லின்ட்சே கிரகாம் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில்;

அமெரிக்கா, பாகிஸ்தானுடனான உறவில் நீண்ட பொறுமையைக் கடைபிடித்து வருகிறது. பாகிஸ்தான் பிரிவினைவாதிகளிடம் உறவு கொண்டுள்ளது. அமெரிக்காவின் பொறுமை காரணமாகப் பல விடயங்களில் மறுக்க முடியாமல் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் ராணுவமும், உளவுத்துறையும் தீவிரவாத மற்றும் ஹக்கானி குழுகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. இவர்கள் ஆப்கனில் அமெரிக்க படைகளைக் கொன்று வருகின்றனர். எனவே பாகிஸ்தானுடனான உறவு மற்றும் பொருளாதார உதவிகளை அமெரிக்கா முழுமையாக மறு பரிசீலனை செய்ய வேண்டும் எனக் கூறினர். (ந)

# ஆப்கனின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய ஆதரவு அவசியம்

## சர்வதேசத்திடம் கர்சாய் கோரிக்கை

நேட்டோ தலைமையிலான சர்வதேசப் படைகள் 2014 இல் ஆப்கானிஸ்தானில் இருந்து விலகிய பின்னரும் சர்வதேச சமூகம் ஆப்கானிஸ்தானுக்குத் தொடர்ந்து உதவிகளும் ஆதரவும் வழங்கி வருவது எதிர்காலத்திலும் அந்நாட்டில் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்ய மிகவும் அவசியம் என ஆப்கன் அதிபர் ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார்.

ஆப்கனின் எதிர்காலம் தொடர்பில் ஜேர்மனியின் பான் நகரில் ஆரம்பித்துள்ள சர்வதேச மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

2001இல் ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் சர்வதேச சமூகம் சந்தித்திருந்த அதே பான் நகர விடுதியில் இந்த மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றிய பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹேக் 2014க்குப் பின்னர் ஆப்கானிஸ் தானைக் கட்டியெழுப்புவது தொடர்பில் எடுக்கப்படுகின்ற முடிவுகளுக்கு தாலிபான்களும் உடன்படாது போனால், இலக்குகளை எட்டுவது சிரமமாகி விடும் எனத் தெரிவித் தார்.

மாநாட்டை தொடக்கி வைத்து உரையாற்றிய ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் கீடோ வெஸ்டர்வெல், ஆப்கானிஸ் தானின் எதிர்காலத்துக்கு இராணுவ ரீதியான தீர்வு இருக்க முடியாது, அரசியல் ரீதியான தீர்வு தான் இருக்க முடியும் என்று கூறியுள்ளார். (ந)

# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு

இந்தோனேசியாவில் காமலாமா என்ற எரிமலை வெடித்துச் சிதறியதால் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள ஆயிரக் கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறப்பட்டுள்ளனர்.

5,650 அடி உயரம் கொண்ட இந்த எரிமலையில் இருந்து நெருப்புக்குழம்பும், கரும்புகையும் வெளியாகி வருகின்றன. எரிமலை தொடர்ந்து சீற்றத்துடன் காணப்படுவதால் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டேர்நெட் நகரிலுள்ள விமான நிலையம் நேற்று மூடப்பட்டுள்ளன. (ந)

# ரஷ்ய தேர்தலில் புடினின் கட்சிக்கு பின்னடைவு

மாஸ்கோ, டிசெ.7

ரஷ்யாவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் புடினின் ஐக்கிய ரஷ்யக் கட்சி 50.2 சதவீத வாக்குகள் பெற்று மூன்றில் 2 பங்கு பெரும்பான்மையை இழந்தது. 2ஆவது இடத்தை 19.12 சத வீதம் வாக்குகள் பெற்று கம்யூனிஸ்ட் கட்சி பிடித்துள்ளது.

ரஷ்யாவில் எதிர்வரும் மார்ச் மாதம் அதிபர் தேர்தல் நடக்கவுள்ளது அதில், ஆளும் ஐக்கிய ரஷ்யக் கட்சி சார்பில் புடின் போட்டியிடுகிறார். இந்தச் சமயத்தில் அந்தக் கட்சியின் வாக்கு சதவீதம் குறைந்து இருப்பது புடினுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை நாடாளுமன்றத் தேர்தலில் வாக்கு சதவீதம் குறைந்ததற்கு ஊழல் புகார் காரணம் எனக் கூறப்படுகிறது. (ந)

திருமிகு

சபாபதி குகதாசன்



அகில இலங்கை சமாதான நீதிவான், குகன் கல்வி நிறுவன நிர்வாக இயக்குநர், ஓய்வுபெற்ற உபஅதிபர் (S.L.T.S -I)

சமூகப்பணி தொடர அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

அதிபராய் கண்டு அகமகிழ்ந்ததே
ஆசானாய் கண்டு இகமகிழ்ந்ததே
நீதிவானாய் கண்டு மிக மகிழ்ந்ததே
நின்சேவை கண்டு 'குக' மகிழ்ந்ததே

05.12.2011 திங்கட்கிழமை அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் திரு.க.அரியநாயகம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட

திருமிகு சபாபதி குகதாசன்

அவர்களை வாழ்த்துவதோடு நோய்நொடியின்றி நானிலத்தில் வாழ எல்லாம் வல்ல செல்வச்சந்நிதி முருகப்பெருமானை இறைஞ்சுகின்றோம்.



வாழ்த்துவோர்:
இரா அகிலன்,
திருமதி நிஷ்ல்யா அகிலன்
குட்டி அபிரா அகிலன்.

(11266)(1,6,9)

# அரபு லீக் ஒப்பந்தத்தில் விரைவில் கையெழுத்திட சிரியா முடிவு

பெய்ரூட், டிசெ.7

சர்வதேச நெருக்கடி அதிகரித்துள்ளதை அடுத்து அரபு லீக் ஒப்பந்தத்தில் சிரியா விரைவில் கையெழுத்திடவுள்ளதாக சிரிய வெளியுறவு அமைச்சர் ஜிகாத் அல் மக்தேசி வாக்குறுதி அளித்துள்ளார்.

சிரியாவில் உள்ள வீதிகளில் இருந்து ராணுவம் வாபஸ் பெறப்பட்டதை, அரபு லீக் பிரதிநிதிகள் நேரில் பார்வையிட சிரியா அனுமதிக்க வேண்டும் எனவும் அதற்கு அனுமதியளிக்க 4 ஆம் திகதி வரை கெடு வழங்குவதாகவும் அரபு லீக் தெரிவித்திருந்தது. இந்நிலையில், துருக்கியின் தடை மற்றும் அரபு லீக்கின் கெடு ஆகியவற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் பேசிய சிரிய வெளியுறவு அமைச்சர் ஜிகாத் அல் மக்தேசி, அரபு லீக் ஒப்பந்தத்தில், விரைவில் கையெழுத்திடுவோம் எனவும் அரபு லீக்கின் பிரதிநிதிகள் வருவதுகுறித்து விளக்கம் கேட்டிருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

இதற்கிடையில், சிரிய ராணுவ உயர் அதிகாரிகள் பலர், ரொக்கெட்டுகள், பீரங்கிகள், ஹெலிகொப்டர்கள் போன்றவை பயிற்சியில் ஈடுபடுவதைப் பார்வையிடுவதாக சிரியாவின் செய்தி நிறுவனமான 'சனா' பட்டதுடன் செய்தி வெளியிட்டுள்ளது. இது சர்வதேச அளவில் சிரியா மீது மேலும் சந்தேகத்தை அதிகரித்துள்ளது. இதுகுறித்து மக்தேசி விளக்குகையில் இது வழக்கமான பயிற்சிதான் என்றார்.

# ஷம்சி விமானத் தளத்திலிருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ்

இஸ்லாமாபாத், டிசெ.7

பாகிஸ்தானின் ஷம்சி விமானத் தளத்தை விட்டு வெளியேறும் பணிகளை அமெரிக்கா தொடங்கியுள்ளது.

சமீபத்தில் நேட்டோ விமானங்கள் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த பாகிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் அமைந்திருக்கும் ஷம்சி விமானத் தளத்திலிருந்து 15 நாள்களுக்குள் அதாவது வரும் 11ஆம் திகதிக்குள் வெளியேறுவது செய்யுமாறு அமெரிக்காவுக்கு உத்தரவிட்டது. இந்தக் கெடுவை நீடிக்குமாறு கேட்டும் பாகிஸ்தான் அதிபர் சர்தாரி சம்மதிக்கவில்லை. இதையடுத்து அமெரிக்கா ஷம்சி விமானத் தளத்தை காலி செய்யும் பணியை நேற்று முன்தினம் தொடங்கியுள்ளது.

இதன்போது விமானத்தளத்தில் பணிபுரியும் அமெரிக்கர்களை அழைத்துச் செல்ல வந்த அமெரிக்க விமானத்தில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அமெரிக்க வீரர்கள் ஏறினர். இதேவேளை அமெரிக்க வீரர்கள் விமானத்தில் ஏறும் வரை ஷம்சி விமானத்தளத்தைச் சுற்றியுள்ள பகுதியில் வசிப்பவர்களை வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று அறிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இது குறித்து பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் எதுவும் தெரிவிக்கவில்லை. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது பள்ளிமுனை லூசியா

யாழ்ப்பாணம், டிசெ.7

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிரிவு III இற்கான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த வாரம் திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் மன்னார் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியது முதல் இரண்டு அணியினரும் அசத்தலாக ஆடினார்கள்.

இதன் பயனாக மன்னார் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணி தனது முதலாவது கோலைப் பதிவு செய்தது.

முதலாம்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது மன்னார் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு



அணியினரும் ஆட்டத்தை வேகப்படுத்திக் கொண்டனர்.

திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணி இந்த வேளையில் இரண்டு கோல்களைப் பெற்றது. இதனையடுத்து மன்னார் பள்ளிமுனை சென் லூசியா விளையாட்டுக்கழக அணி தனது ஆட்டத்தை வேகப்படுத்தி மேலும் ஒரு கோல் போட்டது.

இரு அணியினரும் தலா இரு கோல்களைப் பெற்றுச் சமனிலையில் இருந்தனர்.

ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெறும் என்று ரசிகர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடம் இருக்கையில் மன்னார் பள்ளிமுனை சென் லூசியா விளையாட்டுக்கழக அணி மூன்றாவது கோலைப் பெற்று வெற்றியை உறுதி செய்தது.

ஆட்ட முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் மன்னார் பள்ளிமுனை சென் லூசியா விளையாட்டுக்கழக அணி திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணியை வென்றது.

(த-23)

# 35 வயதுக்கு மேற்பட்டோரின் உதைபந்தாட்டம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், டிசெ.7

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களின் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டி குறித்து ஏற்பாட்டாளர் கூறுகையில்,

இந்தப் போட்டியில் முதற்கட்டப்போட்டி லீக் முறையிலும், இரண்டாம் கட்டப் போட்டி விலகல் முறையிலும் இடம்பெறவுள்ளது எனத் தெரிவித்தார்.

(த-23)

# கம்பொலவில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.7



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிரிவு III இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கம்பொலவில் இடம்பெறவுள்ளது.

இதில் மன்னார் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜெட்லைனர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(த-23)

# மறைந்தார் உலகக் கிண்ண நாயகன் சாக்ரேட்ஸ்



பிரேஸில் உதைபந்தாட்ட அணிக்கு 1982 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த அணித்தலைவரான சாக்ரேட்ஸ், தமது 57ஆவது வயதில் உடல்நிலை குறைவு காரணமாக காலமானார்.

பிரேசில் அணியின் முன்னாள் ஜாம்பவான் சாக்ரேட்ஸ், கடந்த சனிக்கிழமையன்று உடல் நலக்குறைவு காரணமாக சாபோலா நகரில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

பல்வேறு உடல்நிலைக் கோளாறு ஏற்கனவே அவருக்கு இருந்து வந்தது. கடந்த இரு மாதங்களுக்கு முன்பு கூட உடல்நிலைக் குறைவு காரணமாக அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மீண்டு வந்தார்.

இந்நிலையில் மீண்டும் உடல் நலக்குறைவு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சாக்ரேட்ஸ், கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார்.

1979 முதல் 1986ஆம் ஆண்டுவரை பிரேஸில் அணிக்காக 60 போட்டிகளில் விளையாடி 22 கோல்களை அடித்துள்ளார்.

1982 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் பிரேசில் அணிக்குத் தலைவராக இருந்தார். கொரிந்தியன்ஸ், பிளமிங்கோ, பியரொன்டினா, சான்டோஸ் போன்ற உள்ளூர் அணிகளுக்காகவும் அவர் விளையாடியுள்ளார்.

இவரது மறைவுச் செய்தி கேட்டு உதைபந்தாட்ட உலகமே அதிர்ச்சியடைந்துள்ளது. அவரது குடும்பத்தினருக்கு பலரும் அனுதாபம் தெரிவித்து வருகின்றனர்.

## சாக்ரேட்ஸ் - சிறுபார்வை




| | |
|---|---|
| முழுப்பெயர் | சாக்ரேட்ஸ் பிரஸிலெரோ சம்பையோ டி சௌஸய வியெரா டி ஒலிவெய்ரா |
| பிறந்த திகதி | 19.2.1954 |
| பிறந்த இடம் | பெலெண் டோ பரா, பிரேஸில் |
| இறந்த திகதி | 4.12.2011 (வயது-57) |
| இறந்த இடம் | சரா பௌலோ, பிரேஸில் |
| விளையாட்டு வகை | நடுக்களம் |
| அறிமுகம் | 01.12.2011 (பிறிஸ்பன்-எதிரணி நியூஸி) |

உள்ளூர் கழகங்களில்

| ஆண்டு | அணிகள் | போட்டிகள் |
|---|---|---|
| 1974-1978 | பொறபோகா | 28(24கோல்கள்) |
| 1978-1984 | கொரின்தினாஸ் | 297 (172) |
| 1984-1985 | பியோரென்ரினா | 25 (6) |
| 1986-1987 | பிளாமென்கோ | 11 (3) |
| 1988-1989 | சான்டோஸ் | 5 (2) |
| 1989 | போராபோகோ | 0 (0) |
| 2004 | ஹர்போர்த் ரவுண் | 1 (0) |
| | மொத்தம் | 396 (207) |

தேசிய அணியில்

| | | |
|---|---|---|
| 1979-1986 | பிரேஸில் | 60 (22) |

(1982, 1986ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத் தொடர்களிலும் விளையாடியுள்ளார்.)

# திருகோணமலையில் உதைபந்தாட்டம் இம்மாத இறுதியில்

யாழ்ப்பாணம், டிசெ.7

'கொல்சிம்' நிறுவனத்தின் ஆதரவுடன் திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளின் 15,17,19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான 5 பேர் பங்கு கொள்ளும் (புல்சல்ட்) உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இந்த மாதம் இறுதியில் இடம் பெறவுள்ளது எனத் திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் எஸ்.யோகரட்ணம் அறிவித்துள்ளார். (த-23)

# பளார்!



அச்ரேக்கரிடம் நான் வாங்கிய அடியே என்னை இந்த அளவுக்கு உயர்த்தி வைத்துள்ளது என சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

இந்தியத் துடுப்பாட்டப் பயிற்சியாளர் அச்ரேக்கரின் 79ஆவது பிறந்தநாள் விழா இந்தியாவின் மும்பை கிரிக்கெட் சங்கத்தில் நடந்தது. இந்த விழாவில் கலந்து கொண்ட டெண்டுல்கர் பேசியவை வருமாறு:-

நான் பாடசாலையில் படித்த போது வான்கடே மைதானத்தில் நடந்த இறுதியாட்டத்துக்கு எங்கள் பாடசாலை தகுதிபெற்றது. அன்று நானும் எனது நண்பனும் அச்ரேக்கர் அளித்த பயிற்சியில் பங்கேற்காமல் புறப்பட்டோம்.

அப்போது எங்களை அச்ரேக்கர் பார்த்துவிட்டார். இதனால், கோபத்தோடு வந்த அவர் எனது கன்னத்தில் 'பளார்' என ஓங்கி அடித்துவிட்டார். அப்போது எனது கையில் வைத்திருந்த பெட்டி உருண்டு ஓடியது. அதை சிரமப்பட்டு நான் பிடித்தேன்.

அப்போது அவர் என்னிடம், ''ஆட்டத்தை நீ தினமும் மேம்படுத்தினால் ஒருநாள் உனக்காக மக்கள் கை தட்டுவார்கள்'' என்று தெரிவித்தார். இதை நான் பல முறை சிந்தித்துப்பார்த்தேன். இந்த சம்பவத்துக்குப் பின்னர் என் வாழ்க்கை முழுவதுமாக மாறிவிட்டது. - என்றார்.

# மெக்ராத்தை இலக்குவைக்கும் இந்திய வீரர் உமேஷ் யாதவ்

''ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளரான மெக்ராத்தான் தனது ஹீரோ'' என இந்திய அணியின் இளம் வேகப்பந்துவீச்சாளரான உமேஷ் யாதவ் தெரிவித்துள்ளார். இந்திய அணியின், வளர்ந்துவரும் இளம் வேகப் பந்துவீச்சாளர் உமேஷ் யாதவ் (24 வயது). சமீபத்தில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பந்துவீச்சில் அசத்திய இவர், மொத்தம் ஒன்பது விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதேபோல, ஒருநாள் தொடரிலும் சிறப்பாக விளையாடி வருகிறார்.

இதன்மூலம் இவர், அடுத்து நடக்கவுள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து உமேஷ் யாதவ் கூறியவை வருமாறு:-

சஹீர்கான் உள்ளிட்ட மூத்த பந்துவீச்சாளர்கள் இல்லாத நிலையில், இந்திய அணியின் வேகப்பந்துவீச்சில் நம்பிக்கை அளிப்பது மகிழ்ச்சியளிக்கிறது. சர்வதேச கிரிக்கெட் அரங்கில், ஆஸ்திரேலிய முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான மெக்ராத்தான் எனது ஹீரோ.

அவர் பந்துவீசும் முறை மற்றும் போராடும் குணம் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன. அவரைப்போலவே சிறப்பாகச் செயற்பட்டு, 'இந்தியாவின் மெக்ராத்' என பெயர் எடுக்க விரும்புகிறேன்.

தற்போது எனது கவனம் முழுவதும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் மீதே உள்ளது. வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆஸ்திரேலிய மைதானத்தில் எனது திறமையை நிரூபிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. இந்திய மண்ணில் விளையாடுவதைவிட ஆஸ்திரேலிய மண்ணில் விளையாடுவது சற்றுக் கடினமானது. சில மூத்த வீரர்களுடன், சில நாள்களுக்கு முன்னதாகவே ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொள்ள விருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இதன்மூலம் அங்குள்ள தட்பவெப்பநிலை, மைதானத்தின் தன்மைக்கேற்ப பந்துவீச கற்றுக்கொள்ளலாம்.


ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின்போது, எந்தவொரு வீரரையும் இலக்காகக் கொண்டு பந்துவீசப் போவதில்லை. எதிரணியின் ஒவ்வொரு விக்கெட்டும் முக்கியமானது. சக வீரர் வருண் ஆரோனுடன் இணைந்து பந்துவீசுவது மகிழ்ச்சி அளிக்கிறது. இவர், பயிற்சி மற்றும் போட்டியின்போது, நல்ல முறையில் ஒத்துழைப்பு வழங்குகிறார். கட்டாக்கில் நடந்த முதலாவது ஒருநாள் போட்டியில் கடைசிக் கட்டத்தில் துடுப்பாட்டத்தில் பொறுப்பாகச் செயற்பட்டு இந்திய அணிக்கு வெற்றி தேடித்தந்ததை மறக்க முடியாது. ஒரு விக்கெட் மீதமுள்ள நிலையில் நிதானமாக விளையாடி வெற்றி பெற முடிவுசெய்தோம். இதற்கேற்ப ஆரோன் ஒத்துழைப்புத் தந்தமையால், வெற்றிபெற முடிந்தது- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் மரண அவலம் பங்களாதேஷுக்கு; மீட்சியில்லா அடி



உமர் அக்மல்




பாகிஸ்தானுடனான மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதன் மூலம் பாகிஸ்தான் அணிக்கு எதிராக தொடர்ச்சியாக 22 ஒரு நாள் ஆட்டங்களில் தோல்வியைத் தழுவியது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது பாகிஸ்தான் அணி. முதலில் இடம்பெற்ற ஒரே ஒரு 'ரி-20' ஆட்டத்திலும் தொடர்ந்து இடம்பெற்ற மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் முதலிரண்டு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியிருந்தது. இந்த நிலையில் மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் ஆட்டம் சிட்டகொங்கில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி பங்களாதேஷின் சுழற்பந்து வீச்சுக்குத் திணறியது. பாகிஸ்தானின் மூன்று துடுப்பாட்ட வீரர்களைத் தவிர ஏனையோர் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பாகிஸ்தானின் முதலாவது இலக்கை ஓட்டமெதனையும் பெறாத நிலையில் முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே சரிக்கப்பட்டது.

அணித்தலைவர் மிஷ்பா உல் ஹக்- உமர் அக்மல் இடையே நான்காவது இலக்கிற்காக 94 ஓட்டங்கள் பகிரப்பட்டது. இந்தச் சிறப்பான இணைப்பாட்டத்தின் உதவியுடன் பாகிஸ்தான் அணி 46.1 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பாகிஸ்தான் அணி சார்பில் உமர் அக்மல் 57, மிஷ்பா உல் ஹக் 47, யுனிஸ் கான் 26, அப்ரிடி 9 ஓட்டங்களையும் உதிரிகளாக பங்களாதேஷ் அணி 16 ஓட்டங்களையும் வழங்கியது. பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் சுழற்பந்து வீச்சாளர் அப்துர் ரஷாக் 3 இலக்குகளையும், மகமதுல்லா 1.1 பந்து பரிமாற்றங்களில் 4 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது பங்களாதேஷ் அணி. இறுதி ஆட்டத்திலாவது வெற்றி பெற்று சொந்த மண்ணில் தொடர் தோல்வியைத் தடுக்க களம்புகுந்தது. இருப்பினும் முதலாவது பந்திலேயே ரமிம் இக்பாலின் இலக்கை இழந்தது. தொடர்ந்து இணைந்த நவீஸ்-மகமதுல்லா ஜோடி நிதானமாகத் துடுப்பெடுத்தாடி பாகிஸ்தானின் ஓட்ட இலக்கை விரட்டியது. 69 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் நவீஸ் 25 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து நுழைந்த அணித் தலைவர் முஷ்பிகுர் ரகிம் ஓட்டமெதனையும் பெறாது வெளியேறினார். அணி 72 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மகமதுல்லா 35, சகிப் அல் ஹசன் 9, நஷர் ஹுசைன் 3 ஓட்டங்களுடனும் வெளியேற பங்களாதேஷ் அணி 26.1 பந்து பரிமாற்றங்களில் 83 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த அலொக் கபாலி, ரீஷா பங்களாதேஷின் துடுப்பாட்ட போராட்டத்தைத் தொர்ந்தனர். இவர்களின் துடுப்பாட்டத்தினால் அணி 100 ஓட்டங்களைத் தாண்டியது. 7 ஆவது இலக்குக்காக 34 ஓட்டங்கள் பகிர்ந்த நிலையில் ரீஷா 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அத்துடன் பங்களாதேஷின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. தொடர்ந்து கபாலி 12, சன்னி 1 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி 38 பந்து பரிமாற்றங்களில் 119 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதன் மூலம் 58 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஹபீஸ், மலிக் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாகவும், தொடர் நாயகனாகவும் பாகிஸ்தானின் உமர் அக்மல் தெரிவானார். (15)

## உடல், உளப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:-

வடமாகாணத்தில்உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுக் கடமையாற்ற முடியாத நிலையில் 82 ஆசிரியர்கள் உள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

இந்த ஆசிரியர்களால் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்படும் நிலைமை உள்ளது. எனவே இந்த ஆசிரியர்களை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தி சேவையில் இருந்து ஓய்வு பெறச் செய்ய வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. (த-14)

## யாழ்.தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 11 மணி தொடக்கம் 12.15 மணிவரை இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது வடமாகாணக் கல்வியமைச்சின் பதில் செயலாளர் இளங்கோவன் போரட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

எதிர்வரும் திங்கட்கிழமை தொண்டர் ஆசிரியர்கள் வடமாகாண ஆளுநரை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். தொண்டர் ஆசிரியர்கள் தமது பெயர்ப்பட்டியலையும் மகஜர் ஒன்றையும் கொண்டுவரவேண்டும் என்று தெரிவித்தார். இப்போராட்டம் குறித்துப் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவிக்கையில்,

கடந்த 24 ஆம் திகதியும் இந்த கவனஈர்ப்புப் போராட்டத்தை நடத்தினோம். கடந்த 22 ஆம் திகதி வடமாகாண ஆளுநரின் செயலாளரிடம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி மகஜர் ஒன்றையும் நேரடியாகச் சென்று கையளித்தோம். அப்போது 2009 ஆம் ஆண்டுடன் யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் நிறுத்தப்பட்டுவிட்டது என அவர் கூறினார். இதனையடுத்து எமக்கான நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தருமாறு மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டோம் - என்றார். (த-311)

## மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டேன். முதல்வருக்கு எதிராக மக்கள் நடவடிக்கை எடுக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை'' என்று மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினரும், சுகாதாரக் குழுவின் தலைவருமான அப்புத்துரை மனுவல் மங்களநேசன் தனது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சபை முதல்வரின் பல லட்சம் ரூபா நிதி மோசடி இப்போது வெளிவந்துள்ளது. யாழ். நகரில் கடைகளை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கல், விளம்பரப் பதாகைகள் நிறுவுவதற்கு அனுமதித்தல் உள்ளிட்ட விடயங்களில் அவர் மோசடி செய்துள்ளார். நிதியைக் கையாடி இருக்கிறார். இந்த விடயம் தற்போதுதான் அம்பலத்துக்கு வந்துள்ளது.

முதல்வருக்கு எதிராக விரைவில் மாநகர மக்கள் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வரின் நிதி மோசடி குறித்து 'உதயன்' உள்ளிட்ட ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அப்போது நான் அதனை நம்பவில்லை. சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களினதும் ஆளும் கட்சியின் சில உறுப்பினர்களினதும் தூண்டுதலின் பேரில் ஊடகங்கள் இத்தகைய செய்திகளை வெளியிட்டிருப்பதாக அப்போது எண்ணினேன். ஆனால் முதல்வரின் நிதி மோசடி தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மையானவை என்று இப்போது எனக்குப் புரிகிறது.

முதல்வரின் நடவடிக்கைகள் எனக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. முதல்வர் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக என்னைக் கொச்சைப்படுத்தக் கூடிய செய்திகளை ஊடகங்களுக்கு வழங்கி வருகிறார்.

முதல்வரின் அடாத்தான இத்தகைய செயல்களால் நான் மிகுந்த மன உளைச்சல் அடைந்துள்ளேன். இதன் காரணமாகவே மூன்று மாத கால விடுமுறைக்கு விண்ணப்பித்துள்ளேன். முதல்வர் தொடர்ந்தும் மோசமாக நடந்துகொண்டால் எனது பதவியை விட்டு விலகவும் தயங்கமாட்டேன். ஆனால் நான் அங்கம் வகிக்கும் கட்சியில் இருந்து விலகும் எண்ணம் எனக்கு இல்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்னைக் கழுத்தைப் பிடித்து கட்சியை விட்டு வெளியேற்றினால் சுயேச்சையாக அல்லது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேரடி வழிப்படுத்தலில் எனது அரசியல் பயணத்தைத் தொடர்வேன் - என்றார்.

மங்களநேசனின் குற்றச்சாட்டுத் தொடர்பாக சபை முதல்வரின் கருத்தை அறிவதற்கு பலமுறை தொடர்பு கொண்ட போதும் அது சாத்தியமாகவில்லை. அவரது கைத்தொலைபேசிக்கு எடுக்கப்பட்ட அழைப்புக்களுக்கு அவர் பதிலளிக்கவில்லை. மாநகர சபைக்கு எடுக்கப்பட்ட அழைப்புக்களுக்கு ''முதல்வர் இங்கு இல்லை'' என்று நேற்று முழுநாளும் பதிலளிக்கப்பட்டது. (ங-14)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''பண்டா-செல்வா ஒப்பந்தம், அதன் பின்னர் அரசமைப்பின் 13ஆவது திருத்தம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள், ஒஸ்லோ பேச்சுக்கள் என்பவற்றில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கினோம். 13ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்த பின்னரான காலமும் தீர்வு விடயத்தில் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்று என்பதை அவர்களுக்கு வலியுறுத்தி இருக்கிறோம். அண்மையில் வெளிவந்த ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களையும் சுட்டிக்காட்டி எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி உள்ளோம்'' என்றார் சம்பந்தன்.

வடக்கு - கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் [illegible] என்ன [illegible] இருக்கின்றன என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று தாங்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையிலான 16ஆவது சுற்றுப்பேச்சு நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமானஇப்பேச்சு5.15 மணிவரைஇடம்பெற்றது.

சர்ச்சைக்குரிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக நேற்றைய பேச்சில் எதுவும் பேசப்படவில்லை.

நேற்றைய சந்திப்பின்போது அரசு தனக்குள்ள மிக முக்கிய மூன்று பிரச்சினைகள் தொடர்பாக விளக்கமளித்தது.

அடுத்த கட்டப்பேச்சு எதிர்வரும் 14ஆம் திகதி நடக்கும் என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

நேற்றைய சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் அக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தவிர்ந்த வழமையாகப் பேச்சில் கலந்துகொள்வோர் அனைவரும் பங்கேற்றனர். அத்துடன், அரச தரப்பில் சஜின் வாஸ் குணவர்தன நேற்றும் சமுகமளித்திருக்கவில்லை. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தப்பு...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதில் ஆர்வமாக ஈடுபடுகின்றார்கள். பல்கலைக்கழக நிகழ்ச்சிகளில் 'முற்றம்' கலைக்குழுவின் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. துணைவேந்தர் எம்மை அங்கீகரிக்கின்றார்; மரியாதை செய்கிறார். மாணவர்கள் கலைச் செயற்பாட்டில் ஈடுபடுவதால் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்கிறார்கள். இதுவே எமது துறைத்தலைவரின் நோக்கமாகவும் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகத்திற்குள் தப்பு இசையை நிலைநிறுத்துவதில் கிடைத்திருக்கக்கூடிய வெற்றி எமது பயணத்தில் ஒரு மைல்கல்தான்.

யாழ்ப்பாணத்துக்கு வரும்போது என்ன நினைத்தீர்கள்? இங்கே வந்த பின்னர் என்ன நினைக்கிறீர்கள்?

யாழ்ப்பாணம் வரவேண்டும் என்பது எனது கனவு. போர் நடந்த இடத்துக்கு வருகின்றோம் என்றபோது எனது மனதில் பல்வேறு எண்ண ஓட்டங்கள் ஏற்பட்டன. எனது கனவு பலித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் கால் பதித்துள்ளேன். இதற்கு தேவாண்ணாவுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும். அவரது திட்டமிடலாலும் முயற்சியாலும்தான் நான் இங்கு வர முடிந்தது. அடுத்து என்னை இங்கு அழைத்து பல்கலைக்கழகத்தில் சிறப்பான நிகழ்ச்சியை நடத்திய நிறுவனம் செயல் திறன் அரங்க இயக்கம் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகவும் நாட்டார் கலைகளை வளர்த்தெடுப்பதற்கான ஒரு குழுவை உருவாக்குவதற்காகவுமே என்னை அழைத்திருந்தார்கள்.

எமது கலை வடிவங்கள் யாழ்ப்பாணத்தில் கால் பதிக்க வாய்பேற்பட்டிருக்கிறது. சிறப்பாகவும் ஆர்வமாகவும் கற்றுக்கொண்டார்கள். சிறப்பான வரவேற்போடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ச்சியொன்றையும் நடத்தி யிருந்தோம். மகிழ்ச்சியாக இருக்கிறது.

**செவ்வி:- ஆனந்**

யாழ்ப்பாண மக்களின் வாழ்வு தமிழ் நாட்டு தமிழரை விட வித்தியாசமானதாக இருக்கிறது. குறிப்பாக உணவு, உடை, பெண்களின் உடை, பழக்கவழக்கங்களில் நிறைய மாறுபாடுகளைப் பார்க்க முடிகிறது.

வீடுகள் மலையாள மக்களது பாணியில் இருக்கின்றன. பனை மரக்காடுகளைப் பார்க்க முடிந்தது. வளமான இடமாக இருக்கிறது. இங்கு பேசுகிற தமிழைப் புரிந்து கொள்வது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. இராணுவப் பாதுகாப்பு, திருட்டுக்கள், இதனை விட பல்கலைக் கழகத்தில் ராக்கிங் என்ற விடயங்களைப் பார்க்கின்றபோது ஆச்சரியமாகவும் இருந்தது. இப்போதும் கூடவா ராக்கிங் செய்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது. எங்கள் ஊர்களில் எல்லாம் பல்கலைக் கழகங்களுக்கு வருபவர்கள் அந்த இரண்டு வருடங்களில் எவ்வளவைக் கற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வெறியோடு ஓடித் திரிவதைத்தான் கண்டிருக்கிறேன். இவர்களுக்கு எப்படி ராக்கிங் செய்ய நேரம் கிடைக்கிறது என்று எண்ணும் போது வியப்பாகவும் இருந்தது. அதேவேளை ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் ராக்கிங் போன்ற சிந்தனைகள் இருப்பது வேதனையும் தருகின்றது. சிந்தனை மாற்றம் வேண்டும்.

யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் கலையில் ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். புதியவற்றை அறியும் ஆர்வம் அதிகம் இருக்கிறது. பல்கலையில் நடை பெற்ற நிகழ்ச்சியில் சிறப்பாக செய்தார்கள். ஆறே நாள்களில் ஒரு மேடை நிகழ்ச்சியை அவர்கள் தந்திருப்ப தற்கு அவர்களிடம் காணப்பட்ட ஆர்வமும், அர்ப்பணிப்புமே காரணம். அது திருப்பதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

## கலந்துரையாடல்

**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்களுக்கான கலந்து ரையாடல் 11.12.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளும் படி அன்புடன் அழைக்கின்றேன்.**

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம். (11332)(6-19-8) அதிபர்

## துளிர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அறிவித்தல்

*முற்றிலும் இலவசமான உள சமூக, உள ஆற்றுப்படுத்தல் வாண்மைத்துவ சான்றிதழ் கற்கை நெறி*

பிரிவு : 09-10
கற்கைக் காலம் : 06 மாதங்கள்
விரிவுரைகள் : சனி, ஞாயிறு / புதன், வியாழன் (இரண்டு பிரிவு)
தகைமை : ஆகக் குறைந்தது O/L
கட்டணம் : இலவசம்

★ உங்களை நீங்கள் வளப்படுத்திக்கொள்ள இது நல்லதோர் சந்தர்ப்பம்.
★ ஆர்வமுள்ள இருபாலாரும் 20.12.2011 ஆம் திகதிக்கு முன்பு சுயவிவரங்களை அனுப்பிவைக்கலாம்.
★ நேர்முகத்தேர்வின் மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
★ வயது உங்களுக்கோர் தடையல்ல.
தற்போது எமது சமுதாயத்துக்கு அவசரமாகவும்- அவசியமாக வும் தேவைப்படுவது உள ஆற்றுப்படுத்தலே!
★ முக்கியமாக இளையோர்களின் மனங்களிலே நல்ல சிந்தனைகளையும் செயற்பாடுகளில் மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டிய கட்டாய நிலையொன்று உருவாகியுள்ளதை அனைவரும் அறிவீர்கள்!
★ ஆகவே இளைஞர், யுவதிகளின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டு அவர்களின் மனநிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதுமான "தன்னைத்தான் அறிதலும்-பிறரை அறிந்து கொள்ளலும்" என்ற கோட்பாட்டுக்கமைவாக உள ஆற்றுப்படுத்தல் (Counseling) கற்கை நெறிமூலம் அவர்களை வளப்படுத்தலாம் என்ற நம்பிக்கையோடு முதலில் துளிர்கள் நிறுவனம் களமிறங்குகின்றது!
★ ஆகவே உள ஆற்றுப்படுத்தல் வளவாளர்களே! சமூகநலன் விரும்பிகளே! சேவை நோக்கம் உங்களுக்கிருந்தால்...? தாமதியாமல் எங்களோடு இணையுங்கள். இளைய சமுதாயத்தைப் பாதுகாப்போம்! எங்கள் பாரம்பரியத்தையும் விழுமியங்களையும் பலப்படுத்த ஒன்றிணைவோம் வாருங்கள்!

இல. 30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

பணிப்பாளர்,
துளிர்கள் நிறுவனம்.

ஊடக அனுசரணை : உதயன்

## PERSONAL REQUIRED TO WORK IN A PROJECT

Long established firm of chartered Accountants with 30 years of experience requires the following personal to work in a project for a consultancy Assignment for an eight professional months in the North, East for which we are bidding.

| POSITION | QUALIFICATIONS | SPECIFIC EXPERIENCE |
|---|---|---|
| Audit Senior | Member of ICASI | 3 years of Internal Audit experience |
| Procurement officer | Professional | 5 years of procurement experience |
| Procurement Assistant | Bachelor Degree or equivalent | 2 years of procurement experience |
| Civil Engineer | Chartered or MSc | 5 years of post qualifying audit experience |
| Senior Technical Assistant | NDT or Equivalent | 10 years |

Please send your CV's in a Bio Data format by post or Email within 7 days of this advertisement to,
Please Write in and no Personal callers

V. Ariaratnam & Co
Chartered Accountants
Head office:
40, Ridgeway place
Colombo-04
Email: variam@sltnet.lk

Branch:
245, Kasthuriar Road,
Jaffna.
Email: ariam[illegible]

(11265)(6-19-8)

## தேவை

நாரத்தங்காய்கள் மொத்தமாக தேவை.
தொடர்பு: 0770279515

## Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

இறுதி ஆண்டில் ஓர் அரிய சந்தர்ப்பம் அனுமதிக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.
C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள் University of Madras Bsc பட்டதாரியினால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I 09.12.2011 :- 9 am or 3Pm Batch II 10.12.2011 :- 9 am or 3Pm
Batch III 11.12.2011 :- 9 am or 3Pm Batch Iv 14.12.2011 :- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

## விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

DMI COMPUTER EDUCATION

75% OFF

Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Diplima in Video Production & Multimedia
Master Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD



ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English பயிற்சிமையம்.
veta®
Experts in English Training

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு - 10/12/2011 9.30 am
பிரிவு - 12/12/2011 9.30 am

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி. (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0243 | கே. கே எஸ் வீதி. (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் கட்டிடம் Tel. : 021-224 1970 |

மலேசியவின் EVERSENDAI குழுமத்தின் கிளை நிறுவனம்

## தோஹா கட்டார்



வேலைவாய்ப்பு எண்ணிக்கை 100

நல்ல உடல் ஆரோக்கியமுள்ள 19 - 40 வயதிற்குட்பட்ட தமிழ் பேசத்தெரிந்தவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

## கை உதவியாளர்கள் (ஆண்)

சம்பளம் QR 600+ OT

கட்டார் ரியால் 1ரூபா. 31/
சேவை கால நிபந்தனைகள்

- சேவைக்கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் 02 வருடம்
- உணவு, தங்குமிடம், மருத்துவம் மற்றும் பிரயாண வசதி அனைத்தும் இலவசம்.
- வேலை நேரம் நாள் ஒன்றிற்கு 08 மணித்தியாலங்கள்.
- சேவைக்காலம்(ஒப்பந்தத்தின் அடிப்படையில்) முடிந்தவுடன் ஒரு வழி விமான டிக்கட் இலவசம்.
- ஏனைய சட்டதிட்டங்கள் கட்டார் நாட்டிலுள்ள தொழிலாளர் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது

HOTLINE
072 712 4415 / 072 312 4409

உங்கள் விண்ணப்பங்கள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படும்

AL/2541/Advt/16/11

## இக்ரா வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல: 6341/1 - 1/2, மருதபனை வீதி மருதானை, கொழும்பு-10. (ஆனந்தா கல்லூரிக்கு முன்னால்)
தொலைபேசி : 0094 115 544 333 தொலை நகல் : 0094 115 544 337
E-mail : info@ikralk.com
License No. 2541

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரபல தமிழ் வர்த்தகரான கிறிஸ்தோபர் பெர்னாண்டோ கடத்திச் செல்லப்பட்டார். கடத்திச் செல்லப்பட்டு ஒருநாள் கழிந்த நிலையிலும் இவர் தொடர்பாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லை எனகடத்தப்பட்ட தமிழ் வர்த்தகரின் குடும்பத்தினர் கவலையுடன் நேற்றுத் தெரிவித்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண, சம்பவம் தொடர்பாக இது வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் கூறினார்.

எனினும், பட்டப்பகலில் ஆயுதக் கும்பலால் மேற்கொள்ளப்பட்ட இக்கடத்தலைக் கண்டித்தும், கடத்தப்பட்ட வர்த்தகரை விடுவிக்கவேண்டுமென வலியுறுத்தியும் கொட்டாஞ்சேனை பிரதேச மக்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக குறித்த பகுதியில் வீதிப் போக்குவரத்து சில மணித்தியாலங்களுக்கு ஸ்தம்பிதமடைந்திருந்தது. அத்துடன், குறித்த பகுதியில் ஏற்பட்ட பதற்றத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் குவிக்கப்பட்டனர். (ஒ-சி)

இதேவேளை, தனது சிறிய தந்தை கடத்தப்பட்டுள்ளதால் மனமுடைந்து போயுள்ள கொழும்பு மாநகரசபை ஆளுங்கட்சி உறுப்பினர் அன்ரன் ரோயும், அவரது குடும்ப உறுப்பினர்களும் இதுவிடயம் குறித்து ஜனாதிபதியைச் சந்தித்து முறையிடத் தீர்மானித்துள்ளனர். (ஒ-சி)

## பொன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதைப்பது வெட்கக்கேடான செயலாகும்''

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

சரத் பொன்சேகாவை அரசு ஆரம்பத்திலேயே அடக்கி வாசித்திருந்தால் இன்று ஆட்டம் காணவேண்டிய நிலை வந்திருக்காது என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக அவரது குடும்பம் ஜனாதிபதி முன்னிலையில் மன்னிப்புக் கேட்க வேண்டுமே தவிர, சர்வதேசத்தின் முன்னால் அல்ல என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகரவிடம் கருத்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவை இன்று சிறையில் அடைத்து உலகளாவிய ரீதியில் அவரின் பெயர் பரவுவதற்கு அரசே வழிசமைத்துக் கொடுத்துள்ளது.

சிறைவைக்கப்பட்டதன் மூலம் மாபெரும் வீரர் என்ற அந்தஸ்தையும் பொன்சேகா பெற்றுவிட்டார். இந்த அந்தஸ்தையும் அரசே அவருக்குத் தேடிக்கொடுத்துள்ளது - என்றார்.

## பெரும்பான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். குறித்த கடையில் பொருள்கள் வாங்கிய பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த 4 இளைஞர்கள் கடைக்காரரைத் தாக்கியதால் ஏற்பட்ட முறுகல் நிலையே இராணுவத்தினர் தாக்குவதற்குக் காரணமாகி இருக்கிறது.

சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளின் வாக்குமூலப்படி தெரிவிக்கப்படுவதாவது:-

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கடையில் பொருள்களை வாங்கிவிட்டு 1,000 ரூபா தாளைக் கொடுத்துள்ளனர். கடைக்காரர் மீதியைக் கொடுத்துள்ளார். எனினும் தமக்கு மீதியாக மேலும் 500 ரூபா தரப்படவேண்டும் என்று அந்த இளைஞர்கள் கடைக்காரருடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

சிங்களம் பேசத் தெரியாது என்பதால், கடைக்காரர் தனது உறவினர் ஒருவரை அழைத்து சிங்களத்தில் அந்த இளைஞர்களுக்கு விலை விவரங்களை விளக்கச் சொல்லியிருக்கிறார். வந்தவர் நிலைமையை விளக்கியபோதும் அதனை ஏற்காத பெரும்பான்மையின இளைஞர்கள் அவருடனும் தகராறில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தல் அவரைத் தாக்கினர். இதனால் கோபமடைந்த அவருக்கும் அந்த இளைஞர்களுக்கும் இடையில் சிறிய கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அருகில் இருந்த இராணுவக் காவலரணுக்கு ஓடிச்சென்ற பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தம்மை கடைக்காரர்கள் தாக்குகிறார்கள் என்று முறையிட்டுள்ளனர். உடனடியாக அந்தப் பகுதிக்கு விரைந்த டசின் கணக்கான இராணுவத்தினர் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி இருந்தனர். அவர்கள் விசாரித்துக் கொண்டிருந்தபோதே அந்த இளைஞர்கள் நால்வரும் கடைக்காரரையும் மற்றவர்களையும் தாக்கி உள்ளனர்.

அப்போது கடைக்காரரின் உறவினர் ஒருவர் இராணுவத்தினருக்கு சம்பவத்தை விளக்கினார். அவர் கையை நீட்டிப் பேசுவதை அவதானித்த சிப்பாய் ஒருவர் கோபத்துடன் கையை நீட்டாமல் பேசும்படி எச்சரித்துள்ளார். உணர்ச்சி வசப்பட்டிருந்த இளைஞர் தொடர்ந்தும் அப்படியே பேச, அங்கிருந்த 10 இராணுவத்தினர் சேர்ந்து அந்த இளைஞனைக் கண்டபடி தாக்கி உள்ளனர்.

சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த அவர்கள், கடைக்காரரையும் அவரது உறவினரையும் அடிவாங்கிய இளைஞரையும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 4 இளைஞர்களையும், டிப்பரில் வந்து அங்கு நின்றிருந்த வேறு நால்வரையும் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இரவு 9 மணியளவில் இருதரப்பினரையும் சமாதானமாகப் போகுமாறு கூறி பொலிஸார் விடுவித்தனர் என்று தெரிகிறது. எனினும் இளைஞனைத் தாக்கிய குற்றச்சாட்டில் இராணுவத்தினர் எவரும் கைது செய்யப்படவோ விசாரணைக்கு உட்படுத்தப்படவோ இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-323-426)

## இரவல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், பிரிட்டனில் உள்ள பெல் பாட்டிஞ்ஜர் என்ற பரப்புரை நிறுவனத்தின் பேச்சாளர் எழுதிக் கொடுத்த உரையையே ஜனாதிபதி ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் வாசித்தார் என்று 'தி இன்டிப்பென்டன்ட்' என்ற நாளேடு எழுதியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு எழுதிக்கொடுத்த உரையைத் தவிர்த்து விட்டுத் தான் எழுதிக் கொடுத்த உரையையே ஜனாதிபதி வாசித்தார் என்றும் அந்த உரைக்கு நல்ல வரவேற்பு கிடைக்கப் பெற்றதாகவும் பெல் பாட்டிஞ்ஜர் நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார். அவரது கருத்து வீடியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தகவலில் உண்மையில்லை என்று ஜனாதிபதி அலுவலகத்தின் பேச்சாளரான பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னர் இலங்கை குறித்த வெளியுலக மதிப்பீட்டை தமக்குச் சாதகமாக மாற்றுவதற்காக இலங்கை அரசு பெல் பாட்டிஞ்ஜர் நிறுவனத்தைப் பணிக்கு அமர்த்தியது. கடந்த ஆண்டில் மட்டும் பெல் பாட்டிஞ்ஜரின் சேவைக்காக அரசு 3 மில்லியன் பவுண்டுகளை அளித்ததுள்ளதாக பி.பி.சி. செய்திச் சேவை கூறுகிறது. பிரிட்டன், ஐ.நா. மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அதிகாரிகளிடம் இலங்கை அரசு பற்றிய நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கான பிரசார வேலைகளை முன்னெடுப்பதும் இலங்கையின் பெயரைக் களங்கப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிர் நடவடிக்கைகளை எடுப்பதும், பெல் பாட்டிஞ்ஜர் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட முக்கிய பணிகள். (உ)

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் ஆர்ப்பாட்டம் நடக்கும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். மனித உரிமைகள் அமைப்பு, வெகுமக்கள் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் என்பன இணைந்து ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

காணாமற்போனோர் தொடர்பாகவும், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் பலமுறை போராட்டங்கள் நடத்தப்பட்டு, கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அவற்றுக்குக் காத்திரமான பதில் எதனையும் அரசு கொடுக்காது தட்டிக் கழித்து வருகின்றது. காலங்காலமாகத் தொடர்கின்ற இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, காணாமற்போனோர் பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தும் நோக்கோடு மனித உரிமைகள் தினத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நிகழ்த்தப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ங)

## Iஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 09 * 12 * 1966

விண்ணில் 08 * 12 * 2010

அமரர்

### திருமதி திபூசியஸ் டொறத்தி (கனகராணி)

ஆண்டொன்று ஆனதுவோ- அம்மா
எமைப் பிரிந்து சென்று
வாடிய மலர்களாய் - நாம்
மூச்சில் கலந்த உங்களை - என்றும்
மறவோம் அம்மா.

தாளையடி

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### தேவராசா கேதீஸ்வரன் (ஈசன்)

(முன்னாள் ஆசிரியர், யா/ வேலணை மத்திய கல்லூரி)



வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா கேதீஸ்வரன் நேற்று (06.12.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தேவராசா - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், மகாதேவன்- செல்லம்மா தம்பதியரின் மருமகனும், மகாதேவியின் அன்புக் கணவரும், சித்திரன், ஜெயந்தன், தயானந் ஆகியோரின் தந்தையும், திருமதி திருச்செல்வம் தேவராணி, திருமதி ரகுமார், அகிலராணி, இராஜேஸ்வரன் மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

315/5, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்: க.ரகுமார் (மைத்துனர்).

### திருமதி கமலாம்பிகை சன்முகலிங்கம் புறாடி

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை)



அரியாலையை பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை சண்முகலிங்கம் புறாடி நேற்று (06.12.2011) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எபுத்துச்செல்லப்படும்.

இந்த இறிவித்தலை உற்றறார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.58,ஆனந்தன்,
வடலி வீதி, அரியாலை.

தகவல்: குடம்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லப்பாக்கியம் விசுவலிங்கம்

(பாக்கியம்)



இமையாணன் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சங்கிலியன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் பின்னர் நியூசிலாந்து, ஒக்லாந்தில் வசித்தவருமாகிய திருமதி செல்லப்பாக்கியம் (பாக்கியம்) விசுவலிங்கம் 26.11.2011 இல் ஒக்லாந்தில் காலமானார்.

அன்னார் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும், காலஞ்சென்ற (Proctor) விசுவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து-பொன்னுப்பிள்ளையின் அன்பு மகளும், தங்கராசா, தர்மலிங்கம், கதிரவேலு துரைச்சாமி (Australia), முத்துராணி (Newzeland) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருந்ததியின் பெரியம்மாவும், விஜயகுமாரின் மாமியும், விதுஷன், அஸ்வினி, விக்னேஷ் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.11.2011 இல் நியூசிலாந்து ஒக்லாந்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விஜயகுமார் (மருமகன்-நியூசிலாந்து).

### V.R. கதிரேசு அருளானந்தசிவம்



[முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர், ஓய்வு பெற்ற ஆசிரியர்]

நயினாதீவு 8ஆம் வட்டாரம், அறுகந்தறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட V.R.கதிரேசு அருளானந்தசிவம் 03.12.2011 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கதிரேசு அன்னபூரணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கேசவன்-தில்லைவனம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் அபிமன்னின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.12.2011)புதன்கிழமை பொரளை ஸ்ரீஜெயவர்த்தனபுர மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (08.12.2011) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

532, பலாலி வீதி,
பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.

தகவல்:
V.R.K.இரத்தினசபாபதி J.P
விவாகப்பதிவாளர் (சகோதரன்)

## விற்பனைக்கு

நெற்கபே உபகரணங்கள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0771021521

## கார்கள் விற்பனைக்கு

NISSAN,TOYOTA புதிய/பழைய கார்கள் விற்பனைக்குண்டு

தொடர்பு:-0774484820,0777290638,
0772912375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் ஓர் புது உதயம்

# றோயல் அக்கடமி

அரசடி வீதி யாழ்ப்பாணம்

தரம் 06 முதல் O/L வரை

ENGLISH Medium Classes

தமிழ் மொழிமூல வகுப்புக்கள்

உங்கள் அபிமான ஆசிரியர்கள் மீண்டும் யாழ் நகரில்...

ஆரம்பம்: 10.12.2011 சனி காலை 7.30 மணி

நல்லூர் றோயல் அக்கடமியில் 10.12.2011 நண்பகல் 12.30 வகுப்புகள் ஆரம்பமாகும்.

யாழ் நகரின் No.1 கல்வி நிறுவனம்

புதிய

# நாவலர் கல்வி நிலையம்

புதிய கல்வியாண்டு 2012

தரம் 01 முதல் O/L வரை

தமிழ் மொழி மூல வகுப்புக்கள்

English Medium Classes

ஆரம்பம் 10.12.2011 சனி மாலை 3.00 மணி

புதிய அனுமதிகளை கிளிறுமுதல் பெற்றுக் கொள்ளலாம்.

மனிதம் போற்றிய அருட்பணியாளர்

# இதய அஞ்சலிகள்



அந்தோனிப்பிள்ளை

இம்மானுவேல் பயஸ் அடிகளார்

(முன்னாள் இயக்குநர் கரித்தாஸ் - கியுடெக்)

இன்னல் நிறைந்த மக்கள் வாழ்வில்

இடர் களைய சவால்கள் மத்தியில்

சமூகப்பணியாற்றி

அமரத்துவம் அடைந்த

அடிகளாருக்கு

எமது இதய அஞ்சலிகள்.



இயக்குநரும், பணியாளர்களும்,

கரித்தாஸ் - கியுடெக், யாழ்ப்பாணம்.


# NALRAVI SPOKEN ENGLISH

பயிற்சி நெறியைப் பற்றி:

- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்

யாருக்காக:

- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:

- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்



NALBON INSTITUTE OF ENGLISH STUDIES

We are born for your bond

Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004

Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)


# அகரம் கல்வி நிலையம்

மல்லாகம்

தரம் (6 - 11) வரை

தமிழ்/ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்

கல்வி உலகில் புதியதோர் பிரவேசம்

தரம் 6 முதல் O/L வரையான தமிழ் / ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

ஆசிரியர் குழாம் பற்றிய விவரம் நாளைய பத்திரிகையில்

அனுமதிகள் நாளை (08.12.2011) பி.ப. 3 மணி முதல்

- நிர்வாகம் -


# Cambridge Management College

க.பொ.த(சா/த) பரீட்சை, க.பொ.(உ/த) பரீட்சை முடித்து மற்றும் பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்கள்,வெளிநாடு செல்ல விரும்புபவர்கள். French, Deutch, Sinhala, and English ஆகிய மொழிகளை எளிமையான முறையில் பேச, எழுத கற்பிக்கப்படுகிறது.

புதிய பிரிவுகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. உங்கள் அனுமதிகளை பதிவு செய்து கொள்ளவும்.

23, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(கச்சேரி பஸ் நிலையம் பின்பாக)
தொ.பே. 021 222 1818 / 077 774 0999

தொ.பே: 021 222 1818/ 077 774 0999


# கடை வாடகைக்கு

யாழ். நகரில் அன்னை நாகா பூட் சிற்றிக்கு முன்பாக கடை ஒன்று வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-0778411347


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

அன்றும் இன்றும் என்றுமே தனித்துவம் வாய்ந்த நிறுவனம்.

கல்வியாண்டு 2012

ஆண்டு 6 தொடக்கம் O/L வரை

ஆரம்பம் 10.12.2011

(தரம் 6, 7,8 - 12.30, தரம் 9, 10, O/L - 10.30)

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | -விக்கி, ரூபன் | விஞ்ஞானம் | - தேவா, நிரோஜன், ஜெயவதனன் |
| ஆங்கிலம் | - விஸ்வநாதன், கஜன் | தமிழ் | - நர்த்தனன், நர்மிதா |
| வரலாறு | - பார்த்தீபன், சதீஷ் | சமயம் | - T.N. தரன், நர்மிதா |
| வர்த்தகம் | - நிஷாந்தன் | புவியியல் | - A.V. கர்ஜன் |

தூரத்து மாணவர்களின் நலன் கருதி சனி, ஞாயிறு வகுப்புக்கள் (8.30-2.00 மணி)

40 வருட கால அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்

- மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்
- கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த நிறுவனம்
- அனுமதிகள் இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

(C/6640)(6-19-8)

நிர்வாகி


# வலை

நவம்பர் மாத இதழ்

வெளிவந்துவிட்டது

குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் கிடைக்கும்.

தொகுப்பாசிரியர்: சி.என்.எச். சாள்ஸ்

யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

# Diploma in Mobile Phone Repairing

(Software & Hardware Repairing)

(பல புதிய விடயங்களுடன்)

(With Practical Electronic)

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - 09/12/2011

உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.

T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் கதிரவேலு



வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 8 ஆம் வட்டாரம் வேலணையை (சுருவில்) வதிவிடமாகவும், தற்போது கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் வசித்தவருமாகிய வைத்திலிங்கம் (மடுவார்) கதிரவேலு (05.12.2011) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும், சகுந்தலாதேவி, காந்தன் (K.S.A), சாந்தாதேவி, ஸ்ரீதரன் (K.S.A), கனகேஸ்வரன் (U.K), கருணாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், மகா தேவன், கீதா (India), சாந்தகுமார், சகுந்தலா, மஞ்சுளா (U.K), ரவிச்செல்வம் (France) ஆகியோரின் அன்பு மாமனும், நிரஞ்சன் (U.K), ஜீவரஞ்சன் (France), கமல ரஞ்சன் (Swiss), விமலரஞ்சன் (U.K), கேதீஸ்ரஞ்சன், அஜய் (India), சுதர்மராஜ், துலக்ஷி, பிரியங்கா, சர்மிகா, சுஜிந்தன், கிருபாலினி, அபிலாஸ், தனுஷ், சாருசன் (U.K), அபிஷன் (U.K), தர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கெங்காதரம், நாகம்மா, கனகசபாபதி மற்றும் குமாரசாமி, காலஞ்சென்ற இலட்சுமி, வேலுப்பிள்ளை மற்றும் செல்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, நாகம்மா, மாணிக்கம் மற்றும் மங்கையர்க்கரசி, புவனேஸ்வரி, கனகரெத்தினம், லலிதா தேவி, காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2011) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாந்தகுமார் (மருமகன்)
(இலங்கை மின்சார சபை)

55, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.


# YOGI'S (Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)

பண்டிகைக் கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாள்கள் மட்டும்.

2011 December 17, 18, 19 ஆம் திகதிகளில் மு.ப 10 மணி முதல் இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யும் 6 கேக் கலவைகள், 6 பேஸ்ரி வகைகள் (Pastries), 6 Sweets வகைகள். வகுப்புகளில் சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.

T.P: 0212222796, 0777164923. 75,அம்மன் ரோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/6498)(2,6,9)

ஓட்டோ விற்பனைக்கு

BAJAJ பச்சை நிற இல: NP.YExxxx ஓட்டோ விற்பனைக் குண்டு

T.P:- 0772912244


# Quick Learning Course

## Spoken English With Grammar

உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திறமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.

## Diploma In English (2 Month)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களம் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வகுப்புகள் நடைபெறும்

Weekday Courses Start on 12th of Dec.

Weekend Courses Start on 10th of Dec.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074
No. 6, Vairavar Kovil Road, Vaiavarpulliam Kulam Vavuniya. Tel: 024 3245287

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் எற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தவறான பாதையில் எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும் பரவாயில்லை. உடனே திரும்பி விடுங்கள்.

# புதன் பொய்கை A

உதயன் 07 டிசெம்பர் 2011 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு


# மாமனிதராவது எப்படி?

எங்கள் ஈழத்திரு நாட்டில், மாமனிதரைப் பூதக்கண்ணாடி வைத்துத் தேட வேண்டிய காலகட்டமிது.

இங்கு மாமனிதர் அமரர் 'இராஜாஜி' பற்றிய தகவல்களைக் கொண்டு இவரை உண்மையில் ''மாமனிதர்தான்'' என உரத்துக் கூறலாம். இருப்பினும் இவர் உயிரோடு இருக்கும் போது இவரை எவரும் மாமனிதர் என்று இனங் கண்டு கௌரவிக்கவில்லை. ஆனால், இன்று அவர் வாழ்வை நோக்கும் போது இந்த மனிதன் ஒரு மாமேதை, நாட்டுப்பற்றாளர், சிந்தனையாளர், சீர்பெற்ற சமய ஞானி, அப்பழுக்கற்ற அரசியல்வாதி, அஞ்சா நெஞ்சன், சட்டமேதை, இந்தியாவின் முதலாவது கவர்னர் இப்படி எழுத்தாளர், பேச்சாளர், கொள்கை வீரன் என்று புகழ்பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இவரை ஏன் நாம் மாமனிதர் என்கிறோம்? அதற்கென ஓரிரு உவமைகளைத் தொட்டுக் காட்டுகிறேன். இன்றைய இளைஞர் சமூகமும், நாடாளுமன்றத்தை அலங்கரிக்கும் நம்நாட்டு அரசியல்வாதிகளும் இதைப் படித்துப் பயன் பெற வேண்டும். இந்தியாவின் முதலாவது கவர்னராக இராஜாஜியை அன்றைய வெள்ளையரது ஆட்சி நியமித்து விட்டது. இதனை எவரும் எதிர்த்ததில்லை. கவர்னராகும் அத்தனை தகுதியும் அமரர் இராஜாஜிக்கு இருந்தது. இது ஒரு ஏகோபித்த முடிவு. வெள்ளையர்கள் ''வைஸ்ரோய்'' மூலம் இந்த முடிவை, நடைமுறைப்படுத்த எண்ணினர்.

ஒரு நாள் பகல் பத்து மணிக்கு, ''வைஸ்ரோயின்'' தூதுவன், அந்த நியமனக் கடிதத்துடன் இராஜாஜி தங்கும் சிறிய வீட்டை வந்தடைந்தான். அங்கு உள்ளே சென்ற அவனை வரவேற்று உபசரிப்பாரைக் காணோம். இந்தத் தூதுவன் வந்ததைக் கண்ட இராஜாஜியின் வீட்டு எடுபிடிப் பையன்; குளியல் அறையில் நின்ற இராஜாஜியிடம் தூதுவனின் வருகையை எடுத்துரைத்தான். இராஜாஜியோ எந்தவிதப் பதற்றமும் அடையவில்லை. பையனை நோக்கி, வந்த வரைச் சற்றுத் தங்கியிருக்கும் படி சொல்லி அனுப்பினார். அவனும் விவரத்தைப் புரிந்து கொள்ளாமல், அங்கே அவருக்காகத் தாமதித்திருந்தான். சுமார் பத்து நிமிடங்கள், கழித்து இராஜாஜி அங்கு வந்து, தான் துவைத்த தனது கதர் உடுப்புக்களை காயவிட்ட பின்னர் அவனிடம் கை நீட்டி அந்த நியமனக் கடிதத்தைப் பெற்றார். பெற்றதோடு நின்றுவிடவில்லை. அந்தப் பெருமகன்- தூதுவனைப் பார்த்து என் மீது குறை கொள்ளாதே- நீ வருகை தந்ததையும், எதற்கு வந்தாய் என்பதையும் நான் அறிவேன். குளியலறையில், எனக்கே உடமையான நாலு கதர் வேட்டி, நாலு கதர் கோட்டையும் உப்பிலே ஊறவிட்டேன். (ஊத்தைச் சோடாவில்) அதை நீரில் நெடு நேரம் ஊறவிட்டால், கதர் வேட்டி இத்துவிடும். குளியலறையில் நின்று சிந்தித்தேன்- எது முக்கியம்- எனது கடிதம் தாமதித்து எனக்குக் கிடைத்தால் பாதகமில்லை, ஆனால் உன்னோடு கதைத்துப் பொழுதைப் போக்கி விட்டால் என் உடமையான அந்த (4) கோட்டும், வேட்டியும் இத்துவிடும். எனக்குள்ளது அந்த உடைதான், எனக்கு வேறில்லை. எனவேதான் அதற்கு முதலிடம் கொடுத்தேன், என்னை மன்னித்துவிடு என்று கூறி இந்தக் கடிதத்தைப் பெற்று கையெழுத்திட்டார் இராஜாஜி. இந்தச் செயல் சிறியதோர் செயல் அல்ல. இதனை ஊன்றி உணர்ந்தால், பல உண்மைகள் புலனாகும். இராஜாஜி உடுப்பதோ கதர், அவற்றில் உள்ளதோ நாலு சோடி உடை, துவைப்பவரோ இராஜாஜி , பெறப்போகும் பதவியோ பார தத்தின் முதலாவ்து 'கவர்னர்' ஆளுநர்-பதவி, இவற்றை ஒரு சேர எடை போட்டால் இவர் மாமனிதரோ? அல்லவோ? என்பதை எவருமே முடிவு செய்யலாம்.

மற்றுமோர் சம்பவத்தை நினைவூட்டுகிறேன். இராஜாஜி அப்போது ஆளுநர் அல்லர். இவர் ஒரு புகைவண்டியில் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்கின்றார். முன்னுக்கு செல்வந்தர் வீட்டுச் சிறுவன் ஒருவன், எதிர்ப்புறமாக இருந்து பயணிக்கின்றான். அவன் துடியாட்டம் மிக்கவன். புகையிரத ஜன்னல் வழியாக எட் டிப் பார்த்துக் கொண்டு வம்புகள் செய்கின்றான். இதைப் பெற்றோர் கண்டும் காணா ததாகவும், அலட்சியமாக இருக்க இவன் கைகளை வெளியே நீட்டி பெரும் கலாட்டா பண்ணுகின்றான். அடுத்த புகையிரத நிலையம் அண்மிக்கப் போகின்றது. புகையிரத வேகமும் குறைகிறது. இப்போது இவனது விலை மதிப்பு மிக்க கைக்கடிகாரம் கழன்று விழுந்து விட்டது. பையன் அலறுகின்றான். பெற்றோர் செயலற்றுத் தவிக்கின்றனர். மற்றைய பயணிகளும் சங்கிலியை இழுத்து புகை வண்டியை நிறுத்த முற்படுகின்றனர்.

புகையிரதமோ ஓடிக் கொண்டே இருக்கிறது. எல்லோரும் பதறி நிற்க இராஜாஜி மட்டும் சாந்தமாக நிலை குலையாது யன்னல் வழி எதையோ பார்த்தபடி இருக்கிறார். யார் அப்பா இம்மனிதன் ஆடாமல் அசையாமல் வெளியே பார்த்தபடி இருக்கிறானே என மனந்திறந்து பேசுகிறார்கள்.

சற்று நேரத்தில் புகையிரதம் அடுத்த தரிப்பில் நிற்கிறது. இராஜாஜி இந்த இளைஞனையும் பெற்றோரையும் புகையிரத பிரதம பாதுகாப்பு அதிகாரிக்கு முன் நிறுத்தி, ''இங்கிருந்து 2400 அடி = 400 யார் தொலைவில் ஒரு பாலத்துக்கு அருகே வலப்புறமாக, இவனது கைக்கடிகாரம் விழுந்து விட்டது எடுத்துக் கொடுங்கள்'' என்றார். ''ஐயா! பெருமகனே! எப்படி ஐயா! இப்படிச் சொல்லுறீங்கள்'' என்றனர். இராஜாஜி சொன்னார் '' நீங்கள் அனைவருமே கலங்கி கலாட்டா பண்ணினீர்கள். நானோ எத்தனை மின் கம்பங்களை அந்த இடத்திலிருந்து இந்தப் புகையிரதம் கடந்தது என்று எண்ணிக் கொண்டே வந்தேன். கடந்த மின் கம்பங்களோ (40) ஒவ்வொன்றுக்கும் உள்ள இடை வெளியோ அறுபது அடி இப்போ புகையிரதம் கடந்த தூரம் (40X60) 2400 அடி அருகில் ஒரு பாலம், அங்கு போய், இந்த இளைஞனின் கைக்கடிகாரத்தை எடுத்து வாருங்கள்'' என்றார் இராஜாஜி. இப்போ சொல்லுங்கள் இவர் மாமனிதர் அல்லவா?

நம் நாட்டில் அற்ப பதவிகளுக்காய் பிடித்துக் காவடி தூக்கி, அமைச்சர்களிடம் அடி பணியும் இக்கால கட்டத்தில், தென்னகமாம் தமிழகத்தில், காலில் விழுந்து கை இலஞ்சம் கொடுத்து, பதவி பெறும் பரிதாப நிலையைக் காணும்போது அமரர் இராஜாஜி போன்றவரை நாடு என்றும் மறந்து விடக் கூடாது. அந்த மாமனிதர் எங்கே? நாமெங்கே? வரலாறே நீயே பதில் சொல்லு.

-விகடகவி-

# 1 தற்கொலை மரணங்களை தவிர்க்க முடியுமா?

மனித இனத்தைப் பெரும்பாலும் ஐந்து வகைகளில் மரணம் வந்து தழுவுகிறது.

1. இயற்கையாக மூப்பிலிருந்து ஏற்படும் இறப்பு
2. நோய்களினால் ஏற்படும் மரணம்.
3. எதிர்பாராமல் நிகழும் விபத்துக்களினால் ஏற்படும் மரணம்.
4. மனிதனை மனிதன் கொலை செய்வதால் நிகழும் மரணம்.
5. தற்கொலைகளினால் ஏற்படும் மரணம்.

இவைகளுள் கடைசியாகச் சொல்லப்பட்ட தற்கொலையானது ஏனைய மரணங்களைக் காட்டிலும் வேறுபட்டது, வித்தியாசமானது, சிக்கலானது, சர்ச்சைக்குள்ளானது.

மனிதன் மனிதனைக் கொன்றுவிடுவது சாதாரணமானது. ஆனால் மனிதன் தன்னையே மாய்த்துக் கொள்வது அசாதாரணமானது. மிருக உலகில் எந்த மிருகமும் தன்னை அழித்துக் கொள்ள வேண்டும் என்கின்ற உணர்வில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதில்லை என்பது உயிரியலாளர்களின் கூற்று. இயற்கையில் படைக்கப்பட்ட உயிர்களில் மனிதர்கள் மட்டுமே தற்கொலை செய்து கொள்கின்றனர். தற்கொலை முயற்சிகளில் இறங்குகின்றனர்.

மனிதன் பிறர் மீது காட்டுகின்ற குரோதங்கள், கோபதாபங்கள், வெறியுணர்வுகள், அழுக்காறு அகங்காரம் ஆகியவை கொலைச் செயலில் முற்றுப் பெறுகின்றன. இதே உணர்வுகளை மனிதன் தன் பக்கமே திருப்பினால் அவை தற்கொலையில் முடிவடைகின்றன. மனிதன் மண்ணுலகில் தோன்றிய காலமுதலாய்த் தம் இனத்தவரையே கொன்று வாழ்ந்திருக்கின்றான். ஆதாம் ஏவாளின் இரண்டு பிள்ளைகளுள் ஒருவனான காயின் என்பவன் தம் உடன் பிறந்த சகோதரன் ஆபேல் என்பவனைக் கொன்று மனித வர்க்கத்தின் முதல் கொலையாளியாக மனித வரலாற்றில் இரத்தக் கறை பதிந்த பக்கங்களைத் துவக்கியவன் என்ற தீராப்பழியைச் சுமந்து கொண்டிருப்பவனாக இருக்கின்றான் என்று புனித வேதாகமம் சித்தரிக்கின்றது.

அன்று முதல் இன்று வரையிலும் உலகெங்கிலும் மனிதன் மனிதனைக் கொன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றான். கொலை செய்யத் தூண்டும் வெறி அவனிடத்தில், இரத்தத்தில், எண்ணத்தில் அனிச்சை உணர்வாக இரண்டறக் கலந்திருக்கிறது. மனிதன் பல வெளிப்பூச்சுக்களைப் பூசலாம். ''தன்மானத்துக்காகப் போராடுகிறேன், குடும்ப கௌரவத்துக்காகப் போராடுகிறேன், தர்மம் தலைகாக்கப் போராடுகிறேன், சாதி இனத்துக்காகப் போராடுகிறேன், என் சமயத்தின் பெருமைக்காகப் போராடுகிறேன், சிலுவைக்காகப் போராடுகிறேன், பிறருக்காகப் போராடுகிறேன், கொடைக்காகப் போராடுகிறேன், என் கொள்கைக்காகப் போராடுகிறேன்'' என்று எந்தக் காரணங்களை வேண்டுமானாலும் சொல்லட்டும். இவையெல்லாம் வெளிப்பூச்சே. அடிப்படையில் மனிதன் கொலை வெறியுள்ள மிருகம் (An aggressive animal) என்பதை ஊன்றிப் பார்ப்போர் புரிந்து கொள்ளலாம்.

இந்த வன்முறையுணர்வு தன்னையே தாக்கி அழிக்கும்போது அது தற்கொலையாக மாறுகிறது.

உலகில் பிறப்பெடுக்கும் உயிர்கள் அனைத்தும் வாழவே விரும்புகின்றன. எந்த உயிரும் சாக விரும்புவதில்லை. மிதிபடுகின்ற புழுவும் தன்னை மிதிக்கின்றவனை கொட்டவே விரும்புகிறது. தற்காத்துக் கொள்வதும், தன்னுயிரை இன்னுயிராகப் பாவித்து வாழ்வதும் எல்லா உயிர்க்கும் இருக்கும் பொதுவானதொரு குணம். அவ்வுயிர்களில் மனிதர்கள் மட்டுமே, இயற்கை நியதிக்குப் புறம்பாக மனித இயல்புக்கும் புறம்பாகத் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றார்கள்.


எனினும் பல காரணங்களுக்காக மனிதர்கள் பலர் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றனர். தற்கொலை என்பது ஒரு மனிதன் தானாகவே (Voluntarily) வேண்டுமென்றே (Intentionally) தன் உயிரைப் போக்கிக்கொள்ளச் செய்யும் செயல் அல்லது முயற்சியே ஆகும். இறப்பைத் தரும் என்பதை அறிந்தே ஒருவர் 'நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ' செய்யும் முயற்சிக்குத் தற்கொலை எனப்பெயர். எனவே இந்தச்செயல் ஒரு மனிதன் தன் உயிரைப் போக்க மேற்கொள்ள முயலும் செயலுக்கும், அந்த எண்ணத்திற்கும் பொருந்தும். தனிப்பட்ட மனிதர்களும், ஒரு கூட்டமும், சில சமயங்களில் நாடுகளிலும்கூட இத்தகைய தன்னழிவுக்கு (Self Destruction) ஆட்படுவதைக் கண்டிருக்கிறோம். தன் உறுப்புக்களுக்கு மட்டும் பாதகம் விளைவிக்கும் செயலுக்கு அரை குறை தற்கொலை முயற்சி (Partial suicide) என்றும், குடிப்பழக்கம், புகைப்பிடித்தல், போதைப்பொருள் உட்கொள்ளுதல், வாழ்வுக்குத் தீமை விளைவிக்கும் நீண்ட காலப் பழக்க வழக்கங்கள் அனைத்திற்கும் நீண்ட காலத் தற்கொலை முயற்சி (Chronicsuicide) என்றும் பெயர்.


நி.தர்ஷனோதயன்,
வைத்தியர், மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை, மன்னார்.


மருத்துவ உலகிலும் சட்ட நடைமுறையிலும் தற்கொலை முயற்சிகள் இட்டுச் செல்லும் முடிவுகளின் அடிப்படையில் ''தற்கொலை'' என்றும் ''மரணத்தைத் தழுவிய தற்கொலை'' (Fatal suicide) என்றும், ''தற்கொலை முயற்சி'' (Attenpted suicide) என்றும் அல்லது ''மரணம் சம்பவிக்காத தற்கொலை'' (Non fatal suicide)' என்று பாகுபடுத்திப் பேசுவது வழக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பனைத் திறனால் உருவாக்கப்பட்ட புகைப்படங்கள்



இயற்கையாகவே சில விடயங்கள் நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு மிகவும் அழகாக இருக்கும். சில விடயங்கள் இயற்கையை மிஞ்சும் அளவுக்கு நம்மைப் பிரமிக்க வைக்கும். அந்தவகையில் மனிதனின் கற்பனை திறனால் உருவாக்கப்பட்ட இந்த ஓவியங்களைப் பார்க்கலாம்.








# கொழுப்பைக் குறைக்கும் செம்பருத்தி

மருத்துவ குணமுள்ள செம்பருத்தி பூவின் நிறம் மற்றும் அழகில் மயங்காதவர்களே இருக்க முடியாது. ஏராளமான நிறங்களில் ஒற்றை மற்றும் அடுக்கு செம்பருத்தி என பல வகைகள் உள்ளன. கண்ணைக் கவரும் இதன் சிவப்பு நிறத்தால் தோட்டத்தில் மற்ற செடிகளுக்கு இடையில் பளீரென அழகாக தோற்றமளிக்கும். வீட்டில் அழகுக்காகத் வளர்க்கப்படும் இதில் பல்வேறு மருத்துவக் குணங்களும் இருப்பது பலருக்குத் தெரிவதில்லை. செம்பருத்திப் பூக்கள் மற்றும் இலைகள், தலைமுடி வளர்ச்சிக்கும் தலையில் பொடுகு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வாகும். தேங்காய் எண்ணெயில் இதன் காய்ந்த மொட்டுக்களை போட்டு ஊற வைத்து தொடர்ந்து தடவி வந்தால் கூந்தலின் கருமை நிறம் பாதுகாக்கப்படும்.



# செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர்



செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியுமா என்பன குறித்த ஆய்வில் வானியல் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஐரோப்பிய விண்வெளிக் கழகம் இ.எஸ்.ஏ எக்ஸ்பிரஸ் விண்வெளி ஓடத்தை அனுப்பியுள்ளது. அதன் சக்தி வாய்ந்த கமரா செவ்வாய்க் கிரகத்தின் ஒளிப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளது. அதில் அந்தக் கிரகத்தின் வடகிழக்குப் பகுதியில் மலைகளில் ஐஸ்கட்டிகள் வளைவுகளாக உறைந்து புதைந்து கிடப்பது தெரியவந்துள்ளது. இவை பனிப் பாறைகளாகவும் இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

# சேற்றில் இருந்து மின்சாரம்



சேற்றில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை இஸ்ரேல் கண்டுபிடித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரேலைச் சேர்ந்த மின் உற்பத்தி நிறுவனம் ஜி.ஆர்.பி.எல். தரப்பால் கூறப்படுவதாவது:

ஆற்றுப்படுகையில் சேரும் சேறு, சகதியில் படிந்திருக்கும் மின்காந்த சக்தியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் கண்டறியப்பட்டுள்ளது.

மின் உற்பத்திக்கான இயந்திரங்களைப் பயன்படுத்த சுற்றுச்சூழலுக்கு ஆதரவான சூரிய மின்சக்தி பயன்படுத்தப்படும். இயற்கை எரிவாயு தயாரிப்பு உலை மூலம் சேறு, சகதியை வெப்பமூட்டுவதன் மூலம் அது வாயுவாக வெளிப்பட்டு டர்பைன்கள் வழியாக மின் உற்பத்தியாகும்.

சேறு, சகதி மட்டுமின்றி தண்ணீரில் நனைந்த குப்பைகளில் காணப்படும் சக்தியிலும் மின் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# தங்கத்தால் வடிவமைக்கப்பட்ட கார்



நாளுக்கு நாள் தங்கத்தின் விலை நடுத்தர மக்களால் வாங்க இயலாத அளவுக்கு அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் நாம் அனைவரும் அதிசயிக்கும் வகையில் டாடா நிறுவனம் தங்கத்தாலேயே கார் ஒன்றை வடிவமைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (7)

சந்திரன் மனோகாரகனாகச் செயற்படுவதால் 2 ஆம் எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் பொது ஜனங்கள் மத்தியில் மிகப் பிரசித்தியும் பிரபல்யமும் அடைவார்கள். மிகவும் புகழ் பெற்ற நல்ல மனிதர்களாகவும், மிகவும் கொடூரமான தொழில் செய்யும் தீவிரவாதிகளாகவும் இருப்பார்கள்.

உடல் பாகங்களாகிய கண், காது, கை, கால் என்பன இரண்டாக அமைந்து, மனம் மட்டும் ஒன்றாகி இரண்டு விதமாகக் குழப்பிக் கொண்டிருக்கும். பேச்சும் இரண்டு விதமாகவே இருக்கும். நல்லது என்று நினைப்பதை, மனம் கெட்ட கோணத்தில் சிந்தித்துப் பார்க்கும். மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமடையச் செய்யும். நாலும் தெரிந்தவர் என்று எல்லோராலும் பாராட்டப்படுவார்கள். மனோபலம் மிகுந்த சந்திர ஆதிக்கத்தினர் கற்பனை வளம் மிக்கவர்கள், தனி மனிதனாக பெரிய சாதனைகள் செய்வார்கள்.

தீவிரவாத குணம் உடையவர்கள். மனதைப் பலப்படுத்தியவர்கள். எதற்கும் பயப்படாது செயற்கரிய செயலைச் செய்வார்கள். உண்மையைவிட கற்பனையே இவர்களை அதிகம் கவர்ந்திழுக்கும். இயற்கையிலேயே மனபலம் குறைந்தவர்கள். தைரியம் குறைந்தவர்கள். பிடிவாத குணம் மிக்கவர்கள். மனோபலம் மிக்க சந்திர ஆதிக்கத்தினர். பல தன்மையுடையது சந்திரன். அதுபோல பிறரது ஊக்கம் பாராட்டுக்களே இவர்களைத் தைரியமுடையவர்களாக மாற்றும்.

கற்பனா சக்திகள் இவர்களுடைய உயிர்நாடி.பொதுவாக நம்பிக்கை குறைந்தே காணப்படுவார்கள். பிறரை எளிதில் நம்பமாட்டார்கள். எந்தக் காரியத்தையும் தாமே முன்நின்று செய்து முடிக்கவேண்டும், என்று எண்ணுவார்கள். எந்த ஒரு சிறு செயலையும் பிறரை நம்பி ஒப்படைக்க மாட்டார்கள்.தானே செய்தால்தான் மனம் திருப்தியடையும்.

வாழ்க்கையில் சம்பந்தமில்லாத பிரச்சினைகளுக்காகக் கவலைப்பட்டுப் பிறரையும் தம்மையும் குழப்பிக் கொள்வார்கள். இவர்களுக்குத் தொட்டதெல்லாம் சந்தேகமாயிருக்கும். மனதில் குழப்பம் குடிகொள்ளும்.

சந்திரனுக்கு வளர்பிறை, தேய்பிறை என்று இரண்டு வருவது போல, அமாவாசை-பௌர்ணமி போன்று இரண்டு விதமான நபர்களும் இந்த எண்ணில் பிறப்பார்கள். நல்லவர்களும் கெட்டவர்களும் நிறைந்து காணப்படுவார்கள். எதிர்ப்பவரைக் கண்டால் பணிந்து நடப்பதும், பணிபவரைக் கண்டால் எதிர்த்து விடுவதும் இவர்கள் வழக்கமாகும்.

இவர்களின் மனம் ஒருநிலையில் நில்லாது, அலைபாய்ந்து கொண்டிருக்கும். சிறிய தோல்விகளையும் இவர்கள் மனம் தாங்கிக் கொள்ளாது. எளிதில் காதல் வசப்படுவார்கள். தோல்வி கண்டால் உடனே தற்கொலை முயற்சிக்குச் சென்று விடுவார்கள்.

இவர்களில் இரத்தம், மூளை, உயிர்ச் சக்தி



அனைத்திலும் சந்திரனின்ஆதிக்க சக்தி குடிகொள்ளும். குடும்ப அமைதியின்மைக்கு இவர்கள் காரணமாவார்கள்.

பல கலைகளில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். பல தகுதிகள் இருக்கும். குற்றம் கண்டு பிடிப்பதிலும், குதர்க்கம் செய்து காரியம் சாதிப்பதிலும் கெட்டிக்காரர்கள். கலா இரசிகர்கள். தன்னை ஏமாற்ற நினைப் பவரை அடையாளம் கண்டுகொண்டு ஒதுங்கிவிடுவார்கள். நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யமாட்டார்கள்.

பெண் தன்மை அதிகமிருக்கும். சாந்தம், அன்பு நிறைந்தவர்கள். நிலையற்ற தன்மை உடையவர்கள். மாதத்தில் பாதி நாள்கள் வளர்ச்சி, பாதி நாள்கள் தளர்ச்சி என்று மாறிமாறி வரும் தன்மை உடையது சந்திரன். அதைப் போலவே இவ்வெண் நபர்களும் காணப்படுவார்கள்.

எண்ணங்களில் எப்போதும் ஊசலாட்டம் காணப்படும். பிறரைச் சார்ந்தே வாழ்க்கை நடத்துவார்கள். எடுத்த முடிவுகளிலிருந்து அடிக்கடி மாறுவார்கள். மனம், உணர்வுகள், ஆழ்மனம் போன்றவற்றை ஆள்வது சந்திரனின் ஒளிக்கிரணமே!

**சந்திர ஆதிக்கத்தினரின் உடலமைப்பு.**

சந்திரன் வளர்வதும், தேய்வதுமான மாயசக்தி படைத்த கிரகமாகும். இவர்களின் மனம் எப்போதும் ஒருவித மாயசக்தியால் கவர்ந்திழுக்கப்படக்கூடிய வசியக் குணமுடையது. மனதில் பயம் கலந்திருக்கும். கற்பனைகள் மனதைக் கவர்ந்திழுக்கும்.

**சந்திர ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் தொழில்கள்.**

தீவிரமாக உழைக்கக்கூடிய இவர்கள் கால்பதிக்காத துறைகளே இருக்காது என்று கூறுமளவுக்கு அனைத்துத் துறைகளிலும் சிறப்பாகச் செயல்படுவார்கள். அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளையும் வகிப்பார்கள்.

**சந்திர ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாள்கள்.**

1,10,19,28,7,16,25 ஆகிய தேதிகள் அதிர்ஷ்ட நாள்களாகும்.28 ஆம் தேதி மட்டும் பரிபூரண அதிர்ஷ்டம் தருவதில்லை. சந்திரனும், சனியும் ஆக 2ஆம் 8ஆம் சேர்ந்திருப்பதால் முழுமையான வெற்றிகள் கிடைப்பதில்லை. எந்தவொரு மாதத்திலும் வரும் 1,10,19 தேதிகள் அதிர்ஷ்ட தினங்களாகும். தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டிவரும் கூட்டு எண் 1 வரும் நாள்களும் அதிர்ஷ்டத் தினங்கள் ஆகும். மேற்கண்ட நாள்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும்.

**அதிர்ஷ்டமான நிறங்கள்.**

பச்சை, பச்சை கலந்த நிறங்கள், மஞ்சள், வெளிர் நீலம், வெளிர் பச்சை, பொன்னிறம், வெண்மை போன்ற வர்ணங்கள் சந்திர ஆக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

முத்து,வைடூரியம்,ஜேட், சந்திரகாந்தக் கல், டைகர்ஸ்டோன் போன்றவற்றை வலது கை மோதிர விரலில் தோலில் உரசும்படி அணிந்துகொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும்

**2 ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து**

இவர்கள் தங்கள் பெயரை அதிர்ஷ்டமாக அமைத்த பிறகு தாங்கள் குறியிடும் கையெழுத்தையும் வசியமுள்ளதாக மாற்றிக்கொள்ள வேண்டும். முழு வட்ட நிலவைப்போன்ற குறியீட்டுடன் வலப்புறமாகச் சுழித்து ஆரம்பித்த கையெழுத்து உலகையே தன் வசமாக்கும் மாயசக்தி படைத்தது.

**2 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

அளவுக்கு மீறிய கற்பனை சக்தியையும், ஆற்றலையும் பெற்றவர்கள். உயர்ந்த இலட்சியங்கள் கொண்டவர்கள். பயந்த குணமும், சாந்த சொரூபமும் கொண்டவர்கள். பெரிய ஆராய்ச்சியாளர் என்று பெயரெடுப்பார்கள்.எழுத்தாற்றல் மிக்கவர்கள் என்றே கூறலாம். **(தொடரும்)**

# இவர்கள் ஏன் இப்படி....?

*இனப்பிரச்சினை காரணமாக நாட்டில் ஓடிய இரத்த ஆற்றிலிருந்து வரும் நெடி இன்னும் போகவில்லை. அதற்குள் மதப்பிரச்சினையை உருவாக்கி இரத்த ஆறை ஓடச் செய்கின்ற முயற்சியில் அரசு இறங்கியிருப்பது போல் தோன்றுகின்றது.*

*யாழ்.நகரில் கடந்த சிவராத்திரியுடன் கால்பதித்த அரசின் அச்சியந்திரம், அண்மையில் அர சியல் தியேட்டருக்கு அருகாமையில் தனது அலுவலகத்தை மாற்றிக் கொண்டது. புதிய அலு வலகத்தின் திறப்பு விழாவும் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டது. அந்த அலுவல கத் தைக் கூட வடக்கின் நாட்டாமைதான் திறந்து வைத்தார்.நாட்டாமை என்றால் ''கலியாண வீட்டில் மாப்பிள்ளையாகவும் சாவு வீட்டில் பிணமாகவும் தானே இருக்க வேண்டும்'' (?!). அலுவலகத்தின் திறப்பு விழாவிற்கும் மதப் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம் ? மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறேன் என்று எண்ணுகின்றீர்களா ? திறப்பு விழாவில் தான் மதப்பிரச்சினையை கிளறி விட்டிருக் கின்றது அரசின் ஊதுகுழலுக்கு எழுத்து வடிவம் கொடுக்கும் அச்சியந்திரம்.*

**ஏன்... எதற்கு... எப்படி?**

*குறித்த திறப்பு விழாவிற்கு சர்வமதத் தலைவர்களும் அழைக்கப் பட்டி ருந்தனர். இருப்பினும் கிறிஸ்தவ, முஸ்லிம் பெரியார்கள் அந்த விழாவிற்குச் செல் லாமல் தப்பித்துக் கொண்டனர். இந்து அமைப்புக்களின் சார்பில் சகல நிகழ்வு களுக்கும் தலையைக் காட்டும் நல்லூரானும், ரத்வத்தையின் புண்ணியத்தால் யாழ் நகரின் மத்தியில் முளைத்த விகாரையின் பீடாதிபதியும் தமது வரவை அங்கே பதிவு செய்தனர். முளைத்த விகாரையின் பீடத்து குருவுக்கு வெள்ளைச் சீலை யால் பத்திரப் படுத்தப்பட்ட ஆசனத்தை செவ்வனே ஒதுக்கி அவருக்கு அந்த இடத்தை தாரை வார்த்தது ஏற்பாட்டுக் குழு. அவருக்கு அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பு மெச்சத்தக்க வகையில் இருந்தது.*

*உண்மையில் மதத் தலைவர்களுக்கு நாங்கள் எப்படி மரியாதை கொடுக்க வேண்டும் என்பதைப் பார்த்துக் கற்க வேண்டும். அடுத்து வந்த நல்லூரானை வரவேற்க வாசலில் எவரும் இல்லை. பாவம் வந்தவர் உள்ளே சென்றதும் அங் கிருந்த மனசு படைத்த ஒரு மனிதன் தனது சால் வைத்துண்டை கதிரைக்கு எடுத்து விரித்து விட்டு அவர் இருப்பதற்கு இடம் கொடுத்தான். இங்கு மதவழிபாடுகளில் இந்து மதத்துக்கே முக்கியத்துவம் கொடுக் கப் படுவது வழமை. மாறாக அரசின் கைப்பிள்ளைகளின் நிகழ்வாகையால் பிக்கு வின் பிரித் ஓதலுடன் நிகழ்வு தொடக்கப்பட்டது. அடுத்து இந்துமத அனுட்டானம் நடைபெறும் என்று எதிர்பார்த்தவர்கள் இலவு காத்த கிளி போல ஏமாந்தனர். சற்று நேரத்திலேயே தனக்குரிய மரியாதை இவ் வளவுதான் என்றறிந்த நல்லூரான் அங்கிருந்து யாரிடமும் சொல்லாமல் கோவித்துக் கொண்டு ''முருகன் பழநிக்குச் சென்றதைப் போல'' சென்றுவிட்டார். நிகழ்வுக்கு செல்லும் போது அதற்குரிய மரியாதை அங்கிருக்கும் ஏற்பாட்டாளர்கள் உரிய வ[illegible] யாருடையவை ? உரிய மரியாதை தருவார்களா ? என்று பார்த்துச் [illegible] அடுத்தது மதத்துக்கான சண்டைதான் உருவாகக்கூடும்.*

**-நக்கல் நரசிம்மன்.**

# உதயனை விமர்சியுங்கள்

விளம்பரம் ஒரு பத்திரிகையின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது. அதேபோல் சகல விடயங்களையும் உள்வாங்குவதிலும் முக்கியத்துவம் பெறுகிறது. கவிதையை ரசிப்பேன், கட்டுரையில் உணர்வேன், செய்தியில் அறிவேன். ஆகவே உனது பணி தொடரவேண்டும்.

**ந.இந்திராணி,**
**யாழ்.வைமன் வீதி.**

* * *

மேன்மேலும் வளர்ச்சி கண்டு வரும் உதயனே உன்னில் இன்னும் பல காத்திரமான ஆழமான விடயங்களை எதிர்பார்க்கிறோம். துணிச்சலோடு நடைபோடும் உனது ஆற்றல் மிக்க செயற்பாட்டில் சளைக்காமல் வீறுநடை கொண்டு முன் னேற வேண்டும்.

உதயனில் முகம் விழித்து விட்டுத்தான் அன்றாட வாழ்வுக்கு இடம் கொடுக்கிறோம். எமது நம்பிக்கை வீண்போகாமல் தொடர்ந்தும் உனது சேவையை ஆற்ற வேண்டும் என்றும் மனதார வாழ்த்துகிறோம்.

**செ.சுசிலாதேவி,**
**புத்தூர் பிரதேசசபை.**

* * *

யாழ்ப்பாணத்தில் முதல் தரத்தில் உதயன் இருப்பது வரவேற்கத்தக்கது. எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் உனது பணியில் [illegible]மல் இருப்பது பாராட்டத்தக்கது. உனது வளர்ச்சியில் ஆசிரியர் தலையங்கத்தின் கனதியான உரைநடையில் எமது பிரச்சினையை ஒவ்வொரு நாளும் எழுதி வெளிப்படுத்தும் உதயனே நீடூழி வாழ்க.

**தி.அப்பன்,**
**இராசபாதை வீதி, கோப்பாய்.**

* * *

நிமிர்ந்து நிற்கும் உதயனே, நீ ஒரு போதும் சரிந்து விடக் கூடாது. பல்சுவைகளுடன் வெளிப்படுகிறாய். ஒரு செய்தித் இரண்டு முறை வெளி வருவதைத் தவிர்க்கவும், அடுத்ததாக செய்தித் தலையங்கத்தில் ஊர்ப் பெயரினை வெளிக் கொண்டு வரப் பார்க்கவும்.

ஏனெனில் அவசரமான காலத்தில் பரபரப்பாக உலகத்தில் நாம் ஓடிக் கொண்டிருக்கும்போது செய்தித் தலையங்கத்தைப் படித்தவுடன்தான் உள்ளே படிக்கின்றோம். ஆகவே செய்தி தலையங்கத்தில் ஊர்ப் பெயரினைக் கொண்டு வருவது எனது வேண்டுகோள் ஆகும்

**பொ.கேதீஸ்வரன்,**
**வீரமாகாளி அம்மன் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

* * *

மக்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ப தொழிற்படும் உதயனே, சூரியனின் கிழக்கு திசை பிரகாசமாக இருப்பது போல் ஒளிர்கிறாய். சந்திரனின் முதுகு தெரியாதது போல் இருளில் ஒளியைப் போக்கி தற்பெருமை பேசாமல் உனது சேவையை ஆற்றி வருகிறாய்.

தமிழ் மக்களின் மனங்களில் உதயமாகும் உதயனே. மேன்மேலும் வளர்ந்து பல்துறைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து வளரவும்.

**ந.ஆச்சோ,**
**அராலி வடக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிரான எமது உள்ளங்கள் சூடு காணாமல் போய்விடுகிறது

குளிரான எமது உள்ளங்கள் சூடு காணாமல் போய் விடுகின்றன. இயல்பாகத் தன்னுடைய தேவைப்படி அணை கூட இதற்கு வழிவிட இனித் தடை போட யாருமில்லை என்ற போதுதான் இது மழையின் வாழ்க்கை ஆகும். குடை எதற்கு? நனைவோம்!

ஒழுக்காக சொட்டச் சொட்ட வீடு மழையைப் பிடிக்காது. நனைகின்றவர்களுக்கு மட்டும் கூடுதலாக நனைக்கின்ற போது நனையாத இடங்கள் வேண்டி நிற்கும் காத்திருப்பு எல்லா இடமும் உண்டு. கூடுதலான தேவையிருக்காத போது புறக்கணிப்பு எல்லாவற்றுக்கும் உண்டு. ஆனாலும் மழை வேண்டும். கூட இனி மின்னல் வரும். அறியாத மழை இது. இதற்கு மட்டும் பிறந்தநாளும் இல்லை. இறந்த நாளும் இல்லை. வாழ்ந்த நாள்தான் தொடர்கின்றன. எதுவும் தானாக வரும்போது இயல்பாகப் பார்ப்பவர்களுக்கும் கேட்கும் போது மட்டும் உயர்வாக நினைப்பவர்களுக்கும் மழை பிடிக்காது.

எந்த இடமானாலும் ஒரே மாதிரியாகப் பெய்யும் மழைக்கு மட்டும் தெரியவில்லை போலும் பிடிக்காதவர்களும் இருக்கிறார்கள் என்று. எத்தனை காலங்கள் இடைவெளிவிட்டு குறுகிய இரண்டு மாதங்கள் பெய்யும் மழைக்கும் மனசு இருக்கிறது. ஆனால் நீண்ட காலங்கள் காய்ந்து, குறுகிய காலங்கள் பெய்யும் மழையில் நனைய மனமில்லை. வானமே பார்த்து ரசிக்கும் தரையே மீண்டும் கேட்கும் மழை இது. பரந்த வெளியில் கருமேகம் சூழ்ந்து இருளில் மறைந்த போது கூடுதலாக மழை வரும் போது அண்ணார்ந்து மேலே வானத்தையும் பார்க்க முடியாது. கீழே தரையையும் பார்க்க முடியாது. ஆனால் கோர மழையில் வானம் குளிக்கும். மழை புத்தகத்தின் பக்கங்கள் இது- மரக்கிளை சிலிர்த்து ஞாபகம் ஊட்டுகிறது. மழை நின்றும் தூரலில் பச்சையான மரம், தெளிந்த வெண்பரப்பு மணல் பரவாயில்லை. நன்மை கிடைக்கும் போது தீமையையும் ஏற்றுக்கொள்ளத் கூடியதாகத்தான் மழை பெய்கிறது. உனக்கான இருப்பிடம் ஓடிச்சேரும்போது, கூடுதலாகப் பெய்த மழையில் கொஞ்சம் கூட தேங்கி விடாமல் போய்ச் சேர்ந்து விடுவாய். ஆனாலும் சில இடங்களில் இருந்து உன்னை நீயே கொண்டு செல்ல முடியாமல்தான் உள்ளது.

இந்த மழைத்துளி விழுந்து தெறிக்கும் சிதறல்களில் கலங்கும் வெள்ளத்தில் எனது முகம் பார்க்கிறேன். துண்டு துண்டாக உடைந்து விட்டது போதும் காண்பித்து மீண்டும் உடையாதது போல் காண்பிக்கும் மழை வெள்ளத்தின் ஏமாற்றுப்புத்தியில் என்னை உடைத்தாலும் பரவாயில்லை. ஓடும் வெள்ளத்தில் நின்று கொண்டு வெள்ளத்தைப் பார்க்கின்ற போது என்னை இழுத்துக்கொண்டு செல்வதுபோல் எனது பார்வையை ஏமாற்றும் வெள்ளத்தில் மீண்டும் மீண்டும் நிற்க விரும்புகிறேன். மழை பெய்யும்போது, கன மழை என்று தெரியாமல் ஓடும் வெள்ளத்தைப் பார்த்து கூடுதலாகப் பெய்திருக்கின்றது என்று அறிந்து கொள்ளும்போதுதான் தெரிகிறது பரந்து பெய்கிறது மழை என்று. உன்னை வேறோர் உருவில் அடையாளப்படுத்தும் திறமை உனக்கு மட்டும் இருக்கின்ற போதுதான் நான் தோற்றுப் போகின்றேன். தேடின நாட்களில் மட்டும் பிடிக்காததொன்றாக என் முற்றம் சலிப்படையும் வெள்ளத்தில் கிறுக்கல்கள் அங்கங்கே விழும். மழை வெள்ளத்தில் எல்லாம் நகர்வதுபோல் தெரியும். எனது காலினை தொடுவதற்காக காத்துக்கிடக்கும் வெள்ளத்தில் இறங்க மனமில்லாமல் வீட்டுக்குள் இருந்துகொண்டு மழை பிடிக்கிறது என்று எப்படி பொய் சொல்வது. வீட்டு யன்னல் ஊடே வெளியே கையை விட்டு மழைத்துளிகளைத் தட்டிப்பார்க்கின்ற ஆனந்தம். வெளியே வந்து எட்டிப்பார்க்கின்ற தூரத்தில் இருந்தும் கறுத்தக்குடை கொண்டு தடுக்க எப்படி மனம் வந்தது. ஊரே நனைந்து கொண்டு வானம் கறுப்பாக இருந்துகொண்டு எல்லோரையும் வெளியே வராமல் பூட்டிக்கொள்ளும் நடைமுறை இருந்தும் உன்னைத் தவிர்த்துக் கொள்ள முடியாத சிலருக்கு நனையத்தான் பிடிக்கிறது. அனுமதி கேட்காமல் பாய்ந்துகொண்டு விரைவாக வழிந்து சென்றடையும் பள்ளம் உள்ள நிலங்கள்... தாங்கிக்கொண்டு மழை நின்று காயாமல் பல நாள்கள் காத்துக்கிடக்கிறது. விருப்பத்துடனோ விருப்பமில்லாமலோ தெரியாததுபோலும், காய்ந்துகொண்ட நிலம் மழையை எதிர்பார்க்கின்றபோது விருப்பமில்லாமல் போய்விடாது. எல்லோரையும் நனைக்கும் மழைக்கு வித்தியாசம் தெரியவில்லை. மழையில் நனையும் எல்லோருக்கும் முழுவதுமாக நனையத் தெரியவில்லை. பக்கத்து ஊரில் கூடுதலாகப் பெய்கிறது என்று எனது ஊரில் அன்றைய தினம் பெய்ய மறுக்கும் மழைக்கு கொஞ்சம் கூட மனசில்லை என்று எனது மனம் சொல்லுகிறது. எனது ஊரினைத் தொடர்ந்து நனைக்கின்ற போது மழை பிடிக்காமல் கொஞ்சம் கூட மனசில்லை என்று எனது மனம் சொல்லுகிறது. எனது மனசுக்கு எதைத்தான் நிரந்தரமாகப் பிடிக்கிறது. வானத்துடன் கோபப்பட்டுத் தான்

## பித்தன்

மழை பூமி வந்து சேருகிறது என்று வானம் இருளானதும் நான் நினைத்துக் கொள்வதும், வெயிலிலும் மழை பூமி வந்து சேருகின்ற போது குழம்பிக் கொள்வதும். வானமான என் மனதில் அடிக்கடி நிகழ்வது போல் இந்த வானமும் இருக்கின்ற போது ஒத்துப் போக முடிகிறது.

மழையில் நனைந்து சளி பிடித்து காய்ச்சலில் படுக்கின்ற வரை உன்னில் நனைந்து ஈரலிப்பாகிறது எனது உடல். உன்னை ஞாபகப் படுத்த என்னை நனைக்கத்தான் உன்னால் முடிகிறது. நீ வீட்டுக்குள் வந்து என்னை வெறுப்பது உனக்கே தெரியாமல் போய் விடுகின்ற போது தான் ஊரையே சில வேளைகளில் அழித்து விடுகிறாய் போலும். மழை கால நாட்குறிப்பேட்டில் அடிக்கடி ஒரே மாதிரி எழுதுகிறாய். சொற்களைப் புரிந்து கொள்ள முடியாமல் அழித்து விடுகிறாய். உனக்கு எதிர்ப்புக் காட்டி நடை பிடித்துச் செல்பவர்களை அடையாளம் காட்டாமலும் உன்னைப் பிடித்தோ, பிடிக்காமலோ நனைந்து கொண்டு செல்பவர்களை மட்டும் இனங்காட்டி விடுகிறாய்.

# இருள் கவியும் வேளையில்...

மழை விடாமல் பொழிந்து கொண்டிருந்தது. ஏற்கனவே பள்ளங்களோடு விரிந்து கிடந்த வீதியெங்கும் வெள்ளம். அதைக் கிழித்துக் கொண்டு வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. வழமையை விடவும் நேரகாலத்தோடு சூரியன் தன் கடமைகளை முடித்த திருப்தியோடு மேற்கு வானுக்குள் தலையைப் புதைக்க தொடங்கியிருந்தான். வீட்டுக்கு போகும் அவசரத்தோடு விரைந்து கொண்டிருந்த அந்த நடுத்தர மனிதனை வீதிக்கு குறுக்கே கைகாட்டி மறித்தது ஒரு பிஞ்சு. அவனுக்கு ஒரு பத்து வயது இருக்கலாம். அவன் பிடித்திருந்த குடையையும் ஊடுருவிக் கொண்டு மழைச் சாரல் அவன் தேகத்தை ஈர மாக்கியிருந்தது. நடுங்கும் விரல்களால், 'சொப்பிங் பாக்' ஒன்றினால் சுற்றப் பட்ட கொப்பிகளை இறுகப் பிடித்திருந்தான்.

அவனைப் பார்த்ததுமே தன்னுடைய மோட்டார் சைக்கிளில் வருவதற்குத் தான் அவ்வளவு அவசரமாகக் கைகாட்டி சைகை செய்திருக்கிறான் என்பது அவருக்குப் புரிந்தது.

'பின்னால் ஏறிக் கொள்' என்று தலையை அசைத்து ஜாடை காட்டி விட்டு மோட்டார் சைக்கிளை இயக்கினார் அவர். அவரது அனுமதி கிடைத்ததுதான் தாமதம் உடனேயே துள்ளிக் கொண்டு ஏறினான்.

## கோணல் கோலங்கள்

"என்ர பிரண்ட் ஒருத்தனும் அங்கால நிக்கிறான். அவனையும் ஏத்துவிங்களோ?"

தான்மட்டும் கிடைத்த சந்தர்ப்பத்தை அனுபவிக்காமல் அதை தன்னுடைய நண்பனுக்கும் பெற்றுக் கொடுத்து விட வேண்டும் என்ற எண்ணம் அந்தச் சிறுவனை வெட்கத்தை விட்டு உதவி கேட்க வைத்தது. வந்தவரும் மறுபேச்சுப் பேசாமல் சரி என்பது போல தலையாட்டினார். ஏறி இருந்த மாணவன் "உன்னையும் வரட்டாமடா" என்று குரல் கொடுக்க, மழைக்கு கடையோரமாக ஒதுங்கி நின்ற இன்னொரு சிறுவனும் ஓடிவந்து ஏறிக்கொண்டான்.

மோட்டார் சைக்கிள் விரைந்து கொண்டிருந்தது. அதனோடு போட்டி போடுவது போல மழையும் தன்வேகத்தை அதிகரிக்கத் தொடங்கியது. எனினும் அதையெல்லாம் பொருட்படுத்தாதவர்கள் போல வீதியின் இரு புறத்திலும் கூட்டம் கூட்டமாக இளவயதினர் சென்று கொண்டிருந்தனர். செருப்புமிட்டு, குடை பிடித்து, புத்தகமும் கொண்டு செல்பவர்களைப் பார்க்கையிலேயே எங்கேயோ தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் வகுப்புகளை முடித்து விட்டு செல்கின்ற மாணவர்கள் என்பது சொல்லாமலே புரிந்தது. தரம் 6 இல் இருந்து தரம் 11 வரையில் கற்கும் மாணவர்கள், தத்தம் சகபாடிகளுடன் இருட்டுவதற்குள் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்ற அந்தரத்துடன் விரைந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் மாணவிகள். அவர்களின் முகத்தில் மற்றவர்களை காட்டிலும் அச்சத்தின் ரேகைகள் அதிகமாக இருந்தன.

தனக்குப் பின்னால் இருந்த சிறுவர்களிடம் அந்த மனிதர் பேச்சு கொடுக்கத் தொடங்கினார்.

"தம்பியவை! நீங்களும் இவையின்ர ரீயுசனோ?"

கேள்விக்கு இருவரும் கோரஸாக ஓம் என்று பதிலளித்தார்கள்.

"அப்ப ஏன் எல்லாரும் நடந்து போறீங்கள்.பஸ்ஸில போகலாம் தானே?" அவரும் விடாப்பிடியாக கேள்வியைத் தொடர்ந்தார்.

"வழமையா பஸ்ஸில தான் போறனாங்கள். இண்டைக்கு மழைதானே . பஸ்ஸில ஒரே கிறவுட். அதால எங்களை ஏத்தாமல் போறாங்கள்.நிண்டு நிண்டு பாத்தும் நேரம் போட்டுது. அதால அச்சு [illegible] மட்டும் பஸ்ஸில போகச் சொல்லிப்போட்டு எங்களை நடந்து வீட்டை போகச்சொல்லி சேர் அனுப்பிட்டார்". நடந்தவற்றை பின்னாலிருந்த சிறுவன் சொல்லி முடித்தான். ஆனால் மோட்டார் சைக்கிளில் சென்றவருக்கு இன்னும் சில தகவல்கள் தேவைப்பட்டிருக்க வேண்டும். அதனால் அவரது கேள்விகளும் அவற்றுக்கு பின்னாலிருந்த மாணவர்களின் பதில்களும் தொடர்ந்தன.

" நீங்கள் இரண்டு பேரும் எங்க போக வேணும்?"

"நீர்வேலிச் சந்திக்கு"

"உங்கட ரியூசனில இருந்து வீட்டை நடந்து போக எவ்வளவு நேரமாகும்?"

"நடந்தோ? ஒரு மணித்தியாலத்துக்கு மேல வேணும்.ஆனா நாங்கள் இப்பிடி உங்களை மாதிரி மோட்டர் சைக்கிள்ல வாறவையிட்ட கேட்டு அவையின்ர மோட்டர் சைக்கிள்ல போறதால 20 நிமிஷத்தில போடுவம்".

"பொம்பிளைப் பிள்ளையளையும் நடந்து போகச்சொன்னவையோ?"

"ஓம்"

"இப்பிடி பிரச்சினையெண்டால் நீங்கள் சைக்கிள்ல வந்து போகலாமே?"


"முந்தி கனபேர் சைக்கிள்ல தான் வாறனாங்கள்.ஆனா இப்ப றோட்டு திருத்திறதால ஒரே அக்ஸிடெண்ட் நடக்குதெண்டு வீட்டுக்காரர் சைக்கிள்ல ஒருத்தரையும் விடுறேலை."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தபடி, ஒரு பக்கமாகச் சாய்ந்தபடி மினிபஸ்ஸொன்று வெள்ளத்தை வாரியடித்தபடி கடந்து போனது.

அந்த இரு மாணவர்களையும் அவர்களது வீடுகளுக்கு அண்மையில் இறக்கி விட்டு அவர் தன் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளைச் செலுத்தினார். ஆனால் போகும் வரையிலும் 'நடந்து வந்து கொண்டிருந்த மற்றப்பிள்ளையள் பிரச்சினை ஒண்டுமில்லாமல் வீட்டை போய்ச் சேர்ந்திருக்குங்களோ?' என்ற யோசனையே அவரைச் சுற்றி சுழன்ற வண்ணமிருந்தது. மிக அண்மையில் நடந்த இந்தச் சம்பவம் தனியார் கல்வி நிறுவனங்கள் தங்கள் மாணவர் மீது காட்டுகின்ற அக்கறையை கேள்விக் குள்ளாக்கியுள்ளது. சம்பவத்தில் வருகின்ற ரியூசன் கட்டுப்பாடுகளுக்கும், ஒழுக்கத்திற்கும் பேர் போனதாக சொல்லப்படுகிறது. அந்த நிறுவனத்தில் கூட மாணவர்கள்- குறிப்பாக பதின்ம வயது மாணவிகள்- பொழுது பட்ட வேளையில் ஏறக்குறைய நாலைந்து கிலோ மீற்றர்கள் நடந்து போகுமாறு பணிக்கப்பட்டிருக்கிறார்கள். மிக மோசமான கலாசார பிறழ்வுகள் பெருகியுள்ள சூழலில் இவ்வாறு மாணவர்களை இருள் நேரத்தில் நடந்து பயணிக்க அனுமதிப்பது சரியான செயலா? வழமைக்கு மாறாக மாணவர்களுடைய போக்குவரத்து ஒழுங்கில் மாற்றங்கள் நிகழ்ந்தால்- பஸ் ஒழுங்கீனங்கள் போன்றன- அதுபற்றி பெற்றோருக்கு ஏதோ ஒருவழியில் தெரியப்படுத்தி பாதுகாப்பான முறையில் மாணவர்களை அவர்களின் இருப்பிடத்துக்கு சேர்ப்பிப்பது தனியார் நிறுவனங்களின் கடமை. தனியே மாதாந்தக் கட்டணங்களை வசூலித்தலும், மாணவர்கள் ஓய்வெடுக்க முடியாதபடி அடுக்கடுக்காக வகுப்புகளை நடத்துவதோடும் தம்முடைய கடமை முடிந்து விட்டது என அவர்கள் எண்ணக் கூடாது. அடைமழை போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் இருள் கவியும் மட்டும் வகுப்புகளை நடத்தியே தீருவோம் என தனியார் கல்வி நிறுவனங்கள் அடம் பிடிப்பதால் மாணவர்களுக்கே பாதிப்பு. அது சில வேளைகளில் பாரதூரமான விளைவுகளுக்கும் அடிகோலி விடலாம்.

## ஓடுகாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழில் மிகு வாழ்வின்
மனம் கவர் வர்ணங்கள்

Nippolac®

இப்போது
யாழ் மண்ணில்



Carnation Red (int) | Golden Yellow (int) | Golden Brown | Steel Gray | Marble Gray




லீட்டர்
ரூ. 675/- முதல்

சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவாக நம் நாட்டில் தயாரிக்கப்படும்

முதற்தர 1 பெயின்ட்

யாழ் விநியோகஸ்தர்
லக்ஷ்மி டிஸ்ரிபியூட்டர்ஸ்
தொலைபேசி: 021 222 4291, 021 567 6733

சிலிகோன் கோர்டிங்ஸ் (ப்ரைவட்) லிமிட்ட்
நிபொலெக் டவர்ஸ்: இல.69A, புத்கமுவ வீதி, ராஜகிரிய.
தொலைபேசி: 011-4356900-8 தொலைநகல்: 011-4356909
மாத்தறை அலுவலகம்-இல.67, குமாரதாச மாவத்தை, மாத்தறை.
தொலைபேசி: 041-4933530-8 தொலைநகல்: 041-4633559
www.nippolacpaints.com

UTHAYAN
Guest House - I



Spend your Holidays with homely hospitality in Jaffna. Located 1 KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.



No. 392/6, Navalar Road, Jaffna.
021 - 2225660, 021 - 5677608, 071 - 5 36 36 36

பாதணி உலகில் பதிந்துவிட்ட பெயர்
Bata





உறுதி • நவீன வடிவங்கள் • அழகிய நிறங்கள்

லக்சுமி ஓகனைஷேசன்
Lukshmee Organization
(வட மாகாண ஏக விநியோகஸ்தர்)

தொடர்பு : 021 222 7167

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org